





பண்டித நேரு நூற்றாண்டு நிறைவு விழாவினையொட்டி சென்னை கிண்டி நேரு சாலைச் சந்திப்பில் உள்ள பண்டித நேரு திருவுருவச் சிலைக்கு மேதகு ஆளுநர், மாண்புமிகு முதல்வர் மற்றும் அமைச்சர் பெருமக்கள் மாலையணிவித்தார்கள். (14.11.89)

# இந்த இதழில்...


பண்டித நேரு நூற்றாண்டு நிறைவு விழா ... 2

சென்னையில் டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிடம் ... 4

வீரத் தமிழன்னை டாக்டர் எஸ். தருமாம்பாள் ... 9

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் நலத்திட்டப் பணிகள் ... 13

வேளாண்மை உற்பத்தியில் முன்னேற்றம் ... 17

உடல்நலம் காக்க உதவும் திட்டம் ... 21

மதுரை மாவட்டத்தில் தொழில் வளர்ச்சி ... 22

தமிழக அரசு திரைப்பட விருதுகள் வழங்கும் விழா ... 24

இலவச அரிசி வேட்டி சேலை ... 29

இயல் இசை நாடக மன்றமும் மாணவர்க்கு உதவித் திட்டங்களும் ... 30

மகளிர் நலனில் கூட்டுறவு ... 33

தொழிலாளி முதலாளி ஆனார் ... 35

பட்டின் பெருமை ... 38

தடய அறிவியல் ... 41

மூதறிஞர் இராஜாஜியின் வாழ்க்கைக் குறிப்புகள் ... 45



**தமிழரசு**

திருவள்ளுவர் ஆண்டு 2020

சுக்ல ஆண்டு - கார்த்திகை - 16

மலர்: 20 இதழ்: 11

1-12-1989




## பாரதியின் நோக்கு நிமிர்ந்த நோக்கு

-மாண்புமிகு முதல்வர் கலைஞர்

"உரை கூற ஒரு புலவர் அருகில் இல்லாவிடில் பழந்தமிழ் நூல் படித்திட முடியாதென்ற நிலையிருந்தபோது, பசு மரத்தாணிபோல் நெஞ்சத்தில், பாய்ந்து பதியும் கருத்துக்களை எளிய தமிழ்ச் சொற்களால் பாடிக்காட்டி, அவ்விதமே தமிழகத்தைப் பழக்கிய பெருமை பாரதிக்கு உண்டு. சுத்தியை உச்சி மட்டும் தூக்கிச் சுர்ச்சனை புரியும் படைத் தளபதியின் கட்டளைக்குப் பணிந்து களம் செல்லும் வீரர்களைப் போல்-பாரதியின் கவிதை மொழி கேட்டுப் பட்டாளத்து வீரரெல்லாம் தோற்றுப் போகும் பான்மையிலே பரங்கியரை எதிர்ப்பதற்கு அணி திரண்ட தமிழகத்துக் காட்சிதனை மறைப்பதற்கு யாரால் முடியும்? எவரால் முடியும்?

கனல்கொட்டி எழுதினார்-அனல் தெறிக்கப் பேசினார். துள்ளிவரும் வேல்போல-ஆவேசத்தை அள்ளிவரும் வாள்போலச்-சொல்லடுக்கிச் சூடேற்றிக் கவிதைகளைச் சுழல வைத்தார். அந்நியரின் தலை சுழல ஆட்டி வைத்தார்.

நெருப்புமிழும் நெஞ்சத்துடன் பகைவர்களை எதிர்த்தபோதும், நெறியற்ற சொல் ஒன்றும் அவர் எழுத்தில் இருந்ததில்லை; மூண்டுவிட்ட விடுதலைப் போர்க் கோலத்திலும் பூவிதழாம் நல்ல தமிழ் எடுத்துப் போர்முரசில் சூட்டிவிடப் பாரதி தவறியதில்லை.

பூமிக்கு எழுதுவது
புகழுக்கு எழுதுவது

என்ற நிலை மாற்றி நாட்டுப் போருக்கு எழுதிய கவி வீரன்.

மறைந்த மகாகவிக்கு நாம் செலுத்தும் மரியாதை அவர் தந்த கருத்துக்களை மறக்காமல்....மறைக்காமல் இருப்பதுதான்!"

127082
சென்னை-600 008.



# பண்டித நேரு நூற்றாண்டு நிறைவு விழா!

பண்டித நேரு நூற்றாண்டு நிறைவு விழா, 14-11-89 அன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில் சீரும் சிறப்புமாக நடை பெற்றது.

விழாவையொட்டி, வள்ளுவர் கோட்டம் மின்விளக்குகளால் அலங் கரிக்கப்பட்டிருந்தது. மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த மேடை யில், பண்டித நேருவின் திருவுருவக் 'கட்-அவுட்' வைக்கப்பட்டிருந்தது. நாயன இசையுடன் விழா நிகழ்ச்சி தொடங்கியது.

தமிழக அரசின் தலைமைச் செய லாளர் திரு. எம்.எம். இராஜேந்திரன் இ.ஆ.ப. அனைவரையும் வரவேற் றுப் பேசுகையில், "பண்டித நேரு அவர்கள் மிகச் சிறந்த ஜனநாயக வாதியாகத் திகழ்ந்தார். சமயச் சார் பின்மை, சமதர்மக்கொள்கை, பெண்கள் முன்னேற்றம், குழந் தைகள் நலம் ஆகியவற்றிற்காக உழைத்தார்." என்று குறிப்பிட் டார்.

சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் ஆ. ஞானம் அவர்கள் பேசுகையில், "பண்டித நேரு மாபெரும் சகாப்தம். அவர் ஒரு பெரிய தேசாபிமானி. அவரது ஒரே கனவு புதிய இந்தியாவை - நவீன இந்தியாவை உருவாக்க வேண்டும் என்பதுதான். மக்களிடையே கல்வி அறிவு, அறிவியல் உணர்வு பரவ வேண்டும் என்று விரும்பினார்; ஆர்வங் கொண்டார்," என்றார்.

திரு. டி. செங்கலவராயன் அவர்கள் பேசுகையில், "உலக நாடுகள் விடுதலை பெறக் குரல் கொடுத்தவர்-வழிகாட்டியவர் நேரு. ஜனநாயகத்திற்கு அஸ்திவாரமிட்ட வர்; பொருளாதார அபிவிருத்திக் காக ஐந்தாண்டுத் திட்டங்களை உரு வாக்கி நிறைவேற்றியவர் நேரு" என்றார்.

முன்னாள் மத்திய அமைச்சர், திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் பேசுகையில், "அரசியல் கருத்து வேறுபாடுகளைக் கடந்து முதல்வர் இந்த விழாவில் கலந்து கொண்டு சிறப்பிப்பது அவரது பண்பைக் காட்டுகிறது" என்றார்.

மாண்புமிகு செய்தி-தொழி லாளர் துறை அமைச்சர் திரு பொன். முத்துராமலிங்கம் அவர்கள் பேசுகையில், "பண்டித நேரு வேற்றுமையில் ஒற்றுமை காண விரும்பினார். நவீன இந்தியாவை உருவாக்க விரும்பி, அதற்காக உழைத்தார். அவர் மிகப் பெரிய ஜனநாயகவாதியாகத் திகழ்ந்தார்." என்றார்.

## பண்டித நேரு நூற்றாண்டு நினைவு குழந்தைகள் மருத்துவமனை

பண்டித நேரு நூற்றாண்டு நிறைவு விழாவில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் சார்பில், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. எம்.எம். ராஜேந்திரன் இ.ஆ.ப. அவர்கள் ஒரு அறிக்கை வெளியிட்டார் [illegible] கூறியிருப்ப[illegible]



"சென்னை ஸ்டான்லி மருத்துவ மனை வளாகத்தில் கட்டப்பட்டு வரும் குழந்தைகள் மருத்துவப் பிரிவு முடியும் நிலையில் உள்ளது. இதன் மொத்த மதிப்பீடு 2 கோடியே 19 இலட்சம் ரூபாய் ஆகும். அந்தக் கட்டடத்திற்குப் பண்டித நேரு நூற்றாண்டு நினைவு குழந்தைகள் [illegible] என்று பெயர் சூட்ட [illegible]





மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பேசும்போது குறிப்பிட்ட தாவது:

"பண்டித நேரு அவர்கள், இந் திய நாட்டினுடைய வரலாற்றில் ஒரு இமயமாக உயர்ந்திருப்பவர். இந்திய நாட்டினுடைய விடுதலைப் போராட் டத்தில் அவர் தன்னுடைய வாலிப வசந்தத்தை எப்படியெல்லாம் தியாகத் தால் சுருக்கிக் கொண்டார் என் பதைப் புதிதாக நான் சொல்லி நீங்கள் யாரும் தெரிந்து கொள்ள வேண்டிய நிலையில் இல்லை.

"பண்டித நேரு அவர்கள், எதையும் துடிப்போடு செய்ய வேண் டும், நாளை என்று இராமல் இன்றே செய்ய வேண்டும், அதை நன்றே செய்ய வேண்டும், என்கின்ற உணர்வு படைத்தவராக விளங்கினார்.

"அவர் எந்த நேரமும் நாட்டுக் காக உழைத்தார். அவர் பிரதமர் பொறுப்பை ஏற்ற பிறகு ஒவ்வொரு நாளும் 18 மணி நேரத்திற்கு மேலாக உழைத்தார் என்றுதான் அவருடைய வாழ்க்கைக் குறிப்பு அவரைப் பற்றி நமக்கு விளக்கம் சொல்கின்றது."

-இவ்வாறு தம் நீண்ட உரையில் குறிப்பிட்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள், பண்டித நேரு எழுதி வைத்த உயிலின் சில பகுதிகளைப் படித்துக் காட்டினார். அத்துடன், 1970-ஆம் ஆண்டு, சென்னையில் நடைபெற்ற நேருவின் பிறந்த நாள் விழாவின்போது நடந்த கவியரங் கில் தலைமையேற்றுப் பாடிய கவி தையின் சில பகுதிகளையும் படித் தார். *(இந்தக் கவிதையின் முழு வடிவம் 'தமிழரசு' 16-11-89 இதழில் வெளிவந்துள்ளது).*

கவிதையைப் படித்து முடிந்த தும், "இந்தக் கவிதையை மீண்டும் உங்கள் முன்னால் சமர்ப்பித்து, நேரு திருநாமம் வாழ்க, வாழ்க என்று முழங்கி விடைபெறுகிறேன்" என்றார்.

மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் விழா விற்குத் தலைமை வகித்துப் பேசு கையில் குறிப்பிட்டார்:

"நேரு சிறந்த ஜனநாயகவாதி; அஞ்சா நெஞ்சம் படைத்த வீரர்; சிறந்த எழுத்தாளர். ஜனநாயக முறை முழுமையாக ஏற்கப்படாத காலகட்டத்திலேயே ஜனநாயக முறைக்கு அடித்தளமிட்டார் நேரு. பார்லிமெண்ட் ஜனநாயகத்தைப் பேணிக் காப்பதே நாம் அவருக்குச் செய்யும் சிறந்த அஞ்சலியாகும்."

நேரு தொடர்பான பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர் களுக்கு மேதகு ஆளுநர் அவர்களின் துணைவியார் திருமதி அக்கம்மா அலெக்சாண்டர் அவர்கள் பரிசுகள் வழங்கினார்.

முன்னதாக விழா நிகழ்ச்சிகளை, செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. கி. இராஜமாணிக்கம் இ.ஆ.ப. அவர்கள் தொகுத்துக் கூறினார்.


செய்தி - சுற்றுலாத்துறைச் செயலர் திருமதி. ஜெயந்தி இ.ஆ.ப. அவர்கள் நன்றி கூறினார்.

விழா முடிவில், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் 'சங்கத் தமிழ்' நாட்டிய நாடகத்தை வழுவூர் சாம்ராஜ் குழுவினர் நடத் தினர்.

-நமது செய்தியாளர்.

*மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் தலைமைச் செயலகத்தில் அமைச்சர் பெருமக்கள், அரசு உயர் அலுவலர்கள், தலைமைச் செயலக அலுவலர்கள் ஆகியோர் தேசிய ஒருமைப்பாடு உறுதிமொழி எடுத்துக்கொண்டார்கள் (25.11.89).*





# சென்னையில்

# டாக்டர் எம்.ஜி.ஆர் நினைவிடம்

மறைந்த முதல்வர் மக்கள் திலகம் டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிடத்தை சென்னைக் கடற்கரையில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 15-11-89 அன்று பொது மக்கள் பார்வைக்காகத் திறந்து வைத்தார்.

மெரினாக் கடற்கரையில் 4 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.33 இலட்சம் செலவில் தமிழக அரசு அமைத்துள்ள இந்நினைவிடத்தின் திறப்பு விழாவுக்கு மாண்புமிகு செய்தி - தொழிலாளர்துறை அமைச்சர் திரு. பொன் முத்து ராமலிங்கம் அவர்கள் தலைமை வகித்தார். மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. துரை முருகன் அவர்கள் முன்னிலை வகித்தார்.


### நட்பின் சின்னம்

நினைவிடத்தைத் திறந்து வைத்து, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையில் குறிப்பிட்டதாவது:-

இன்று நடைபெறுகின்ற இந்த நிகழ்ச்சியில் உற்சாகத்தோடு கலந்து கொள்ளும் நிலையில் நானும் இல்லை. நீங்களும் இல்லை. எனக்கு முன்னால் பேசியவர்களெல்லாம் குறிப்பிட்டதைப் போல, இது என்னுடைய அருமை நண்பர் - முன்னாள் முதலமைச்சர் மக்கள் திலகம் டாக்டர். எம்.ஜி.ஆர் அவர்களுக்கு அமைக்கப்பட்டுள்ள நினைவகம் என்றாலும் கூட, சுயநலத்தோடு தமிழ்நாட்டு மக்களிடத்திலே நான் ஒரு கோரிக்கை வைத்து அவர்கள் இதை வழங்காமலேயே உரிமை எடுத்துக் கொண்டு இந்த இடத்தை "எங்கள் நட்பின் சின்னம்" என்று அழைக்க நான் விரும்புகின்றேன்.

"நாற்பதாண்டுக் காலத்திற்கு மேலாக எந்த நண்பரோடு மிக அதிகமாகப் பழகவும், குறிப்பாக கலைத் துறையிலும், அரசியல் துறையிலும் ஒன்றுபட்டுப் பணியாற்றவும், அவர் என்னைப் பேரறிஞர் அண்ணா அவர்களுக்குப் பிறகு தலைவனாக ஏற்றுக்கொண்டு ஒரு இயக்கத்தை நடத்துவதற்கு உறுதுணையாக இருக்கவும், அதற்குப் பிறகு ஏற்பட்ட இங்கே விவரிக்க இயலாத - விவரிக்கக் கூடாத சில அரசியல் நிகழ்ச்சிகளால் அவரும் நானும் பிரிந்தோம். பிரிந்ததும், பிரிந்ததற்குக் காரணமாக இருந்தவர்கள் பிறகு அவரோடு இணைந்து





கொண்டதும் இவை அனைத்தும் எனக்கும் அவருக்கும் மாத்திரம் தெரிந்த விவகாரங்கள். நாட்டிற்குத் தெரியும் என்றாலும் அதனுடைய உள்ளார்த்தம் எனக்கும் அவருக்கும் மாத்திரமே தெரியும்.

"அரசியலில் கருத்து 'மாறுபாடுகள், கொள்கை மாறுபாடுகள், மாலை நேரத்திலே மேடைகளிலே ஒருவரையொருவர் கடுமையாகத் தாக்கிக் கொள்ளுதல்-இவைகளெல்லாம் இருந்தாலும்கூட, அதற்கு அப்பாற்பட்டு நட்பு, நட்பே இல்லாவிட்டாலுங்கூட அரசியல் நாகரிகம், அரசியல் நாகரிகமே இல்லாவிட்டாலும் கூட தொன்மைக் காலம் முதல் கட்டிக்காத்து வருகின்ற தமிழருடைய பண்பாடு, இவை நிச்சயம் இருந்தாக வேண்டும் என்கின்ற அந்த அடிப்படையை யாரும் மறந்து விட முடியாது. மறுத்து விடவும் இயலாது.

"காந்தியடிகளுடைய கொள்கைகளைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் விமரிசித்தது உண்டு. ஆனால் காந்தியடிகளிடத்திலே கொண்ட அன்பையோ, மதிப்பையோ என்றைக்கும் அவர் குறைத்துக் கொண்டது கிடையாது. அண்ணா அவர்கள் ஆட்சியில் எந்தப் பொறுப்பிலும் இல்லாத நேரத்தில் வேலூரில் காந்தியடிகளின் சிலையைத் திறந்து வைக்க அங்குள்ள நகராட்சி மன்றத்தால் அழைக்கப்பட்டபோது காந்தியடிகளுடைய சிலையை அண்ணா திறக்கக்கூடாது என்று அங்கிருந்த காங்கிரஸ் நண்பர்கள் ஒரு பெரிய போராட்டத்தை நடத்தினார்கள். அத்தகைய போராட்ட வெள்ளத்திற்கு இடையே நுழைந்து அண்ணா அவர்கள் காந்தியடிகளுடைய சிலையைத் திறக்க வேலூருக்குச் சென்றார்கள். அங்கே அண்ணா பேசியபோது "கள்ள மார்க்கெட்காரர்கள், கொள்ளை இலாபக்காரர்கள் இவர்களெல்லாம் காந்தியடிகளின் சிலையைச் சில இடங்களில் திறக்கும்போது, இந்த அண்ணாதுரை என்ன பாவம் செய்தான்?" என்று கேட்டுவிட்டு, காந்தி சிலையினை அண்ணா அவர்கள் அங்கே திறந்து வைத்தார்கள்.

### பெரியார் கடைப்பிடித்த அரசியல் பண்பாடு!

"தமிழகத்திலே காந்தியடிகளின் கொள்கைகளைச் செயல்படுத்த தளகர்த்தராகத் திகழ்ந்த தந்தை பெரியார் அவர்கள், அதற்குப் பிறகு காந்தியடிகளுக்கும் தனக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் காரணமாக, சுயமரியாதை இயக்கம் கண்டு, நீதிக்கழகம் நீதிக்கட்சியில் தலைவராகப் பொறுப்பேற்று, திராவிடர் கழகம் கண்டு, காந்தியடிகளை மிகக் கடுமையாக விமர்சித்தார்கள். ஆனால் காந்தியடிகள் மறைந்தவுடன் தந்தை பெரியார் அவர்கள் இந்தியத் திருநாட்டிற்கே காந்தி நாடு என்று பெயர் வைக்க வேண்டும் என்று 'விடுதலை' பத்திரிகையிலே அவருடைய கைப்பட ஒரு கடிதமே தீட்டினார்கள்."

"பெரியாரும், மூதறிஞர் இராஜாஜியும் இரு துருவங்களாக இருந்து தமிழ்நாட்டிலே கருத்துக்களை எடுத்துச் சொன்னபோது, அந்த இரண்டு துருவங்களின் பக்கமும் இருசாரார் அணிவகுத்துச் சென்ற அந்த நிகழ்ச்சிகளையும் யாரும் மறந்திருக்க இயலாது. ஆனால் நான் நேரடியாகவே கண்ட காட்சி, ஏன் தமிழக மக்கள் அனைவரும் பார்த்த நிகழ்ச்சி. இராஜாஜி அவர்கள் உடல் நலிவுற்று மருத்துவமனையில் இருந்தபோது, தந்தை பெரியார் அவர்கள் எத்தனை முறை இராஜாஜி அவர்களைக் காண்பதற்கு மருத்துவமனைக்குச் சென்றார் என்பது, இராஜாஜி அவர்கள் மறைந்துவிட்ட பிறகு அவரை எரியூட்டுகிற இடத்திலே பெரியாரும், நானும், பெருந்தலைவர் காமராஜரும், மற்றவர்களும் அமர்ந்திருக்கும் போது- இராஜாஜியின் உடலில் தீ மூட்டப்படுகிற அந்த நேரத்தில் - அந்த தள்ளாத வயதில் தந்தை பெரியார் அவர்கள் கதறிக் கதறி அழுத அந்தக் காட்சியும் இன்னமும் என் நெஞ்சிலே - ஏன், தமிழ்நாட்டு மக்களின் பலபேருடைய நெஞ்சிலே பதிந்திருக்கும் என்றே நான் நம்புகிறேன்.

"எதிர்த்தோம், அரசியலில் கருத்து மாறுபாடுகளைச் சொல்லிக் கொண்டோம். எனவே அவர்களை மதிக்கவே கூடாது. உரிய மரியாதையைச் செய்யவே கூடாது என்கின்ற ஒரு நிலையெடுத்தால், நாம் இந்த தமிழ் மண்ணுக்கு, தமிழ் மண்ணிலே

விளைந்த அரசியல் பண்பாட்டிற்கு, தமிழர்களுடைய பண்பிற்கு உகந்தவர்களாக ஆக மாட்டோம்' என்பதை இந்த நினைவிடத்தினுடைய தொடக்க நிகழ்ச்சியில் நான் எடுத்துக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.''

''1972-ஆம் ஆண்டிற்குப் பிறகு நானும், என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களும் அரசியிலிலே மோதிக்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. ஆனால் ஒன்றைச் சொல்கிறேன். நாங்கள் கடுமையாகப் பேசிக்கொண்டது உண்டு. கடுமையாகச் செயல்பட்டது உண்டு. கடுமையான தண்டனைகளுக்கு ஆளானதும் உண்டு. ஆனால் எந்த நேரத்திலும் அவர் என்னைப் பற்றியோ, நான் அவரைப் பற்றியோ தரக்குறைவான வார்த்தைகளை, ஆபாசமான சொற்களைக் கையாண்டு ஒருவரையொருவர் விமர்சித்தது கிடையாது.''

''அவர் உடல் மிகுந்த நலிவுற்று கவலைக்கிடமான நிலையில் இருக்கிறார் என்ற செய்தியைக் கேள்விப்பட்டபோது, மருத்துவ மனைக்கு இரண்டு மூன்று முறை சென்றேன். ஆனால் மருத்துவர்களுடைய அனுமதி கிடைக்கவில்லை. யாருக்குமே அவரைக் காண அனுமதி கிடைக்காத காரணத்தால் எனக்கும் கிடைக்கவில்லை. அப்போது முரசொலியில் நான் ஒரு கடிதம் எழுதினேன். நான் இதைத்தான் எண்ணிக் கொண்டிருந்தேன். இந்த நிகழ்ச்சியில் வேறு யாரும் பேசத் தேவையில்லை. அந்தக் கடிதத்தை மாத்திரம் படித்துவிட்டு நிகழ்ச்சியை நிறைவு செய்யலாம் என்றுதான் கருதியிருந்தேன்.

''ஆனால் நண்பர் பி.எச். பாண்டியன் பேசியபிறகு - சில கருத்துக்கள் வேறு திசைக்குச் சென்ற பிறகு, நானும் ஏன் இந்தக் காரியத்தைச் செய்தோம் என்பதைச் சொல்லவேண்டியதாயிற்று. அது மாத்திரம் அல்ல, இந்தப் பொறுப்பிலே இல்லாத கருணாநிதியாக இருந்தால் இதைப்பற்றி நான் கவலைப்படாமல் இருந்திருக்கலாம். இன்னும் நினைவிடம் எழுப்பவில்லையே என்று அதற்காக வேதனைப்பட்டுக் கொண்டிருக்கலாம். அதைச் செய்ய வேண்டிய இடத்திற்கு நான் வந்த பிறகு அதைச் செய்யாமல் இருப்பது என்ன



நியாயம் என்பதைத்தான் அனைவரும் எண்ணிப் பார்க்க வேண்டும்.''

அன்று பிரார்த்தனைக் கடிதத்திற்குப் பலன் இருந்தது. அவர் பிழைத்தெழுந்து வந்தார். ஆனால் அதற்குப் பிறகு - இரண்டு மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு அவர் நம்மைவிட்டு மறைந்து விட்டார். அவர் மறைந்த செய்தியைக் கேள்விப்பட்டவுடன் தோட்டத்திற்குச் சென்று அவரைக் கண்டு, வீட்டிற்குத் திரும்பிய அந்த நேரத்திலிருந்து மறுநாள் அவருடைய உடலை இந்த இடத்திலே கொண்டு வந்து அடக்கம் செய்கிற வரையில் நான் இங்கே வரமுடியாவிட்டாலும், நேரடியாகக்கலந்துகொள்ள முடியாவிட்டாலும், தொலைக்காட்சியின் மூலமாக எல்லா நிகழ்ச்சிகளையும் பார்த்தேன். அவருடைய உடல் அடக்கம் செய்யப்படுகின்ற நேரத்தில் தம்பி துரைமுருகன் இங்கே குறிப்பிட்டதைப் போல கண்ணில் வெள்ளம் தாங்க முடியாமல் கதறி அழுதேன்.

இவைகளெல்லாம் 'நட்பு' ஆழமான அடிப்படையிலே உருவானதே தவிர வேறல்ல. இன்றைக்கும், என்றைக்கும் எங்களுக்கிடையே ஏற்பட்டுள்ள அந்த நட்பின் ஆழத்தை எங்களுடைய கட்சியிலே இருப்பவர்கள் கூட பலபேர் புரிந்து கொள்ள முடியாது என்று எனக்குத் தெரியும்.

எனவே நான் தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் சொல்லிக் கொள்கின்றேன். என்னுடைய நண்பருக்காக - நான் இந்த ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற வாய்ப்பு கிடைத்த காரணத்தால் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு உருவாக்கியிருக்கின்ற எங்கள் நட்பின் சின்னம் இது. அதை அனைவரும் காண இன்று தொடங்கி வைக்கிறேன் என்று கூறிக்கொள்கிறேன்.''

முன்னாள் சட்டப் பேரவைத் தலைவர் திரு. பி.எச். பாண்டியன், தலைமைச் செயலர் திரு. எம்.எம். இராஜேந்திரன், இ.ஆ.ப. ஆகியோர் உரையாற்றினார்கள்.

செய்தி-சுற்றுலாத்துறைச் செயலாளர் திருமதி. ஜெயந்தி, இ.ஆ.ப. அனைவரையும் வரவேற்றார். செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. கி. இராஜமாணிக்கம், இ.ஆ.ப. நன்றி நவின்றார்.

—நமது செய்தியாளர்




# தமிழ்நாடு மின்சார வாரியம்
# வடசென்னை அனல்மின் திட்டம்

## ஒப்பந்த அறிக்கை

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்காக, கீழே குறிப்பிட்டுள்ள பணிக்கு மூடி அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் (இரு பிரிவு ஒப்பந்தம்) மூன்று நகல்களோடு மேற்பார்வைப் பொறியாளர்/பொதுவியல்/அனல் மின்னாக்கம்-1 மூன்றாவது தளம், நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி மாளிகை, தமிழ்நாடு மின்சார வாரியம், 800, அண்ணா சாலை, சென்னை-600 002 என்ற முகவரியில் கீழே கையொப்பமிட்டவரால் வரவேற்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | பணியின் பெயர் | : | வட சென்னை அனல் மின்திட்டம் - முதல் கட்டப் பணி அனல் இயந்திரங்களில் வெப்பத்தைத் தணிக்க கடல் நீர் சுற்றிவருமாறு அமைக்கும் கட்டடப் பணிகள் (Circulating water system civil works) |
| 2. | ஒப்பந்த வரையறை எண் | : | SECT.I/NMTPP/9 |
| 3. | மொத்த வேலையின் தோராய மதிப்பு | : | ரூ.33 கோடி. |
| 4. | பிணை வைப்புத் தொகை | : | ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) |
| 5. | ஒப்பந்தங்கள் பெற்றுக் கொள்வதற்கான இறுதி நாளும், நேரமும் | . | 1989, டிசம்பர் 27-ஆம் நாள் புதன்கிழமை நண்பகல் 12.00 மணி வரை |
| 6. | தொழில் நுட்ப இனங்களுக்கான ஒப்பந்தங்கள் திறப்பதற்கான நாளும், நேரமும் | : | 1989, டிசம்பர் 27-ஆம் நாள் புதன்கிழமை பிற்பகல் 2.30 மணி |
| 7. | ஒப்பந்த வரையறை ஒன்றின் விலை | | |
| | தமிழ்நாட்டிற்குள் | : | ரூ.750/- (ரூபாய் எழுநூற்றைம்பது மட்டும்) |
| | தமிழ்நாட்டிற்கு வெளியே | : | ரூ.825/- (ரூபாய் எண்ணூற்று இருபத்தைந்து மட்டும்) |
| 8. | ஒப்பந்தத்தை அனுப்புதல் | : | இது இரு பிரிவு ஒப்பந்த அறிவிப்பு. ஒப்பந்தங்கள் ஒப்பந்தவரையறையில் உள்ள செக்ஷன் ஏ3-இன் 16-வது பிரிவில் கண்டு உள்ள விதிகளின்படி அனுப்பப்பட வேண்டும். இவ்விதிமுறைகளுக்கு முரணாக சமர்ப்பிக்கப்படும் ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும். |

ஒப்பந்த வரையறை வேண்டுவோர், தலைமை உள் தணிக்கை அலுவலருக்கு (முதல் தளம், கே.ஆர்.ஆர். மாளிகை, தமிழ்நாடு மின்சார வாரியம், 800, அண்ணா சாலை, சென்னை - 600 002) ஒப்பந்த வரையறைக்கான விலையைப் பணமாகவோ/பணவிடை வாயிலாகவோ, ஒப்பந்த வரையறை எண் குறிப்பிட்டுச் செலுத்தி பெறப்பட்ட ரசீதை இணைத்து, முழு முகவரியுடன் விண்ணப்பித்துக் கொண்டு, மேற்பார்வைப் பொறியாளர்/பொதுவியல்/ அனல் மின்னாக்கம்-1 அலுவலகத்தில் 15.11.89 காலை 10-30 மணி முதல் 23.12.89 மாலை ஐந்து மணி வரை பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்த வரையறை பெறுவதற்கு செலுத்தப்பட்ட தொகை எக்காரணத்திற்காகவும் திரும்புத்தரப்பட மாட்டாது. அஞ்சல் வாயிலாக வேண்டுவோர் ஒவ்வொரு ஒப்பந்த வரையறைக்கும் ரூ.50/- கூடுதலாக செலுத்த வேண்டும். பொதுவாக, ஒருவருக்கு ஒரே ஒரு ஒப்பந்த வரையறை மட்டும் தான் கொடுக்கப்படும். அஞ்சலில் அனுப்பப்படும் ஒப்பந்த வரையறை தவறிப் போனாலும், காலதாமதம் ஆனாலும் மின்சார வாரியம் பொறுப்பு ஏற்காது. ஒப்பந்த வரையறை மாற்றத்தக்கதல்ல.

பிணை வைப்புத் தொகையன்றி வந்து சேரும் ஒப்பந்தங்களும், குறித்த காலத்திற்குப் பின்னர் வந்து சேரும் ஒப்பந்தங்களும் ஏற்கப்படாமல் விடுவதற்கு ஏதுவாகும்.

குறைந்த மதிப்பீடு கொண்ட அல்லது மற்ற எந்த ஒரு ஒப்பந்தத்தையோ ஏற்றுக் கொள்வதற்கு தமிழ்நாடு மின்சார வாரியம் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளாது. எக்காரணமும் தெரிவிக்காது எந்த ஒரு ஒப்பந்தத்தையும் அல்லது எல்லா ஒப்பந்தங்களையும் தள்ளுபடி செய்யும் முழு உரிமை இவ்வாரியத்திற்கு உண்டு. விற்பனை செய்யப்படும் எந்த ஒரு ஒப்பந்த வரையறையில் கண்டுள்ள எந்த ஒரு நிபந்தனையையும், தேவை எனக் கருதும் போது தளர்த்தவும், கைவிடவும் உள்ள உரிமை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கே உரியது.

**தலைமைப் பொறியாளர்/பொதுவியல் வடிவமைப்பு**

DIPR/2434/MS/89/MCS

## இலவசக் காலணி வழங்கும் திட்டம்
## 6,000 மகளிருக்கு வேலை வாய்ப்பு

ஏற்கனவே நடைபெற்றுவரும் இலவசக் காலணி வழங்கும் திட்டத்தின் மூலம், ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை கல்வி பயிலும்-தமிழக அரசு சத்துணவுத் திட்டத்தின்கீழ் பயன் அடையும்-சுமார் 65 இலட்சம் பள்ளிச்சிறார்கள் பயன்பெறுகின்றனர். இத்திட்டத்தின்கீழ் பள்ளி மாணவ மாணவிகளுக்கு இலவசக்காலணி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் நோக்கம் பன்னெடுங்காலமாக காலணி தயாரிக்கும் தொழிலை நம்பியுள்ள தொழிலாளர்கள் ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பினைப் பெற்று அதன்மூலம் நாள் ஒன்றுக்கு ரூ.25/-க்குக் குறையாமல் வருமானம் பெறவேண்டுமென்பதும், ஏழை எளிய மாணவ மாணவியரும், கிராமப்புற ஏழை உழைக்கும் மகளிரும் இலவசக் காலணிகள் பெறவேண்டும் என்பதுமே ஆகும்.

இத்திட்டத்தின் மூலம் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள சுமார் 6,000 மகளிர் வேலைவாய்ப்பினைப் பெறுகின்றனர். மாதம் ஒன்றுக்கு ஒவ்வொரு பெண்ணிற்கும் சுமார் ரூ.750/-க்குக் குறையாமல் வருமானம் கிடைக்கும்.

இத்திட்டத்திற்கென இவ்வாண்டுக்கு ரூ.3 கோடியே 16 இலட்சத்து 63 ஆயிரம் செலவிடப்படும்.

தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம், தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் மற்றும் சமூகநலத்துறை ஆகியவற்றிடம் காலணிகள் தயார் செய்யும் பணி ஒப்படைக்கப் பட்டுள்ளது..

இத்திட்டத்தின்கீழ் ஏற்கனவே கையிருப்பில் உள்ள 16.5 இலட்சம் ஜோடி காலணிகள் போக, மேலும் 22 இலட்சம் ஜோடி காலணிகள் தயார் செய்ய 1989-90-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டு, இலவச காலணி வழங்கும் திட்டத்தினைத் தொடர்ந்து செயலாக்க 7.9.89 அரசு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. ஒரு ஜோடி காலணி தயார் செய்ய ரூ.14.31 செலவிடப்படுகிறது. இத்திட்டத்தின்மூலம் தயார் செய்யப்படும் காலணிகளை விநியோகிக்கும் பொறுப்பு பள்ளிக்கல்வி இயக்குநரிடமும், ஒட்டுமொத்த மேற்பார்வை மாவட்ட ஆட்சித்தலைவர்களிடமும் ஒப்படைக்கப்பட்டு உள்ளது.



# வீரத் தமிழ் அன்னை டாக்டர் எஸ்.தருமாம்பாள்

புலவர் தணிகை உலகநாதன்

**ச**முதாயச் சீர்திருத்தம், தமிழ்த் தொண்டு, பகுத்தறிவுப் பணி-சித்த மருத்துவப் பணி, பெண்கல்விக்கு ஆதரவு, இப்படி எண்ணற்ற தொண்டுகளின் வாயிலாகத் தமிழக மக்களின் இதயத்தில் நீங்கா இடம் பெற்றவர் டாக்டர் தருமாம்பாள். மகளிர் குலத்துக்கு அவர் ஆற்றிய சேவை அளவிடற்கரியது. விதவைப் பெண்களின் மறுவாழ்விற்காக அரும்பாடுபட்டார். அவரது தொண்டினை நினைவூட்டும் வகையில், அரசு நடைமுறைப்படுத்தி வரும் விதவைப் பெண்கள் மறுவாழ்வுத் திட்டத்திற்கு-டாக்டர் தர்மாம்பாள் நினைவு விதவை மறுமண உதவித் திட்டம்' எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. பொது நலம் போற்றிய அந்தப் பொன் மலரின் பெருமைகளை விளக்குகிறது இந்தக் கட்டுரை.



"**த**ருமாம்பாள்". நல்ல பெயர். பெயருக்கேற்ற இயல்பு, இயல்புக்கேற்ற பெயர்.

டாக்டர் தருமாம்பாள் சித்த மருத்துவர். மருத்துவத் தொழில் அம்மையாரைச் சிறந்த சமுதாயத் தொண்டராதற்குரிய வாய்ப்பை அளித்ததென யான் கருதுகிறேன். அம்மையார் மருத்துவத்தை யான் ஏறக்குறைய பதினைந்து ஆண்டுகளாகப் பார்த்து வருகிறேன். அவ்வனுபவம், தருமாம்பாள் அவர்கள் மக்களின் உடல் நோய் தீர்க்கும் மருத்துவராக மட்டும் அமையவில்லை என்றும், சமுதாய நோய் தீர்க்கும் மருத்துவராகவும் அமைகிறார் என்றும் எண்ணச் செய்தது.

"தருமாம்பாள்மருத்துவநிலையத்துக்கு உடல் நோயாளர் மட்டும் போதருகிறார் இல்லை. மற்ற நோயாளர்களும் போகிறார்கள். ஏழை மாணாக்கர், திக்கற்றவர், ஒதுக்கப் பட்டவர், வேலையில்லாதோர் முதலியோர் போதருகின்றனர். அவரவர் வேண்டுதலைத் தெரிந்து அவரவர்க்குத் தக்க நலம் புரியச் சகோதரியார் அங்கும் இங்கும் அலைவதை என் கண்கள் ஒரு முறையா கண்டன; பல முறை கண்டன. சகோதரியார் தொண்டுக்கென்றே பிறந்து வளர்ந்து வாழ்கிறார் என்று சொல்வது மிகையாகாது."

—இவ்வாறு தமிழ்ப்பெரியார் திரு. வி. க. அவர்கள் டாக்டர் தருமாம்பாள் அவர்களின் மணி விழாவின்போது தலைமை தாங்கிப் பாராட்டுரை வழங்கினார். தருமாம்பாள் தமிழ்ப் பெரியார் கண்ட நல்ல பெண் மணிக்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர். பெண்கள் முன்னேற்றத்துக்கும் சமுதாயச் சீர்திருத்தத்துக்கும் தமிழ்ப் பாதுகாப்புக்கும் அவர் செய்த தொண்டுகள் தமிழக வரலாற்றுப் பொன்னேட்டில் வைர எழுத்துக்களால் பொறிக்கத் தக்க பெருமை உடையவை.

தருமாம்பாள், இராசராச மன்னன் தலைநகராகிய தஞ்சையைச் சார்ந்த



## கல்லணை - மத்திய அரசு
## வாய்க்கால் - மாநில அரசு

ஆற்றுத் தண்ணீர் கழனிக்குப் போய்ச் சேரவேண்டும். ஆற்றுத் தண்ணீர் கழனிக்குப் போய்ச் சேர்ந்தால்தான் கழனியிலே பயிர் விளையும். அனைவருக்கும் புரியும். கல்லணையிலே இருக்கின்ற தண்ணீர் திருவாரூரிலே இருக்கின்ற ஒரு கழனிக்குப் போய்ச் சேர வேண்டுமென்றால், அப்படியே கல்லணைத் தண்ணீரை நேரடியாகக் கழனியிலே பாய்ச்சினால் கழனி மூழ்கிவிடும். அதற்காகத் தான்-இடையிடையே பற்பல சிற்றாறுகள், வாய்க்கால்கள் வழியாக அந்தத் தண்ணீரைக் கொண்டுபோய், திருவாரூரிலே இருக்கின்ற கழனியிலே சேர்க்க முடியும்.

அதைப்போலத்தான் மத்திய அரசை, கல்லணையாகக் கருதிக் கொண்டு அது செய்கின்ற உதவிகளை-அந்த அதிகாரங்களை-அதற்கு இருக்கின்ற உரிமைகளை எல்லாம் அப்படியே ஒரேயடியாகக் கொண்டு போய்க் கழனியிலே சேர்த்தால்-அது கழனிக்குப் பயன்படாமல் போய்விடும். அதை வகைப்படுத்தி, வரை முறைப்படுத்தி, வாய்க்கால் வழியாகக் கொண்டு போக வேண்டும். கல்லணை மத்திய அரசு என்றால் வாய்க்கால்கள் மாநில அரசுகளாக இருக்க வேண்டும் என்பதுதான் நம்முடைய கருத்தாகும். *

கருந்தட்டாங்குடி என்னும் ஊரில் 1890-ஆம் ஆண்டு புரட்டாசித் திங்கள் கலைமகள் திருநாளில் பிறந்தார். தந்தை சுவாமிநாதர்; புகழ்மிக்க துணிக்கடைக்காரர். தாயார் நாச்சியார் என்னும் பாப்பம்மாள். சரசுவதி பூசையன்று பிறந்த பெண்ணுக்குப் பெற்றோர் சரசுவதி என்றே பெயர் சூட்டினார்கள். ஆனால், உறவினர் செல்லமாக அழைத்து வந்த 'தருமாம்பாள்' என்னும் பெயரே நிலைத்து விட்டது. இளமையிலேயே பெற்றோரை இழந்த அம்மையாரை இலக்குமி என்னும் பெண்மணி தம் வளர்ப்பு மகளாகக் கொண்டு, சீராட்டிப் பாராட்டி வளர்த்தார். ஒரு குலத்துக்கு ஒரு மகளாகத் தோன்றிய தருமாம்பாள் பிஞ்சுப் பருவத்திலேயே கற்பனவற்றைக் கசடறக் கற்று, வகுப்பில் முதல் மாணவியாக விளங்கினார்.

தருமாம்பாள் திருமணம் செய்து கொள்ளவில்லை. அவர் தம் குடும்பக் கல்வியாகிய சித்த மருத்துவத் துறையில் தேர்ச்சி பெற்று, சென்னை தங்கசாலைத் தெருவில் ஒரு வாடகை வீட்டில் மருத்துவத் தொழிலை நடத்தி வந்தார். சென்னையில் ஓய்ந்த நேரங்களில் மணிதிருநாவுக்கரசர், சீவகாருணிய சுப்பிரமணியனார், பண்டிதை நாராயணியம்மையார் ஆகிய மூவரிடமும் தமிழ் பயின்று பெரும் புலமை பெற்றார். ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளிலும் பேசும் ஆற்றல் உடையவராய் விளங்கினார். அம்மையார் ஏழை எளியவர்களுக்கு இலவச மருந்துகள் அளித்து அவர்களின் பிணியைப் போக்கினார்.

அவர் மருத்துவராக மட்டுமல்லாமல், பிணியாளர் மனம் கலங்கிக் கூறும் குடும்பக் குறைபாடுகளைக் கேட்டும் கணவன்மார் செய்யும் கொடுமைகளை அறிந்தும் அவற்றைப் போக்க அரும்பாடுபட்டார். அவரவர் வீட்டுக்கே சென்று அறிவுரைகள் கூறிப் பிணக்குகளைத் தீர்த்து வைத்தார். கணவரை இழந்த பெண்கள் நல்வாழ்வு பெற, வேண்டிய உதவிகளைச் செய்தார். 'சாதி மதவேற்றுமை என்னும் நோய் தீர்க்கும் மருந்து கலப்பு மணம். மருத்துவர் தருமாம்பாள் முயற்சியால் பல கலப்பு மணங்கள் நடந்துள்ளன. அவர் பெயரையும் தன் மார்க்கப் பேரேட்டில் யான் பதித்திருக்கிறேன்' எனத் தமிழ்த் தென்றல் திரு. வி.க. அவர்கள் பாராட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது.

பெண்களுக்குக் கல்வி வேண்டாம் என்று பெற்றோர்கள் ஒதுக்கி வைத்த காலம் அது. கற்ற பெண்மணிகளால்தான் நாடு முன்னேறும் என்னும் உறுதியான கொள்கையுடைய தருமாம்பாள் அக்காலத்தே வீடு வீடாகச் சென்று படிக்காத பல பெண்களைக் கண்டார். அவர்களைப் படிக்க வைக்குமாறு பெற்றோர்களை வேண்டினார். அவர்தம் முயற்சியினால் உயர்வுபெற்று அவரை இன்றும் நன்றியுணர்வுடன் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

பெத்துநாயக்கன் பேட்டையில் தமிழ் மாதர் கழகம் என்று ஓர் அமைப்பு இருந்தது. அதன் தலைவி பண்டிதை நாராயணி அம்மையார்; தருமாம்பாள் அதன் செயலாளராய் இருந்து, பெண்கள் பல துறையிலும் முன்னேறுவதற்கு அரிய சேவைகள் பல புரிந்தார். கிழமைதோறும் தமிழ் வகுப்புகள் நடத்தி, தாய்மார்களிடையே தமிழறிவு பரவச் செய்தார். பெண்ணுரிமைக்குப் பெரிதும் பாடுபட்டார். குடும்பத்தில் பிள்ளைப் பூச்சிகளாய்-மண்புழுக்களாய்-அடங்கி ஒடுங்கிக் கிடந்த பெண்களை, ஆடவர்களுக்குப் பெண்கள் எந்த வகையிலும் தாழ்ந்தவர் அலலர் என முழக்கமிட்டு எழுச்சி பெறச் செய்தார். சீர்கெட்ட பெண்களின் வாழ்வு செம்மை பெறச் செய்தார்.

சமுதாயச் சீர்திருத்தத்திலும் அவர் முன்னோடியாக விளங்கினார். கண்மூடிப் பழக்கமெல்லாம் மண்மூடிப் போக மூலைமுடுக்கெல்லாம் சென்று முழக்கமிட்டார். பயபக்தி, குருட்டு நம்பிக்கை ஆகியவற்றைக் களைந்தெறியப் பெண்கள் முன் வர வேண்டும் என்பதை ஆணித்தரமாக-அழுத்தம் திருத்தமாக எடுத்துக் கூறினார். பேரறிஞர் அண்ணா, பகுத்தறிவுப் பகலவன் பெரியார் ஆகிய பெருமக்களின் சமுதாயப் பணிகளில் பெரிதும் ஈடுபட்டார். அதனால் ஏற்பட்ட இடையூறுகளையும் இன்னல்களையும் பொருட்படுத்தாமல், மலைகலங்கினும் நிலைகலங்காத மாண்புடையவராய் இருந்தார். தீண்டாமையைப் போக்குவதிலும் அம்மையார் ஓர் எரிமலையாக நின்றார்.

1938-ஆம் ஆண்டு தமிழ் நாட்டுப் பள்ளிகளில் இந்தி கட்டாயப் பாடமாக்கப்பட்டது. தமிழ் மொழியே கட்டாயப் பாடம் இல்லாத காலம் அது. அதனால் தமிழகமெங்கும் கடும் புயல் வீசியது. மொழிப்போராட்டம் தலை எடுத்தது. கட்டாயப் பாடத்தை எதிர்த்து தலைவர்களும் அறிஞர்களும் மாணவர்களும் எதிர்ப்புக் குரல் எழுப்பினார்கள். 13-11-1938 அன்று சென்னை ஒற்றைவாடை நாடக அரங்கில் அம்மையார் பெண்கள் மாநாடு ஒன்று கூட்டினார். தமிழ் ஞாயிறு மறைமலை அடிகளாரின் மகள் திருமதி நீலாம்பிகை அம்மையார் மாநாட்டுக்குத் தலைமை தாங்கினார். இம்மாநாட்டில் பகுத்தறிவுப் பகலவன் ஈ.வெ.ரா. அவர்களுக்குப் பெரியார் என்னும் பட்டம் வழங்க டாக்டர் தருமாம்பாள் காரணமாக இருந்தார். நீலாம்பிகை அம்மையாரால் பெரியாருக்கு அப்பட்டம் அம்மாநாட்டில் தரப்பட்டது. திருமதி வ.ப. தாமரைக்கண்ணி அம்மையார் வரவேற்புக் குழுத் தலைவியாகவும், திருமதி மீனாம்பாள் சிவராஜ் தமிழ்க்கொடி ஏற்றுபவராகவும் அமைந்த மாநாடு மிகச் சிறப்பாக நடைபெற்றது. பெண்களும் மொழிப் போராட்டத்தில் கலந்து கொள்ளும் எழுச்சி கொண்டனர்.

'மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை-நமை
மாட்ட நினைக்கும் சிறைச்சாலை'

என முழக்கமிட்டனர். தமிழ்த் தொண்டர்கள் பலர் மறியலில் கலந்து சிறை சென்றனர். அம்மையார் அவர்களுடன் மலர்முகத்தம்மையார், இராமாமிர்தம் அம்மையார், இராசம்மையார் போன்றோர் சிறை சென்று தமிழ் காத்த முதல் மகளிராவர். தருமாம்பாள் அவர்கள் மொழிப் போராட்டத்தில் தீவிரமாகப் பங்கு கொண்டது வரலாற்றுச் சாதனையாகும்.

சென்னையில் மாநகராட்சியினர் டாக்டர் தருமாம்பாள் பெயரில் நிறுவியுள்ள பூங்காவும், மாணவர் மன்றத்தினர் நடத்திவரும் டாக்டர் தருமாம்பாள் நடுநிலைப்பள்ளியும், மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழக அரசின் சார்பில் விதவைத் திருமணம் செய்துகொள்வோருக்கு உதவிநிதியாக அன்னையின் பெயரால் ரூ. 5,000 வழங்க முன்வந்துள்ளமையும் அன்னையாரின் நினைவை என்றும் பசுமையோடிக் கொண்டிருக்கச் செய்யும் என்பதில் ஐயமில்லை.

1957-ஆம் ஆண்டில் நடைபெற்ற மாணவர் மன்ற வெள்ளிவிழாவில் அன்னையாருக்கு நாவலர் சோமசுந்தரபாரதியார் அவர்களால் வீரத் தமிழன்னை என்னும் பட்டம் வழங்கப் பெற்றது.

மாணவர் மன்றம் என்னும் ஓர் அமைப்பு, சென்ற 58 ஆண்டுகளாக மாணவர்களின் மொழி வளமும் கலை நலமும் கருதிப் பாடுபட்டு வருகிறது. அதன் வளர்ச்சிக்கு வித்தூன்றிய தமிழ் நெறிக் காவலர் மயிலை சிவமுத்து அவர்களின் விருப்பத்திற்கிணங்கித் தருமாம்பாள் அவர்கள் மன்றத்தின் தலைவியாகச் சில ஆண்டுகள் இருந்தார்.

அம்மையார் அவர்கள் காலத்தில் ஆயிரம் ஆயிரமான மாணவர்கள், மன்றத் தேர்வுகளிலும் கலைப் போட்டிகளிலும் கலந்து பயன் பெற்றனர். அவரது தூய தொண்டினால் வளர்ந்த மன்றம் இன்று சொந்தக் கட்டடத்தைப் பெற்று, மேலும் பல துறைகளிலும் வளர்ச்சியடைந்து வருகிறது.

இலட்சக்கணக்கான மாணவர்கள் சான்றிதழ்களும், கேடயங்களும், பதக்கங்களும், பரிசுகளும் பெற்று இன்பம் அடைகின்றனர். டாக்டர் தருமாம்பாள் ஏற்றி வைத்த விளக்கு அணையா விளக்காக-கலங்கரை விளக்கமாக மன்றத்தின் முகப்பில் ஒளிவீசிக் கொண்டிருக்கிறது.

டாக்டர் தருமாம்பாள் பொது நலம் போற்றிய ஒரு பொன் மலர். ஆதரவற்ற பலருக்கு அம்மையார் உற்ற துணையாக விளங்கினார். தம் உதவி வேண்டி வந்த மாணவர்களைப் பெரிய செல்வர்களிடம் அழைத்துச் சென்று ஊக்கத்தொகை உதவுமாறு செய்தார். பெண்களுக்கு உணவும் உடையும் உதவச் செய்தார். மாணவர்களைப் பள்ளி உணவு விடுதிகளில் பாதிச் செலவில் சேர்க்க உதவினார். இலவச உணவு விடுதிகளை ஏற்படுத்துமாறு செல்வர்களை வேண்டினார். ஆனால் தம் வாழ்வுக்காக எவர் உதவியையும் நாடாமல் மருத்துவத் தொழிலில் தமக்குக் கிடைத்த சிறு வருவாயைக் கொண்டே எளிய வாழ்வு வாழ்ந்தார்.

டாக்டர் தருமாம்பாள் அவர்கள் நோய்வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையில் கிடந்தபோதும், நலிந்த பெண்மணிகளின் நல்வாழ்வையும், தமிழ் வளர்ச்சியையும், தமிழர்களின் முன்னேற்றத்தையுமே எண்ணி எண்ணி ஏங்கிக் கொண்டிருந்தார். 'தமிழ் மக்களுக்கு ஒரு மறுமலர்ச்சிக் காலம் வராதா?' என ஏங்கிக் கொண்டிருந்தார். 23-5-1962-இல் அன்னையாரின் பேச்சு அடங்கியது; மூச்சு ஒடுங்கியது; உயிர்ப்பறவை பறந்துவிட்டது. தமிழகத்தின் நைட்டிங்கேலாகவும், அன்னை தெரசாவாகவும் விளங்கிய தருமாம்பாள் பொன்னுடல் நீத்துப் புகழுடம்பு அடைந்தார்.

அவர் கண்ட கனவுகள் இன்று நனவாகி வருகின்றன. தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், பெண்மணிகளின் முன்னேற்றம் கருதி அரிய பல திட்டங்களை வகுத்து ஆதரவு அளித்து வருவது பாராட்டத்தக்கது.

'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு?' என்ற காலம் மலையேறி விட்டது. 'ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வோம் இந்த நாட்டிலே' என்னும் முழக்கம் திக்கெட்டும் பரவியுள்ளது. டாக்டர் தருமாம்பாள் அவர்கள் மறைந்தாலும் மறையாத மாமணியாக நம்மிடையே வாழ்ந்து வருகிறார். ●



மனித குல முன்னேற்றத்துக்காக மனிதன் உழைக்கிற இடமே உயர்ந்த கோயிலாகும். ஆயிரக்கணக்கிலே மக்கள் அன்றாடம் உழைத்து இரத்தமும் வியர்வையும் சிந்தி, ஏன், உயிரையும் கொடுத்து உருவாக்கியிருக்கும் தொழிற்கூடங்கள், அணைக்கட்டுகளைவிட தொழுகைக்குரிய கோயில்கள் வேறெங்கே இருக்க முடியும்?

-ஜவகர்லால் நேரு

# தென்னார்க்காடு மாவட்ட
# பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம்
## விழுப்புரம்

ஒன்றியம் பதிவு செய்யப்பட்ட நாள் : 31.03.82
ஒன்றியம் ஆரம்பிக்கப்பட்ட நாள் : 01.09.82

தென்னார்க்காடு
மாவட்டத்தில் வாழும்
பால் உற்பத்தியாளர்களுக்குச்
சிறந்த சேவை
செய்வதே
ஒன்றியத்தின் நோக்கம்.

தென்னார்க்காடு
மாவட்டத்தில்
பால் உற்பத்தியைப்
பெருக்குதல்

உற்பத்தியாளர்கள் வழங்கும்
பாலுக்கு அதன் கொழுப்புச்
சத்தின் அடிப்படையில்
நல்ல விலையை
நிர்ணயித்தல்

பால் நுகர்வோர் சங்கங்கள்
மூலம் பொது மக்களுக்கு
காலத்தில்
தரமான பாலை
தகுந்த விலையில் தருதல்

கால்நடைப் பராமரிப்புப்
பயிற்சி நிலையங்களை
அமைத்து அதன் மூலம்
உறுப்பினர்களுக்கு நல்ல
பயிற்சி அளித்தல்.

தடங்கலின்றி வாராவாரம்
பால் உற்பத்தியாளர்
சங்கங்களுக்குப் பால் பணம்
பட்டுவாடா செய்தல்.

உற்பத்தியாளர் சங்க
உறுப்பினர்களின் உயர் ரகக்
கன்றுகளுக்கு கன்று
வளர்ப்புத் திட்டத்தின் கீழ்
மானிய விலையில் தீவனம்
வழங்குதல்.

மிகவும் குறைந்த
கட்டணத்தில்
கால்நடைகளுக்கு அவசர
சிகிச்சை மற்றும் இலவச
மருத்துவ வசதிகள் செய்தல்.

**டாக்டர் கு. அம்பலவாணன்**
நிர்வாக இயக்குநர்

**தேவேந்திரநாத் சாரங்கி, இ.ஆ.ப.,**
ஒன்றியப் பெருந்தலைவர்



# தென் ஆர்க்காடு மாவட்டத்தில்
# நலத்திட்டப் பணிகள்

தென் ஆர்க்காடு மாவட்டத்தில், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின்கீழ், 1989-90-ஆம் ஆண்டிற்கு 1,032 பெண்களுக்கு ரூபாய் 51 இலட்சத்து 60 ஆயிரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவரை மாவட்டத்தில் 335 பெண்களுக்கு ரூபாய் 16 இலட்சத்து 75 ஆயிரம் செலவிடப்பட்டுள்ளது.

**டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டம்**

ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த கருவுற்ற தாய்மார்களுக்கு குழந்தை பிறப்புக்கு முன் இரண்டு மாதங்களுக்கு மாதம் ரூ.50/- வீதமும் குழந்தை பிறந்த பின் இரண்டு மாதங்களுக்கு மாதம் ரூ.50/- வீதமும் மொத்த 4 மாதங்களுக்கு ரூ.200/- வழங்கப்படுகிறது. இதுவரை இத்திட்டத்தின்கீழ் 450 நபர்களுக்கு ரூபாய் 90 ஆயிரம் செலவிடப்பட்டுள்ளது.

**இலவச அரிசி வழங்கும் திட்டம்**

மாத வருமானம் ரூ.300/-க்கு குறைவாக உள்ள ஏழைக் குடும்ப அட்டைதாரர்களுக்கு ஆண்டிற்கு ஐந்துமுறை தமிழ்ப்புத்தாண்டு தினம், பொங்கல், தீபாவளி, பேரறிஞர் அண்ணா பிறந்த நாள், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் பிறந்த நாள் ஆகிய தினங்களில் இலவசமாக 5 கிலோ அரிசி வழங்கப்படுகிறது.

தமிழ்ப் புத்தாண்டு தினத்தில் 8,34,348 குடும்ப அட்டைதாரர்களுக்கு 4,235 மெட்ரிக் டன் அரிசி இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பிறந்த நாளில் 7,62,015 குடும்ப அட்டைதாரர்களுக்கு 3,949.435 மெட்ரிக் டன் அரிசி இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழாவில் 8,23,907 குடும்ப அட்டைதாரர்களுக்கு 4,119.535 மெட்ரிக் டன் அரிசி இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

**ஏழை மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள்**

பொருளாதார நிலையில் நலிவுற்ற பிரிவினரின் மேம்பாட்டினைக் கருத்தில் கொண்டு தமிழகத்தில் வீடு இல்லாத ஏழைகளே இருக்கக்கூடாதுஎன்ற சீரிய நோக்கத்தோடு வறுமைக்கோட்டுக்குக்கீழ் வாழும் அனைத்து ஏழை மக்களுக்கும் வீட்டு வசதி அளிக்கும் வகையில் நகர்ப்புறங்களிலும்கிராமப்புறங்களிலும் இலவசமாக வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படுகின்றன.

1.4.89 முதல் 29.9.89 வரை 20,281 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இதுவரை குறியீட்டில் 67.6 சதவீதம் முடிக்கப்பட்டுள்ளது.

**ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்**

வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் கிராமப்புற ஏழைகளின் வறுமை நிலையைப் போக்கி, தொழில் வாய்ப்பினைப் பெருக்கி, வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான கிராமப்புறத் தொழில்களைத் துவக்கிட, இத்திட்டத்தின் கீழ் இம் மாவட்டத்திற்கு 1989-90-ஆம் நிதியாண்டில் மைய அரசின் 80 சதவிகிதத்தொகை, மாநில அரசின் 20 சதவிகிதத் தொகை மற்றும் உணவு தானியங்கள் மதிப்பு உட்பட ரூபாய் 1,676.51 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பொருளாதார மேம்பாட்டுச் சொத்துக்கள் உருவாக்கும் திட்டத்தின் கீழ்,1989-90-ஆம் ஆண்டிற்கு சிறுபாசன ஆதாரங்கள், குளங்கள் ஆழப்படுத்தல், கால்வாய்கள் ஆழப்படுத்துதல் ஆகிய 2,200 பணிகள் மேற்கொள்ளப்பட்டன. சமூகக் காடுகள் வளர்ப்புப் பணிகள் 42 மேற்கொள்ளப்பட்டன.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பணிகளில் சாலைகள், சிறுபால வேலைகள், குடிநீர் வசதிகள், வானொலி, தொலைக்காட்சி அமைத்



**பொதுத் தொண்டு**

பொதுத் தொண்டு செய்பவனுக்கு ஏற்படும் தொல்லை, அவன் தன் இலட்சியத்திற்குக் கொடுக்கும் விலையாகும்.

உண்மையான பொதுத் தொண்டர்களுக்கு என்றும் சிறுமை இருக்காது; இருந்தாலும் அவர்கள் அதைச் சிறுமையாகப் பாராட்டமாட்டார்கள்.

# விருத்தாசலம் கூட்டுறவு நகர வங்கி (அளவறை) இ.81

## 63/ஏ தென்கோட்டை வீதி - விருத்தாசலம்

*(ரிசர்வ் வங்கியின் உரிமம் பெற்றது)*

டெபாசிட்டுகளுக்கு மற்ற வங்கிகளை விட ஒரு சதவிகித வட்டி கூடுதலாக வழங்கப்படுகிறது.

நிரந்தர வைப்பு மற்றும் தொடர் வைப்புகளுக்குக் கீழ்க்கண்டபடி வட்டி விகிதம் அளிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 47 நாட்களுக்கு மேல் 90 நாட்களுக்குள் | ... | 7% |
| 91 நாட்களுக்கு மேல் 1 ஆண்டிற்குள் | ... | 9% |
| 1 ஆண்டுக்கு மேல் 2 வருடத்திற்குள் | ... | 10% |
| 2 ஆண்டும் அதற்கு மேலும் | ... | 11% |

சிறு தொழில் கடன், நலிவடைந்த பிரிவினர் கடன், நகைக் கடன், வீட்டு அடமானக் கடன், வாகனக் கடன், நுகர்வுக் கடன், அஞ்சலகத் தேசீய சேமிப்புப் பத்திரக் கடன், அரசு சேமிப்புக் கிடங்கின் ரசீதின் பேரில் கடன், காஷ்கிரிடிட் கடன், தினக் கடன், நபர் பொறுப்புக் கடன், டிபாசிட் கடன் ஆகியவை வழங்கப்படுகின்றன.

**வங்கியின் டிபாசிட்டுகள் : 260 இலட்சங்கள்**

**வங்கியின் நடைமுறை மூலதனம் : 285 இலட்சங்கள்**

**எஸ். விசுவநாதன்**
செயலாளர்

**பி. ஜெயராமன்**, பி.காம்.
தனி அலுவலர் (பொறுப்பு)




# தமிழகத்தில் மீன் வளம்

தமிழகத்தில் 1,000 கி.மீ.க்கு அதிகமான நீளமுள்ள கடற்கரையும் 3.63 இலட்சம் எக்டேர் நன்னீர் மற்றும் உவர்நீர்ப் பரப்பும் உள்ளன. ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் தமிழக மீன் உற்பத்தி 3.75 இலட்சம் டன்களை எட்டிவிடுமென எதிர்பார்க்கப்படுகின்றது. கடற் பொருள் ஏற்றுமதி ஆணையகத்தின் மதிப்பீட்டின்படி, தமிழகத்தின் கடற் பொருட்கள் ஏற்றுமதியின் மூலம் 1988-89-ஆம் ஆண்டு கிட்டிய அந்நியச் செலாவணி ரூ. 103.2 கோடியாகும்.

1907-இல் துவங்கப்பட்ட தமிழக மீன் துறை, மீன் குஞ்சு உற்பத்தி மற்றும் விநியோகம், கடல் மீன் பிடி; தள ஆய்வு ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கம், மீனவர்களுக்குப் பயிற்சி, விரிவாக்கம், அடிப்படை வசதிகள், மீனவர்களின் சமூகப் பொருளாதாரத் திட்ட நிர்வாகம் போன்ற பணிகளைக் கவனிப்பதுடன், 634 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் மீன் வளம் பெருகிடப் பாடுபட்டு வருகின்றது.

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம், நீர்த்தேக்க மீன் வள மேம்பாடு, மீன் குஞ்சுப் பொரிப்பகங்கள் நிர்வகித்தல், மீன் விற்பனை, குறிப்பிட்ட மீன்பிடி துறைமுகங்களில் மீன் பதன நிலையங்கள், மற்றும் டீசல் (எரி பொருள் விநியோகம்) நிர்வகித்தல் போன்றவற்றைச் செயல்படுத்தி வருகின்றது. இரு ஆழ்கடல் நாவாய்களை இயக்குவதுடன், அதற்கான ஆலோசனைத் திறனையும் வளர்த்து வருகின்றது.

இந்த இரு நிறுவனங்களும், தூத்துக்குடி மீன் வளக் கல்லூரி மற்றும் தமிழகக் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்துடன் இணைந்து செயல்படுவதன் மூலம் வேலை வாய்ப்பு வசதிகளை உருவாக்குதல், கிராமப்புற வருவாயை அதிகப்படுத்துதல், அதனைத் தொடர்ந்து அந்நியச் செலாவணி ஈட்டி நாட்டிற்கு வழங்குதல் போன்றவற்றில் சிறந்த எதிர்காலத்தை எதிர்நோக்கியுள்ளன.

தல், சமுதாயக் கூடங்கள், குளங்கள் ஆழப்படுத்துதல் போன்ற 1,499 பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதர பணிகளாக பள்ளிக்கட்டடங்கள், ஊராட்சி மன்றக் கட்டடங்கள், கடைகள் அமைத்தல், நிழற்குடைகள் அமைத்தல், கழிவறை ஏற்படுத்துதல், சாலை மேம்பாட்டுப் பணிகள் போன்றவைகளின் கீழ் 2,463 பணிகள் ஊராட்சிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆக மொத்தம் 6,164 பணிகள் மேற்கொள்ளப்பட்டதில் 3,373 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

இந்திரா நினைவுக் குடியிருப்புகளான தொகுப்பு வீடுகள் 400 கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதர வீடுகள் முன்னேற்றத்தில் உள்ளன.

ஜீவன்தாரா கிணறு வெட்டும் பணிகள் 5 முடிக்கப்பட்டுள்ளன.

இதுவரையில் மொத்தத்தில் 865.66 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாண்டில் நமது மாவட்டத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ள மனித உழைப்பு நாட்கள் குறியீடு 80.65 இலட்சம். இதுவரை 31.62 இலட்சம் மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

### முதியோர் உதவித் தொகை

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1.5.89 முதல், ஆதரவற்ற முதியோர்கள், உடல் ஊனமுற்றோர், ஆதரவற்ற விதவைகள், ஆதரவற்ற வேளாண் தொழிலாளர்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஆகியோர்களுக்கு அரசு வழங்கி வந்த உதவித் தொகையை ரூ.35/-லிருந்து ரூ.50-ஆக உயர்த்தியுள்ளார். முன்பு விதிக்கப்பட்டிருந்த முதியோர் உதவித் தொகை வரம்பு முற்றிலும் நீக்கப்பட்டு விட்டது.

30.4.89 வரை முதியோர், ஆதரவற்றோர் உடல் ஊனமுற்றோர் 35,082 நபர்கள் உதவித் தொகை பெற்று வந்தனர். புதிய அறிவிப்பின்படி இன்றுவரை உதவித் தொகை பெறுபவர்கள் 40,504 நபர்கள். இம்மாவட்டத்தில் கூடுதலாக, தகுதியுள்ள அனைவருக்கும் வழங்கும் திட்டத்தின்படி இம்மாவட்டத்தில் 5,422 நபர்கள் பயன் பெற்றுள்ளனர்.

### தென் ஆர்க்காடு மாவட்டத்தில் வறட்சி நிவாரணப் பணிகள்

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் வறட்சி நிவாரணப் பணிகளுக்காகத் தமிழக அரசு நடப்பாண்டிற்கு ரூ.90.25 இலட்சம் ஒதுக்கியது.

புதிய திறந்தவெளிக் கிணறு அமைக்கும் திட்டத்தின் கீழ் ஊராட்சிகளுக்கு ரூபாய் 10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 34 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

உறை கிணறு அமைக்கும் திட்டத்தின் கீழ் ஊராட்சிகளுக்கு ரூபாய் 1.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 26 பணிகள் முடிக்கப்பட்டு உள்ளன.

திறந்த வெளிக் கிணறுகளை ஆழப்படுத்தும் பணிக்கு ஊராட்சிகளுக்கு ரூபாய் 10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 884 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

ஆழ் குழாய்க் கிணறுகளைச் சுத்தம் செய்யும் பணிக்கு ஊராட்சிகளுக்கு ரூபாய் 4.45 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 350 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

குடிநீர் ஆதாரங்களைச் சரி செய்தல் பணியின் கீழ், ஊராட்சிகளுக்கு ரூபாய் 4 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 124 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

மின் மோட்டார்கள் வாங்குதல் திட்டத்தின் கீழ் ஊராட்சிகளுக்கு 25.20 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 147 மின் மோட்டார்கள் வாங்கப்பட்டுள்ளன.

குடிநீர்க் குழாய்கள் நீட்டித்தல் திட்டத்தின் கீழ், ஊராட்சிகளுக்கு 5 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 61 பணிகளும், பேரூராட்சிகளுக்கு ரூபாய் 3 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 33 பணிகளும், நகராட்சிகளுக்கு ரூ.4.95 இலட்சம் ஒதுக்கீடு செய்து, 2 பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

**தகவல்: நா. தில்லை கோவிந்தன்**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
தென் ஆர்க்காடு மாவட்டம்

## சிதம்பரம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, லிட்.,
### 25, சின்ன காஜியார் தெரு, சிதம்பரம்

1. 1990-91-ஆம் அரைவைப் பருவத்திற்கு 1989 நவம்பர் முதல் கரும்பு பதிவு செய்யப்படும்.
2. 1990-91-ஆம் அரைவைப் பருவத்தில் 7 இலட்சம் டன் கரும்பு அரைக்கத் திட்டமிடப்பட்டு உள்ளது.
3. அனைத்து ஆலை அங்கத்தினர்களும் பங்கு எடுத்துள்ள ஏக்கர் அளவிற்குக் குறையாமல் கரும்பு பயிரிட்டுப் பதிவு செய்ய வேண்டும்.
4. கரும்பு பயிரிட/மறுதாம்புவிட அனுமதி கோரும் விண்ணப்பத்தினைக் களப்பணியாளர்களிடம் பெற்று, பயிரிட உள்ள/மறுதாம்பு கரும்புப் பரப்பினைத் தெரியப்படுத்த வேண்டும்.
5. தேவையான பரப்பு குறியீடு அடைந்தவுடன் விண்ணப்பங்கள் கொடுப்பதும், வாங்குவதும் நிறுத்தப்படும்.
6. அதிக விளைச்சலும், விலையும் பெற அதிகச் சர்க்கரை சத்துள்ள உயர் ரகக் கரும்பு பயிரிட்டுப் பயன்பெறுங்கள்.
7. தேவையான விதைக் கரும்பு ஆலை மூலம் வழங்கப்படும்
8. கரும்பைப் பாதுகாக்க பூச்சி, பூஞ்சான் மருந்துகள் பற்றி அறிய களப்பணியாளர்களை அணுகவும்
9. கரும்புப் பயிருக்குத் தேவையான உரம், பயிர்க் கடன் தொடக்கக் கூட்டுறவு வங்கி மூலம் உரிய காலத்தில் வழங்கப்படும்
10. அனைத்து உதவிகளையும் பெற, களப்பணியாளர்களையும், கரும்பு அலுவலர்களையும் அணுகவும்

**சிவ. சூரியன்**, எம்.ஏ., பி.எல்.
தனி அலுவலர்



துவக்கம்: 1983

### ஏழுமலை தொழில் நுட்பக் கல்லூரி
விழுப்புரம்

இ.எஸ். கல்வி அறக்கட்டளையின் கீழ் இயங்கும் இப்பயிலகத்தில் கீழ்க்கண்ட மூன்றாண்டுப் பட்டயப் படிப்பு வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

1. அமைப்பியல்
2. இயந்திரவியல்
3. மின்னியல்
4. மின்னணுவியல்
5. கணித அறிவியல்

துவக்கம் 1989

### தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி
விழுப்புரம்

இ.எஸ். கல்வி அறக்கட்டளையின் கீழ் இயங்கும் இப்பயிலகத்தில் கீழ்க்கண்ட மூன்றாண்டுப் பட்டயப் படிப்பு வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

1. கணித அறிவியல்
2. சத்துணவு அறிவியல்
3. தொழில் துறை நிர்வாகம்
4. வங்கித்துறை நிர்வாகம்
5. வணிகவியல்

**ஏ. சாமிக்கண்ணு**
தலைவர் இ.எஸ். கல்வி அறக்கட்டளை
தாளாளர்: ஏழுமலை தொழில் நுட்பக் கல்லூரி
தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி

**சே.ம. சீனுவாசன்**
முதல்வர்,
ஏழுமலை தொழில் நுட்பக் கல்லூரி,
விழுப்புரம்

**வ. ராக**
முதல்வர்
தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி
விழுப்புரம்









மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்
**திரு. கோ.சி. மணி அவர்கள்**

# முன்னேற்றம்

வேளாண்மை உற்பத்தியில் நல்ல முன்னேற்றம் காணவேண்டும் என்ற குறிக்கோளுடன் கழக அரசு பொறுப்பேற்றவுடன் பல சீரிய திட்டங்கள் தீட்டி அவற்றை முனைப்புடன் செயலாக்கி வருகிறது.

***சிறப்பு உணவு உற்பத்தித் திட்டம்:-***

அரிசி உற்பத்தியை அதிகரிக்கச் செயல்படுத்தப்படும் "சிறப்பு உணவு உற்பத்தித் திட்டம்" தஞ்சாவூர், திருச்சி, செங்கை அண்ணா, தென் ஆர்க்காடு, திருநெல்வேலி கட்டபொம்மன், வட ஆர்க்காடு-அம்பேத்கார், திருவண்ணாமலை - சம்புவராயர், புதுக்கோட்டை ஆகிய 9 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. சென்ற ஆண்டு இத்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.3.17 கோடி ஆகும். இந்த ஆண்டு இத்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.8.72 கோடி ஆகும். இதில் செப்டம்பர் மாதம் முடிய ரூ.485.49 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் தரமான சான்றிதழ் பெற்ற விதை கிலோ ஒன்றுக்கு ரூபாய் 1.50 வீதம் மானியத்தில் 18,600 மெட்ரிக் டன் விதைகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதேபோன்று சிங்க் சல்பேட், ஜிப்சம், பூச்சி மருந்து, களைக்கொல்லி, வேளாண்மைக் கருவிகள், 50 சதவிகிதம் மானியத்தில் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் மூலம் மேற்காணும் 9 மாவட்டங்களில் அரிசி உற்பத்



திலை 52.05 இலட்சம் டன்னாக உயர்த்தவும், மாநில அளவில் 60 இலட்சம் டன் அரிசி உற்பத்தி என்ற இலக்கில் திட்டமிடப்பட்டுள்ளது.

சிறப்பு உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் விதைக்கு ஒரு கிலோவிற்கு ரூ. 1/- என்ற அளவில் சென்ற ஆண்டு மானியம் வழங்கப்பட்டு வந்ததை இவ்வரசு பொறுப்பேற்றவுடன் கிலோ ஒன்றுக்கு ரூபாய் 1.50 மானியமாக வழங்கப்படுகிறது.

உயர் வேளாண் உற்பத்திக்கு இன்றியமையா இடுபொருள் தரமான விதையாகும். எனவே, தரமான விதைகள் கிடைக்கச் செய்ய விதைகள் யாவும் 10 கிலோ, 20 கிலோ மற்றும் 50 கிலோ அளவு பைகளில் விதைச்சான்று அட்டையுடன் பிரிக்காமல் கொடுக்க ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேலும், 10 கிலோ, 20 கிலோ விதைப் பைகளைக் கட்டணம் வசூலிக்காமல் இலவசமாக வழங்கவும், இதற்காக ஏற்படும் கூடுதல் செலவினை அரசே ஏற்றுக் கொள்ளவும் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

இதுகாறும் சான்று பெற்ற விதைகள் 14 சதவிகிதப் பரப்பளவிற்கு மட்டுமே வழங்கி வந்ததை மாற்றி இவ்வரசு பொறுப்பேற்றவுடன், 20 சதவிகிதப் பரப்பிற்கு விநியோகிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

### கரும்பு விலை நிர்ணயம்

மத்திய அரசு 1989-90ஆம் ஆண்டு கரும்பு அரவைப் பருவத்திற்கு 8.5 சதவிகிதம் சர்க்கரை கட்டுமானமுள்ள கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ. 200/- விலை நிர்ணயம் செய்துள்ளது. இதனை தமிழக அரசு டன் ஒன்றுக்கு ரூ. 250/- என நிர்ணயம் செய்து அறிவித்துள்ளது. தமிழகத்தில் கரும்பு அரவைத் திறன் சராசரியாக 8.5 சதவிகிதத்திற்கு மேல் உள்ளதால், அதன் கட்டுமான அடிப்படையில் குறைந்த பட்சம் டன் ஒன்றுக்கு ரூ. 289-ம், அதிக பட்சமாக ரூ. 341-ம் கிடைக்குமாதலால் கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகள் பயன் பெற வழி செய்யப்பட்டுள்ளது.

மாநில அரசு பரிந்துரையைத் தவிர, ஆலைகள் விவசாயிகளுக்குத் தங்களது லாபத்திலிருந்து கூடுதல் கரும்பு விலை நிர்ணயித்து, 1984-85-இல் 5 ஆலைகளில் ரூ. 4.20 கோடியும், 1985-86-இல் 6 ஆலைகளில் ரூ. 4.00 கோடியும், 1986-87-இல் 9 ஆலைகளில் ரூ. 5.50 கோடியும் கூடுதல் கரும்புத் தொகை வழங்கியுள்ளன.

இவ்வரசு பொறுப்பேற்றவுடன் 1987-88இல், 13 ஆலைகளில் 72,000 கரும்பு விவசாயிகள் பயன்பெறும் வகையில் ரூ. 14 கோடி கூடுதல் கரும்புத் தொகை வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. அதேபோன்று 1988-89 அரவைப் பருவத்திற்கு 15 ஆலைகளில், 84,600 கரும்பு விவசாயிகள் பயன்பெறும் வகையில் ரூ. 13 கோடி வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

### வேளாண்மைக் காடுகள்

தமிழ்நாட்டில் பரவலாகக் காணப்பெறும் தரமற்ற நிலங்களை லாபகரமாகப் பயன்படுத்த சுவீடன் நாட்டு உதவியுடன் கூட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் சிறு/குறு, ஆதி திராவிடர் மற்றும் மலைவாழ் விவசாயி ஒவ்வொருவருக்கும் 500 மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டத்திற்கென ரூ.63.30 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கூட்டுறவு வேளாண்மை இணையம் மற்றும் வேளாண்மைத் துறை மூலமாகச் சென்ற ஆண்டில் வறட்சிக்கு இலக்கான பகுதிகளில் சிறு/மற்றும் குறு விவசாயிகளுக்கு எக்டேருக்கு ரூ. 200 மதிப்புள்ள உரம் தற்போது இலவசமாக வழங்க ரூ. 365 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டதில், 30.9.89 வரை ரூ. 365 இலட்சமும் செலவிடப்பட்டுள்ளது.

வாலிபர்கள் ஆசிரியர்களாக வேண்டும். உலகத்தைக் கிராமத்தாருக்குக் காட்டவேண்டும். வாலிபர்கள் வைத்தியர்களாக வேண்டும். உடல்,உள்ளம் இரண்டிலும் உள்ள நோய் தீர்க்கும் மருந்தளிக்க வேண்டும். வாலிபர்கள் பாலம் அமைக்க, நீர்த்தேக்கம் அமைக்க, உழவு முறையை மாற்றப் பணிபுரிய வேண்டும். பழமையின் பிடியிலிருந்து மக்களைப் பக்குவமாக விடுவித்துப் புதுமையின் சோபிதத்தைக் காட்டிப் புத்துலகு அமைக்க வேண்டும் வாலிபர்கள். இதற்கான திறமும் தீரமும் தேவை. அறிவு ஆராய்ச்சி தேவை. இதற்கான வெளி உலகத் தொடர்பு தேவை.

—பேரறிஞர் அண்ணா

### ஆதி திராவிட விவசாயிகளுக்குச் சலுகை


ஆதி திராவிட விவசாயிகளுக்கு விதை மற்றும் பூச்சி மருந்துகள் வாங்க, சென்ற ஆண்டு வரை 25 சதவிகித மானியம் இருந்ததைக் கழக அரசு பொறுப்பேற்றவுடன் 50 சதவிகிதம் என உயர்த்தி உத்தரவிடப்பட்டுள்ளது. இதற்காக ரூ.39 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆதி திராவிட விவசாயிகளுக்கு 50 சதவிகித மான்ய விலையில் வேளாண்மைக் கருவிகள் வழங்க ரூ.40 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் பயிற்சி வழித் தொடர்புத் திட்டத்தின்கீழ் தொடர்பு கொள்ளப்படும் விவசாயிகளில் குறைந்த பட்சம் 50 சதவிகிதம் தொடர்பு விவசாயிகள், நலிவுற்ற பிரிவினரான ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சேர்க்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

### பயிற்சி

வேளாண்மையில் மகளிர் பெரும் பங்கு வகிக்கின்றனர். இதுவரையில் மகளிர் மேம்பாட்டிற்கெனத் தனியாகச்சிறப்புத் திட்டங்கள் எதுவும் வகுக்கப்படவில்லை. இதனைக் கருத்தில்கொண்டு வேளாண்மை மகளிர் மேம்பாட்டிற்காக 6 மாவட்டங்களில் புதிய திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. கிராம அடிப்படையில் 80 பயிற்சி முகாம்களும், உழவர் பயிற்சி நிலையங்களில் 16 பயிற்சி முகாம்களும் அவர்களுக்கென நடத்தப்படும். இத்திட்டத்திற்கென ரூ. 26.56 இலட்சம் ஒதுக்கப்பட்டு இத்திட்டம் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் 12 உழவர் பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொன்றிலும் 300 உழவர் விவாத குழுக்கள் செயல்படுகின்றன. இம்மன்ற அமைப்பாளர்களுடைய பணியைச் சீரமைத்திடும் வகையில் ஆண்டுக்கு ஒருமுறை உழவர் மன்ற அமைப்பாளர்களை மாற்றியமைக்க உத்திரவிடப்பட்டுள்ளது.



● வாலிபர்களுக்கு வெறும் உற்சாகமும், துணிவும், தியாகபுத்தியும் மாத்திரம் இருந்தால் போதாது. நன்மை, தீமையை அறியும் குணமும், சாத்தியம், அசாத்தியம் அறியும்குணமும், ஆய்ந்து ஓய்ந்து பார்க்கும் தன்மையும் இருந்தால்தான் வாலிபர்கள் பொதுவில் பயன்படக்கூடியவர்கள் ஆவார்கள்.

● எதற்கும் சலியாது உழைத்துத் துன்பம் வந்தாலும் ஏச்சு வந்தாலும் எவ்வித இழப்புகள் ஏற்பட்டாலும் அதைப் பொருட்படுத்தாது எதிர்த்துழைத்துக் கடைசிவரை கொள்கையை நழுவ விடாது காத்து நிற்பதே உண்மைத் தொண்டின் குணமாகும்.

—தந்தை பெரியார்

### இதர நிர்வாகச் சீர்திருத்தங்கள்

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டு வேளாண் பணிகளைத் திட்டமிடுதல், செயலாக்குதல் போன்றவற்றில் முக்கிய பங்கு ஏற்கும் வகையில் ஊராட்சி ஒன்றிய அளவில், வேளாண் துறையில் இடுபொருள் மற்றும் பயிற்சி வழித் தொடர்புத் திட்டப் பணியாளர்களை, ஊராட்சிஒன்றியக் குழுவின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளது. இதற்கென வேளாண்மை வளர்ச்சி அலுவலர் என்ற பணிப் பிரிவினையும் அரசு தோற்றுவித்துள்ளது.

ஒவ்வொரு மாதமும் வேளாண்மை விரிவாக்க மையங்களில் ஒரு குறிப்பிட்ட நாளில் பூச்சி மருந்துகளைச் சோதனைக்கு எடுத்து அனுப்பத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி சென்ற 7.8.89 அன்று 2,395 மாதிரிகள் எடுக்கப்பட்டு அதில் 100 மாதிரிகள் சோதனைக்குப்பின் தரமற்றவை என அறியப்பட்டு நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. தரமற்ற மருந்துகளைத் தயாரிக்கும் நிறுவனங்களை அரசு அங்கீகாரப்பட்டியலிலிருந்து ஒதுக்கிவைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வேளாண்மை விரிவாக்க மையங்களுக்கு பூச்சி மற்றும் பூசன மருந்துகள் வாங்குவதற்குத் தொழில் நுட்ப உயர் மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

வேளாண்மைத் துறையின் மூலம் அளிக்கப்படும் எல்லா மானியங்களின் விவரமும் வேளாண்குடி மக்கள் அறிந்து பயன்பெறும் வகையில் எல்லா வேளாண் விரிவாக்க மையங்களிலும் மானியங்கள் பற்றிய விவரங்கள் அன்றாடம் எழுதப்பட்டு வருகிறது. இதுவன்றி, துறையின் மூலம் வழங்கப்படும் இடுபொருட்களான மினிகிட் மற்றும் விசைத் தெளிப்பான் போன்ற வேளாண் கருவிகள் அத்தொகுதி சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லது முக்கிய அலுவலர்கள் முன்னிலையில் வழங்கப்படுகின்றன.

இத்துறையின் பணிகளில், வரப்பெறும் பொதுமக்களின் குற்றச்சாட்டுகளை விரைந்து களைய, சம்பந்தப்பட்ட மாவட்ட உயர் அலுவலர்களின் தலையீடு இன்றி விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்கவும், வேளாண் விரிவாக்க மையங்களில் விற்பனையாகும் இடுபொருட்கள் உரிய நபருக்குச் சென்றடைவதை திடீர் சோதனைகள் மூலம் உறுதிப்படுத்தவும், தலைமை இடத்தில் அதற்கெனப் "புலனாய்வுப் பிரிவு" தனியே வேளாண்மை இயக்குநரின் நேரடிக் கண்காணிப்பின்கீழ் அமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் பணியாளர்களிடையே விழிப்புணர்ச்சியும், பொறுப்புணர்ச்சியும் அதிகரித்துள்ளன.

காவிரி டெல்டா விவசாயிகளின் வேண்டுகோளுக்கிணங்க, தஞ்சாவூர் மாவட்டம் முழுமையும், திருச்சி, புதுக்கோட்டை மற்றும் தென் ஆர்க்காடு மாவட்டத்தின் சில பகுதிகளிலும் இயங்கும் வேளாண்மை விரிவாக்க மையங்கள் செயல்படும் நேரம் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இதன்படி அவை காலை 9.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரையிலும், பிற்பகல் 3.00 மணி முதல் மாலை 6.00 மணி வரையிலும் செயல்படும். இந்த ஏற்பாடு 31.12.89 வரையிலும் நீடிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் இவ்வாண்டு மேலும் 4 புதிய வேளாண்மை விரிவாக்க மையங்கள் ரூ.1.31 இலட்சம் செலவில் திறக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் திருச்சி மாவட்டத்தில் மேலும் ஒரு வேளாண்மைக் கல்லூரி குமுலூரில் இந்த ஆண்டு முதல் திறக்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது.

### வேளாண்மைப் பொறியியல் துறை

விவசாயிகளின் தேவைக்கேற்ப இந்த ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருவாரூர் வேளாண்மைப் பொறியியல் பணி மனைக்கு 14 புதிய டிராக்டர்களும், உபகரணங்களும் ரூ.18.36 இலட்சம் செலவில் வாங்கி வழங்கப்பட்டு தற்சமயம் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன

### குடிமராமத்துப் பணிகள்

தஞ்சை மாவட்டத்தில் பாசன வாய்க்கால்கள் பல ஆண்டுகளாகக் குடி மராமத்துப் பணி செய்யப்படாமையால், நீர்ப்பாசனம் தடைப்பட்டு நீர்ப் பற்றாக்குறையும் நிலவி வந்தது. இதனைச் சரி செய்திட ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் சுமார் 20,000 ஏக்கர் பரப்பில் ரூ.11.50 இலட்சம் செலவில் குடி மராமத்துப் பணி மேற்கொள்ளப்பட்டு, சீரான பாசனத்திற்கு வழி வகை செய்யப்பட்டுள்ளது.

### கசிவுநீர்க் குட்டைகள்

பல்வேறு மாவட்டங்களில் 1989-90-ஆம் ஆண்டிற்கு 446 கசிவுநீர்க் குட்டைகள் அமைத்திட ரூ.553.50 இலட்சம் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்சமயம் 174 கசிவுநீர்க் குட்டைகள் அமைக்கும் பணி முழுமையாக முடிவடைந்துள்ளது. இதற்காக ரூ.340.156 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. மேலும் 272 கசிவுநீர்க் குட்டைகள் தண்ணீர் தேங்கச் செய்திடும் வகையில் பணி நடைபெறுகிறது.

(25.10.1989 அன்று மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்கள் அளித்த பத்திரிகைச் செய்திக் குறிப்பிலிருந்து)

# வளமான வாழ்வுக்கு மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் அளிக்கும் விஜய் உரங்கள்




VIJAY

மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்

இந்திய அரசு-பொதுத்துறை நிறுவனம்

மணலி, சென்னை 600 068

தேசிய பொருளாதாரத்தின் மூலாதாரம், பொதுத்துறை... அதன் வலிமையைப் பெருக்குவோம்.

HTA 7343




பயன் அடைந்தோர் பகர்வன:

# உடல் நலம் காக்க உதவும் திட்டம்

டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி

நினைவு மகப்பேறு உதவித் திட்டம்



அன்னமேரி

**டா**க்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தின் கீழ், கருவுற்ற தாய்மார்களுக்கு அரசு நிதி உதவியாக ரூ. 200-வீதம் செங்கை-அண்ணா மாவட்டத்திற்கு 15,600 தாய்மார்களுக்கு ரூ. 31.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அக்டோபர் 15-ந் தேதி வரை, 5,320 கருவுற்ற தாய்மார்களுக்கு ரூ. 10.64 இலட்சம் அளவிற்குப் பயனடைய தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் கருவுற்ற தாய்மார்களுக்கு உதவித் தொகையினை, செங்கை-அண்ணா மாவட்டம் குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய விழாவில் கலந்து கொண்டு மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் வழங்கினார்.

செங்கை-அண்ணா மாவட்டம் உத்திரமேரூர், மல்லிகாபுரம்-சகாயம் மனைவி அன்னமேரிக்கு முதல் பிரசவத்தில் ஜெயசீலன்-ஜெயராஜ் என்ற இரட்டைக் குழந்தைகள். இது இரண்டாவது பிரசவம். விவசாயக் கூலி வேலை. வறட்சியாய் இருப்பதால், எப்போதாவது கூலிவேலை கிடைக்கும். இந்நிலையில் அரசு வழங்கும் 200 ரூபாய் உதவி அவர்களைப் பெரிதும் மகிழ்வித்திருக்கிறது.

''பிறக்கிற குழந்தை நல்லபடியாக ஆரோக்கியமாகப் பிறக்கவும், என்போன்ற தாய்மார்களின் உடல் நலம் காக்கவும் இந்தத் திட்டம் ரொம்பவும் உதவியா இருக்கு. அரசுக்கு நாங்க நன்றியைத் தெரிவிச்சிக்கிறோம்'' என்று கூறுகிறார் திருமதி அன்னமேரி.

உத்திரமேரூர் மல்லிகாபுரம் மேல்வீதியைச் சேர்ந்த ராஜீவின் மனைவி ஆரோக்கிய மேரி (வயது-22), ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குச் . சென்று விவரம் கேட்டு,இப்போது உதவி பெற்றுள்ளார். வருமானம் போதாத நிலையில், அரசு தருகின்ற இந்த உதவிக்கு நாங்கள் நன்றிக் கடன் பட்டுள்ளோம்'' என்கிறார் இவர்.

—எம். கலைமணி
உதவி மக்கள்-தொடர்பு அலுவலர்
செங்கை-அண்ணா மாவட்டம்



ஆரோங்கிய மேரி

# மதுரை மாவட்டத்தில் தொழில் வளர்ச்சி

ரெ. இராவணன்,
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
மதுரை மாவட்டம்

பழம் பெருமை வாய்ந்ததும் சரித்திரப் புகழ் மிக்கதுமான மதுரை மாவட்டம், பலவகைகளில் முன்னேற்றம் கண்டு வருகிறது. தற்பொழுது மதுரை மாவட்டத்தில் 5,871 சிறுதொழில்களும், 36 கனரகத் தொழில்களும், இயங்கி வருகின்றன. இந்நிலையில் மேலும் முன்னேற்றம் கண்டிட தமிழக அரசும், மத்திய அரசும் தேவையான எல்லா உதவிகளும், சலுகைகளும் அளித்து ஊக்கமளித்து வருகின்றன. அரசின் குறிக்கோளினைச் செயல்படுத்தும் வகையில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளும், மதுரை மாவட்டத் தொழில் மையமும் செயலாற்றி வருகின்றன.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிய அளவில், அந்தப் பகுதிகளில் என்னென்ன தொழிலுக்கு வாய்ப்பு உள்ளது, என்னென்ன உதவிகள், சலுகைகள் தரப்படுகின்றன, என்பது போன்ற பல விளக்க உரைகள் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களைக் கொண்டு கொடுக்கப்படுகிறது. இதன்மூலம் தொழில் முனைவோர்களுக்கு யோசனைகள் கூறி ஊக்குவிப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இது தவிர பாலிடெக்னிக்குகள், பொறியியல் கல்லூரிகள், பட்டப்படிப்புக் கல்லூரிகளிலும் விளக்கவுரைக் கூட்டங்களும், கருத்தரங்குகளும் நடத்தப்படுகின்றன. இதேபோன்று முன்னோடி வங்கியும், சிறுதொழில் சங்கமும் பல கருத்தரங்குகள் நடத்தியுள்ளன.

தொழில் முனைவோர் தொழில் துவங்கும்போது பல்வேறு அரசுத் துறைகளிடமிருந்து பல்வேறு ஒப்புதல்கள், உரிமங்களைப் பெற்றிட வேண்டும். இதனால் ஏற்படுகின்ற சிரமத்தினையும், காலதாமதத்தினையும் போக்கி, அவர்களுக்குத் தன்னம்பிக்கையை ஏற்படுத்திட மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்டத் தொழில் மையப் பொது மேலாளரை அமைப்பாளராகக் கொண்ட ஒருமுனைத் தீர்வுக்குழு அமைக்கப்பட்டுள்ளது. மாவட்டத் தொழில் மையம் சம்பந்தப்பட்ட துறைகளுடன் தொடர்பு கொண்டு துரிதமான உரிமங்கள் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்கிறது. அவ்விதமும் உரிமங்கள் பெறுவதில் சிரமம் இருந்தால், மாதம் இருமுறை கூடும் இக்குழுவின் கூட்டத்தில் பரிசீலித்து தொழில் முனைவோருக்குத் தேவையான உரிமங்களைக் காலதாமதமின்றி வழங்கிட ஆவன செய்கிறது. இதன் அடிப்படையில் 1988-89-இல் மட்டும் 19 கூட்டங்கள் நடத்தப்பட்டு 135 சிறுதொழில் நிறுவனங்களுக்குப் பல்வேறு உரிமங்களும் மின் இணைப்பும் கிடைத்திட உதவி செய்யப்பட்டுள்ளது. 1989-90-இல் 4 கூட்டங்கள் நடத்தப்பட்டு 30 நிறுவனங்களுக்கு உரிமங்கள் பெற்றுத் தரப்பட்டுள்ளன.



தமிழர் வாழ்வு தழைக்க தமிழ் மணம் நாடெங்கும் செழித்துக் கொழிக்க, தமிழர் தமிழராய் வாழ, தன்மானத்துடன் வாழ, தமிழன் தன்னைத்தான் உணர்ந்து தன்னம்பிக்கை பெற்றுத் தன்னையும், தன்னைச் சுற்றிலுமுள்ள சமுதாயத்தின் சூழ்நிலையைத் தெரிந்து — புரிந்து - தெளிந்து - வாழும் நிலைக்கான வகையில்; வழியில், முறையில் முத்தமிழ் விளங்க வேண்டும், பயன்பட வேண்டும், பயன்படுத்தப்பட வேண்டும்.

இதனை இன்னும் இலகுவாக்கும் முறையில் 'கிரீன் சானல் கிளியரன்ஸ்' திட்டப்படி ரூ.10 இலட்சம் வரை முதலீடு செய்யக்கூடிய நிறுவனங்கள், தொழில் அமைப்பதற்கு என வரையறுக்கப்பட்ட இடத்தில் தொழில் துவங்கினால் எந்தத் துறையுடனும் முன் அனுமதியும் உரிமங்களும் பெறத் தேவையில்லை. எந்த இடத்தில் சிறுதொழில்களை நிறுவினால் இச்சலுகை கிட்டும் என்பதற்குச் சர்வே எண் அடங்கிய பட்டியல் மாவட்டத் தொழில் மையத்தில் உள்ளது. ஆனால், மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திடமிருந்து ஒப்புதல் பெறவேண்டிய நிறுவனங்களுக்கு இது பொருந்தாது. வரையறுக்கப்பட்ட இடத்தில் தொழில் துவங்கியவர்கள் தொழிலை ஆரம்பித்த பின்பு சம்பந்தப்பட்ட துறைகளிடமிருந்து ஒப்புதல் பெற்றாக வேண்டும்.

புதிய தொழில்களைத் துவங்க ஊக்குவிப்பதற்காக மத்திய அரசு பல இடங்களை வளர்ச்சி மையங்களாக அறிவிக்க உள்ளது. இம்மாவட்டத்தில் திருமங்கலம்-விருதுநகர் சாலையில் அருகில் உள்ள பகுதியை வளர்ச்சி மையமாக அறிவிக்கும்படி மாநில அரசு மைய அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது. அது செயல்பாட்டிற்கு வந்தால் மதுரை மாவட்டம், தொழில் வளர்ச்சியில் மேலும் முன்னேற்றம் காண உதவியாக இருக்கும்.

குறைந்த மின் அழுத்த மின்சாரத்தைப் பயன்படுத்தும் புதிய சிறுதொழில் நிறுவனங்களுக்கு, முதல் மூன்று ஆண்டுகளுக்கு முறையே 30 சதவிகிதம், 20 சதவிகிதம் மற்றும் 10 சதவிகிதம் என்ற விகிதத்தில் அவர்கள் செலுத்திய மின்தொகையில் மானியமாக வழங்கப்படுகிறது. 1988-89-இல் ரூ.2.71 இலட்சம் மின் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

1.4.81-க்குப் பின்னும், 8.5.88-க்கு முன்னும் ஆரம்பிக்கப்பட்ட சிறுதொழில் நிறுவனங்களுக்கு உற்பத்தி துவங்கிய தேதியிலிருந்து ஆறு ஆண்டுகளுக்கு வட்டியில்லா விற்பனை வரிக் கடன் அளித்து வருகிறது.

இத்திட்டத்தின்படி நிலையான மூலதனத்தில் 8 சதவிகித அல்லது விற்பனை வரி செலுத்தப்பட்ட தொகை அல்லது ரூ.1.25 இலட்சம் இதில் எது குறைவோ அதனை இத்திட்டத்தின் கீழ் கடனாகப் பெறலாம். ஆனால் குறைந்தபட்சம் ஆண்டுக்கு ரூ.4,000/-க்குக் குறையாமல் விற்பனை வரி செலுத்தும் நிறுவனங்கள் மட்டுமே இதனைப் பெறத் தகுதி உடையதாகும். 1988-89-இல் ரூ.8.96 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் மேலும் இலகுவாக்கப்பட்டுள்ளது. 9.5.88-க்குப் பிறகு ஆரம்பிக்கும் சிறுதொழில் நிறுவனங்கள் தகுதிக்கேற்ப, முதல் மூன்று ஆண்டுகளில் வசூலிக்கும் விற்பனை வரியை அரசுக்குச் செலுத்த வேண்டியதில்லை. இந்தத் தொகை வட்டியில்லாக் கடனாகக் கருதப்படும். இரண்டாவது மூன்று ஆண்டுகளில் வசூலிக்கும் விற்பனைவரியைச் செலுத்திவிட்டு பிறகு கடனாகப் பெற்றுக் கொள்ள வேண்டும். 7-வது ஆண்டிலிருந்து கடன் தொகையைத் திருப்பிச் செலுத்த வேண்டும். இந்தத் திட்டத்தின் மூலம் 8 நிறுவனங்களுக்கு ரூ.16.56 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

[illegible] படித்த இளைஞர்களிடையே நிலவுகின்ற வேலை இல்லாத் திண்டாட்டத்தினைப் போக்கிட இந்தியப் பிரதமரின் சுயவேலை வாய்ப்புத் திட்டம் 1983-84 முதல் அமல்படுத்தப்பட்டு வருகின்றது. இதன்படி 18 வயதுக்கு மேற்பட்டு 35 வயதிற்குட்பட்ட 10 ஆம் வகுப்பு தேறிய படித்த வேலையில்லாதவர்கள் பயன் பெறலாம். உற்பத்தித் தொழில், சேவைத் தொழில் மற்றும் வியாபாரம் செய்வதற்கு முறையே ரூ.35,000, ரூ.25,000, மற்றும் ரூ.15,000, 10 சதவிகித வட்டி விகிதத்தில் 25 சதவிகித மானியத்துடன் கடன் பெற, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு மாவட்டத் தொழில் மையம் பரிந்துரை செய்து, பெற்றுத் தருகிறது.

இத்திட்டத்தின் வாயிலாக 1988-89-ஆம் ஆண்டில் 873 நபர்களுக்குச் சுமார் 161 இலட்ச ரூபாய் கடன் ஒப்பளிப்பு செய்யப்பட்டு இதுவரை 386 நபர்களுக்கு ரூ.69.15 இலட்சம் கடன் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. 1989-90-ஆம் ஆண்டின் 450 நபர்களுக்கு இத்திட்டத்தின் மூலம் சுயவேலைவாய்ப்பு ஏற்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

பல காரணங்களினால் நலிவுற்ற மற்றும் நலிவுறும் நிலையில் உள்ள சிறுதொழில்களைக் கண்டறிந்து, அவற்றின் புனர்வாழ்வுக்காக மாவட்டத் தொழில் மையத்தின் பொது மேலாளரைத் தலைவராகவும், முதன்மை வங்கி, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ஆகியோர் நிதி நிறுவனங்களின் உறுப்பினர்களையும் கொண்ட மாவட்ட அளவிலான குழு ஒன்று அமைக்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது. இக்குழு நலிவுற்ற சிறுதொழில் புனர்வாழ்வு பெற வங்கிகள் மூலம் கடன் பெற்றிட உதவி செய்கிறது. இத்துடன் வங்கிகள் கூடுதலாக வழங்கும் நடைமுறை மூலதனத்தைப் பெறும் வகையில் தமிழக அரசு ரூ.50,000 வரை விதைப் பணமாக வழங்குகிறது.

இத்திட்டத்தின் கீழ் இதுவரை 36 சிறுதொழில் நிறுவனங்களுக்குக் கடன் திருப்பிச் செலுத்தும் கால முறை மாற்றி அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. 4 நிறுவனங்களுக்கு நிலுவை வட்டித் தொகையினை அசல் கடன் தொகையாக மாற்றி வழங்கிட ஆவன செய்யப்பட்டுள்ளது. 8 நிறுவனங்களுக்குத் தண்ட வட்டி மற்றும் காலக்கெடு முறையைத் தள்ளி வைத்தல் போன்றவற்றிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 3 நிறுவனங்களுக்கு மேலும் கடன் தொகை பெற்று தொழில் நடத்துவதற்கு விதைப் பணம் கொடுத்து உதவி செய்யப்பட்டுள்ளது.


1989-90 முதல் 1993-94 முடிய உள்ள ஐந்து ஆண்டுகளில் சுமார் ரூ. 4,911 இலட்சம் முதலீட்டில் 3,200 புதிய சிறுதொழில் நிறுவனங்கள் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் சுமார் 21,600 நபர்களுக்கு வேலை அளிக்க வாய்ப்புள்ளது.

இதுபோன்ற எண்ணற்ற உதவிகளைத் தொழில் முனைவோருக்காக அரசு செய்கிறது. மாவட்டத் தொழில் மையத்தின் மூலமாக இவற்றை நன்கு பயன்படுத்தி, நாடும் முன்னேற, தொழில் ஆர்வமுடையோர் முன்வருவார்கள் என்பதில் ஐயம் ஏதுமில்லை.

## தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஊரகம் மற்றும் நகர்ப் பகுதிகளில் குடிநீர் வழங்கும் திட்டங்களைச் செயலாற்றி வருகிறது. ஊரகப் பகுதிகட்குக் குடிநீர் வழங்கும் பணிக்கு முதலிடம் அளிக்கப்பட்டு பலவகையான திட்டங்கள் செயலாக்கப்பட்டு வருகின்றன

தமிழக அரசு வறட்சி நிவாரணத்தின் கீழ் திட்டம் ஏற்கப்படாத குடியிருப்புகளில் 1,500 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டு, இப்பணி நிறைவேற்றப்பட்டு விட்டது. வறட்சி நிவாரணப் பணி நீங்கலாக ஊரகக் குடிநீர்த் திட்டங்களுக்கு ரூ.59.18 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு இதுவரை ரூ.21.5 கோடி செலவில் 3,500 குடியிருப்புகட்குக் குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது.





அட்டை சொல்லும் செய்தி :

# தமிழக அரசு திரைப்பட விருதுகள் வழங்கும் விழா



மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுடன் திரு. கமல்ஹாசன், திரு. ரஜினிகாந்த்

தமிழக அரசு திரைப்பட விருதுகள் வழங்கும் விழா, 15.11.89 அன்று சென்னை வள்ளுவர் கோட்ட முகப்புத் திடலில் சிறப்புற நடைபெற்றது.

அலை கடலெனத் திரண்டிருந்த மக்கள் கூட்டத்தினரிடையே சிறந்த திரைப்படங்கள், சிறந்த நடிகர், நடிகையர், தொழில் நுட்ப வினைஞர்கள், கலைத்துறை வித்தகர்களுக்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 1988-ஆம் ஆண்டிற்கான திரைப்பட விருதுகளை வழங்கினார்.



வரவேற்புரையாற்றிய செய்தி-சுற்றுலாத் துறைச் செயலர் திருமதி ஜெயந்தி இ.ஆ.ப.

திரைப்பட நடிகர் திரு. கமல்ஹாசன் விழா நிகழ்ச்சியினைத் தொகுத்து வழங்கினார்.

செய்தி-சுற்றுலாத் துறைச் செயலர் திருமதி ஜெயந்தி இ.ஆ.ப. அனைவரையும் வரவேற்றார்.


மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நல அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்தார்.



நன்றியுரை நவின்ற செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. கி. இராஜமாணிக்கம் இ.ஆ.ப.







அமைச்சர் தலைமை உரையில்,
''தமிழ்த் திரைப்பட உலகிலே புதிய சாதனைகளைப் படைத்தவர் கலைஞர் அவர்கள், புரட்சிகளை உருவாக்கியவர் கலைஞர் அவர்கள், பராசக்தி, மனோகரா போன்ற படங்களில் சமுதாய சீர்திருத்தக் கருத்துக்களைப் புகுத்தி, திரையுலகிலே ஒரு திருப்பு முனையை உருவாக்கியவர் கலைஞர் அவர்கள், திரைப்படத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிற பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களை வாழ வைப்பவர் கலைஞர் அவர்கள், திரையுலகிலே ஒரு சுமுகமான சூழ்நிலையை உருவாக்கி, திரைப்படத் தொழில் வளர உறுதுணையாக இருப்பவர் கலைஞர் அவர்கள்'' என்றார்.

## இதயத்திற்கு இதம் தருகிற விழா!

**மாண்புமிகு முதல்வர் கலைஞர்**

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் விருதுகள் வழங்கிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''இன்று நடைபெறுகின்ற இந்த விழா, எல்லா விழாக்களைக் காட்டிலும் என் இதயத்திற்கு இதம் தருகின்ற ஒரு விழா! ஏறத்தாழ நாற்பது அல்லது நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக, எந்தக் கலைத்துறையிலே நான் ஈடுபாடு கொண்டு இங்கே அமர்ந்திருக்கின்ற பலரை என்னுடைய நண்பர்களாக, உடன்பிறப்புகளாகப் பெற்றிருக்கிறேனோ, அவர்களெல்லாம் கலந்து கொள்கின்ற ஒரு நிகழ்ச்சியிலே, அவர்களில் சிலருக்கு விருது வழங்குவதிலும், அவர்களைப் பாராட்டுவதிலும் நான் பெருவகை கொள்கின்றேன். பெருமிதம் அடைகின்றேன். [illegible] ஒன்றை ஆற்றிய மனநிறைவை அடைகின்றேன்.



# 1988-ஆம் ஆண்டிற்கான திரைப்பட விருதுகள் பெற்ற வித்தகர்கள்

| | | |
|---|---|---|
| 1. | சிறந்த படம் | : |
| | முதல் பரிசு | : பூ பூத்த நந்தவனம் |
| | இரண்டாம் பரிசு | : பாசப் பறவைகள் |
| | மூன்றாம் பரிசு | : அக்னி நட்சத்திரம் |
| | சிறப்புப் பரிசு | : இது நம்ம ஆளு |
| 1. | சிறந்த இயக்குநர் | : பி.ஆர். தேவராஜ் (செந்தூரப்பூவே) |
| 2. | சிறந்த நடிகர் | : விஜயகாந்த் (செந்தூரப்பூவே) |
| 3. | சிறந்த நடிகை | : சரிதா (பூ பூத்த நந்தவனம்) |
| 4. | சிறந்த நடிகர் (சிறப்புப் பரிசு) | : கார்த்திக் (அக்னி நட்சத்திரம்) |
| 5. | சிறந்த நடிகை (சிறப்புப் பரிசு) | : ராதிகா (பூந்தோட்டக் காவல்காரன்) |
| 6. | சிறந்த கதையாசிரியர் | : ஆர்.பி. விஸ்வம் (சிகப்புத்தாலி) |
| 7. | சிறந்த உரையாடல் ஆசிரியர் | : எம். எஸ். மது (இல்லம்) |
| 8. | சிறந்த இசையமைப்பாளர் | : இளையராஜா |
| 9. | சிறந்த பாடலாசிரியர் | புலமைப்பித்தன் |
| 10. | சிறந்த பின்னணிப் பாடகர் | : ஜேசுதாஸ் |
| 11. | சிறந்த பின்னணிப் பாடகி | : சித்ரா |
| 12. | சிறந்த ஒளிப்பதிவாளர் | : அஜெயன் வின்செண்ட் (பாடாத தேனீக்கள்) |
| 13. | சிறந்த ஒலிப்பதிவாளர் | : சம்பத் (ஏவி எம்) |
| 14. | சிறந்த சண்டைப் பயிற்றுநர் | : திருவாரூர் எம்.எஸ். தாஸ் (சிகப்புத் தாலி) |
| 15. | சிறந்த கலை இயக்குநர் (ஆர்ட் டைரக்டர்) | : பி. நாகராஜராவ் (பாட்டி சொல்லைத் தட்டாதே) |
| 16. | சிறந்த நடன ஆசிரியர் | : சுந்தரம் |
| 17. | சிறந்த திரைப்படத் தொகுப்பாளர் | : பி. லெனின் |
| 1. | கலைத்துறை வித்தகருக்கு ராஜா சாண்டோ விருது | : 1. மார்க்கஸ் பார்ட்லே<br>2. டைரக்டர் கிருஷ்ணன் |
| 2. | கலைத்துறை வித்தகருக்கு கலைவாணர் விருது | : 1. மனோரமா<br>2. வி.கே. ராமசாமி |
| 3. | கலைத்துறை வித்தகருக்கு எம். ஜி. ஆர். விருது | 1. நடிகர் திலகம் சிவாஜி கணேசன்<br>2. ரஜினிகாந்த் |

# நலிவுற்ற கலைஞர்கள் நலம்பெற நல்ல ஆலோசனை வழங்குவீர்!

**முதல்வர் கலைஞர்**

''நான் என்னுடைய இல்லத்திலே இருந்து தலைமைச் செயலகத்திற்குச் செல்வதற்காகக் காரிலே ஏறும்பொழுது, ஒரு கண்ணற்ற-வயதான-அடையாளமே தெரியாத-உருக்குலைந்த-எலும்பும் தோலுமாக ஒரு கிழவி, நான் வருவதை மற்றவர்கள் அறிவித்த காரணத்தால், நான் என்று உணர்ந்து, என்னைக் கட்டிப் பிடித்துக் கொண்டு, என்னுடைய உடலை அவருடைய கண்ணீரால் நனைத்தார். மன்னிக்க வேண்டும் கலைஞர்கள்-அடையாளம் மாறிப் போய்விட்ட காரணத்தால், எனக்கு ஆணவம் வந்து விட்ட காரணத்தால் அல்ல-அந்தப் பெருமாட்டிக்கு உருவ அடையாளமே மாறிப் போய் விட்ட காரணத்தால் 'யார் இந்த அம்மையார்?' என்று கேட்டேன். பக்கத்திலே உள்ளவர்கள், அங்கமுத்து என்று சொன்னார்கள்.

தமிழக மக்களுடைய உள்ளங்களையெல்லாம் ஒரு காலத்திலே கவர்ந்தவர் அந்தப் பழம்பெரும் நடிகை, அந்த நிலையிலே நான் பார்த்தவுடன், உடனடியாக அவர்களுக்கு இரண்டாயிரம் ரூபாய் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து வழங்குமாறு செய்தேன்.

''அவர்களுக்கே தெரியவில்லை-70-ஆம் ஆண்டு முதல் கிட்டத்தட்ட 18 ஆண்டுக் காலமாக-எனக்கு அன்றைக்கு அளிக்கப்பட்ட அந்த ஒரு இலட்ச ரூபாய் நிதியிலிருந்து வருகின்ற வட்டியிலிருந்து-மாதா மாதம் நூறு ரூபாய் தரப்படுகிற விஷயமே அவர்களுக்கே கூடத் தெரியவில்லை. அதற்குப் பிறகு அவர்களுக்கு விளக்கப்பட்டு அவருக்கு இரண்டாயிரம் ரூபாய் தரப்பட்டது.

''நான் தந்த அந்தத் தொகை அவர்களுக்குப் போதுமானதல்ல என்பது எனக்குத் தெரியும். ஒரு அடையாளமாகத் தரப்பட்ட உதவிதான். அப்படிப்பட்ட பழம்பெரும் நடிகர்கள்-கலைஞர்கள் அதே நிலையிலே வாழக் கூடியவர்கள் பலபேர் இருக்கிறார்கள். நாம் பரிசுகளைப் பெறும்போது-விருதுகளைப் பெறும்போது, அவற்றை நான் மனமகிழ்ச்சியோடு வழங்கும்போது, நானும் அவர்களை எண்ணிப்பார்க்க வேண்டும். பரிசுகளை-விருதுகளைப் பெறுகின்றவர்களும் அவர்களை எண்ணிப் பார்க்க வேண்டும். இது, ஒருவர் இருவர் செய்கின்ற முயற்சியினால் ஈடேறக்கூடிய ஒன்றல்ல, நாம் அனைவரும் சேர்ந்து செய்கின்ற முயற்சி. ஏதோ இன்றைக்கு ஒரு விழாவிலே சில இலட்சம் பெறுமானமுள்ள பரிசுகளையும், பதக்கங்களையும் வழங்கி விடுகின்ற காரணத்தால் கலை உலகிற்கு நான் செய்ய வேண்டிய கடமை முழுவதையும் செய்து விட்டேன் என்று மன ஆறுதல் என்னால் பெற இயலவில்லை. ஏனென்றால், பெருமாட்டி அங்கமுத்துவைப் போன்றவர்கள் அல்லல்படுகிற வாழ்க்கையில் இருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கிறேன். அவர்களுக்கெல்லாம் நல்வாழ்வு-வளமான வாழ்வு-அவர்களுடைய முதுமைக் காலத்திலே எவ்வாறு அமைக்கலாம் என்கிற திட்டங்களையும் கலை உலகப் பெருமக்கள், அதற்கென அமைப்புகளை வைத்திருப்பவர்கள், கலை உலகத்திலே இன்றைக்குப் புகழ்க்கொடி நாட்டிக் கொண்டிருப்பவர்கள், அவர்களெல்லாம் சிந்தித்து எனக்கு அறிவுரையாக, ஆலோசனையாக வழங்குவார்களேயானால், அரசின் சார்பில் அதற்கான திட்டங்களைத் தீட்டிச் செயல்பட முடியுமென்ற உறுதியை, இந்த விழாவிலே உங்கள் முன்னிலையிலேயே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.''

—திரைப்பட விருதுகள் வழங்கும் விழாவில் முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து (15-11-89).

### தரமான படங்களுக்கு அரசு மானியம்

''குறைந்த செலவில், தரமான தமிழ்ப்படங்களைத் தயாரிக்கும் தயாரிப்பாளர்களை ஊக்கப்படுத்துவதற்காக 12 பிரதிகளுக்குக் குறையாமலும், 30 பிரதிகளுக்கு மேற்படாமலும் தயாரிக்கப்படும் தரமான தமிழ்ப்படங்களுக்கு 2 இலட்சம் ரூபாய் முதல் 3 இலட்சம் ரூபாய் வரை அரசு மானியம் வழங்குவதற்கும் முடிவெடுக்கப்பட்டிருக்கிறது என்பதை இங்கே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். 1989-ஆம் ஆண்டு ஜனவரி 1-ஆம் தேதிக்குப் பின்னர் தணிக்கை செய்யப்பட்டு வெளியிடப்பட்ட படங்களுக்கு இந்த மானியத் திட்டம் பொருந்தும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.''

### திரு வி.கே. இராமசாமி

திரையுலகின் சார்பில், விருது பெற்ற கலைஞர்கள் சிலர் பேசினார்கள். முதலாவதாக திரைப்பட நகைச்சுவை நடிகர் திரு. வி.கே. இராமசாமி பேசினார். அவர் பேசுகையில், ''மாண்புமிகு முதல்வர் அவர்கள் பழுத்த அரசியல்வாதி, சிந்தனைவாதி, சகலகலாவல்லவர்; ஆட்சிக்கு வந்த ஒரு சில மாதங்களில் சகல தரப்பு மக்கள் மனத்திலேயும் நிலையான இடத்தைப் பிடித்து விட்டார்; காலம் அறிந்து செய்யும் பாங்கு கலைஞருக்குக் கைவந்த கலை'' என்று பாராட்டினார்.

### திருமதி மனோரமா

நகைச்சுவை நடிகை திருமதி மனோரமா பேசுகையில், 'எங்களையெல்லாம் தேர்ந்தெடுத்துப் பரிசு கொடுத்த முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு காலத்தில் கூத்தாடிகள் என்று அழைக்கப்பட்ட எங்களைப் போன்றவர்களுக்கு, அறிஞர் அண்ணாவும், கலைஞர் அவர்களும் வந்த பிறகுதான் மதிப்பு வந்தது' என்றார்.

### திரு. விஜயகாந்த்

திரைப்பட நடிகர் திரு. விஜயகாந்த் பேசுகையில், ஆந்திரா, கேரளா, கர்நாடகா ஆகிய மாநிலங்களில் கலைஞர்களைக் கௌரவித்துப்

பரிசு தருகிறார்களே, தமிழ்நாட்டில் அப்படி இல்லையே என்று ஏங்கினேன். 13 ஆண்டுகளுக்குப் பிறகு, கலைஞர் அவர்கள் வந்து கலைஞர்களைக் கௌரவித்திருக்கிறார்கள். கலைஞர் அவர்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்'' என்றார்.

**திரு. ரஜினிகாந்த்**

திரைப்பட நடிகர் திரு. ரஜினிகாந்த் பேசும்போது,

''இந்தப் பரிசு பெறுவதிலே ஏன் இவ்வளவு மகிழ்ச்சி என்று நினைக்கும்போது, எனக்குத் தோன்றியது, நான் மதிக்கிற மாமனிதர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயரால் அமைந்த விருது. நான் நேசிக்கிற மிகப்பெரிய மனிதர் முதல்வர் கலைஞர் அவர்களுடைய கையால் நான் பெறுகிறேன். இதற்கெல்லாம் முதல்வர் கலைஞர் அவர்கள் என் மேல் வைத்திருக்கிற அன்பு, பாசம் இவைதான் காரணம் என்று கருதுகிறேன்'' என்றார்.

திரைப்பட இசையமைப்பாளர் இசைஞானி திரு இளையராஜா பேசுகையில், ''எனக்குத் தெரிந்து 1972-73-ஆம் ஆண்டுகளில்தான் இந்த மாதிரி நிகழ்ச்சி நடைபெற்றது. அதற்குப் பிறகு இப்போதுதான் நடைபெறுகிறது. இதில் முக்கிய மாற்றம் என்னவென்றால், எல்லா மக்களும் பார்க்க வேண்டும் என்ற எண்ணத்தோடு, இப்படித் திறந்த வெளியில் மேடையமைத்து, அனைவரும் கண்டு பாராட்டட்டும் என்ற எண்ணத்தோடு ஏற்பாடு செய்திருக்கிறார் கலைஞர் அவர்கள், அவர்களை நான் பாராட்டுகிறேன்'' என்றார்.

**நடிகர் திலகம் சிவாஜி கணேசன்**

நடிகர் திலகம் திரு. சிவாஜி கணேசன் பேசுகையில், ''தமிழக அரசு தமிழகக் கலைஞர்களை மதித்து, அழைத்து இன்று விருது அளித்திருக்கிறது. அதுவும் எனக்கும், என் அருமைக் கண்மணி-ரஜினிகாந்த் அவர்களுக்கும் என் அருமைச் சகோதரர் எம்.ஜி.ஆர். பெயரிலே கலைஞர் அவர்கள் பரிசு வழங்கியிருக்கிறார்.

''எந்த ஒரு அரசியல் தலைவரும் தாங்கள் பதவியில் இருக்கும்பொழுது தங்களோடு எதிர்த்து நின்ற இன்னொரு அரசியல்வாதியின் பெயரிலே பரிசு கொடுத்ததில்லை என்பதுதான் சரித்திரம். ஆனால் அதற்கு மாறாக இன்று அதைக் கலைஞர் செய்திருக்கிறார் என்பதும் ஒரு சரித்திரம். இந்தச் சரித்திரம் நீண்டு கொண்டே போகட்டும்'' என்றார்.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. கி. இராஜமாணிக்கம் இ.ஆ.ப. நன்றி நவின்றார்.

கோலாகலமாக நடந்த இந்த இனிய விழாவில், கலைஞர்களைப் பெருமைப்படுத்தியது, கலை உலகையே பெருமைப்படுத்தியது போன்ற உணர்வை ஏற்படுத்தியது.

—நிகழ்ச்சித் தொகுப்பு
பி.வி. கிரி

## பரிசுகள்-விருதுகள் விவரம்

சிறந்த படம் ''பூ பூத்த நந்த வனம்''. இதைத் தயாரித்த எஸ்.ஏ. இராஜ்கண்ணுக்கு ரூ.1 லட்சமும், கேடயமும் வழங்கப்பட்டன. 2-ஆம் பரிசு பெற்ற ''பாசப் பறவைகள்'' படத் தயாரிப்பாளர் முரசொலி செல்வத்துக்கு ரூ. 50 ஆயிரமும், கேடயமும், 3-ஆம் பரிசு பெற்ற ''அக்னி நட்சத்திரம்'' படத்தைத் தயாரித்த ஜி. வெங்கடேசுவரனுக்கு (ஜி.வி.) ரூ. 25 ஆயிரமும், கேடயமும், சிறப்புப் பரிசுக்கு உரிய படமாகத் தேர்வு பெற்ற ''இது நம்ம ஆளு'' படத்தைத் தயாரித்த பூர்ணிமா பாக்யராஜுக்கு ரூ. 25 ஆயிரமும், கேடயமும் வழங்கப்பட்டன.

சிறந்த இயக்குநர் பி.ஆர் தேவராஜு. (படம்: ''செந்தூரப் பூவே'') 5 பவுன் பதக்கம், சிறந்த நடிகர் விஜயகாந்த் (படம்: ''செந்தூரப்பூவே'') 5 பவுன் பதக்கம், சிறந்த நடிகை சரிதா (படம்: பூ பூத்த நந்தவனம்) 5 பவுன் பதக்கம், சிறப்புப் பரிசுக்கு உரிய சிறந்த நடிகர் கார்த்திக் (படம்: அக்னி நட்சத்திரம்) 5 பவுன் பதக்கம், சிறப்புப் பரிசுக்கு உரிய சிறந்த நடிகை ராதிகா (பூந் தோட்டக் காவல்காரன்) 3 பவுன் பதக்கம், சிறந்த கதை ஆசிரியர் ஆர்.பி. விஸ்வம் (படம்: சிகப்புத்தாலி) 5 பவுன் பதக்கம், சிறந்த உரையாடல் ஆசிரியர் எம்.எஸ். மது (படம்:இல்லம்) 5பவுன் பதக்கம், சிறந்த இசை அமைப்பாளர்: இளையராஜா. 5 பவுன் பதக்கம்.

சிறந்த பாடல் ஆசிரியர் புலமைப்பித்தன், சிறந்த பின்னணிப் பாடகர் கே.ஜே. ஜேசுதாஸ், பாடகி சித்ரா, ஒளிப்பதிவாளர் அஜெயன் வின்சென்ட் (படம்: பாடாத தேனீக்கள்), ஒலிப்பதிவாளர் சம்பத் (ஏவி.எம்), ஸ்டண்ட் இயக்குனர் திருவாரூர் எம்.எஸ்.தாஸ், (படம்: ''சிவப்புத் தாலி''), ஆர்ட் டைரக்டர் பி. நாகராஜராவ் (பாட்டி சொல்லைத் தட்டாதே), டான்ஸ் மாஸ்டர் சுந்தரம் ஆகியோருக்குத் தலா 3 பவுன் தங்கப்பதக்கம் வழங்கப்பட்டன.

சிறப்பு விருதுகளான ''ராஜா சாண்டோ விருது'' டைரக்டர் கிருஷ்ணன் (பஞ்சு), ஒளிப்பதிவாளர் மார்க்கஸ் பார்ட்லே ஆகியோர் பெற்றனர். தலா 5 பவுன் பதக்கம் வழங்கப்பட்டது.

''கலைவாணர் விருது'' நடிகர் வி.கே. இராமசாமி, நடிகை மனோரமா ஆகியோர் பெற்றனர். தலா 5 பவுன் பதக்கம் வழங்கப்பட்டது.

கலைத்துறை வித்தகருக்கான ''எம்.ஜி.ஆர். விருது'' சிவாஜி கணேசன், ரஜினிகாந்த் பெற்றனர். தலா 5 பவுன் பதக்கம், பரிசு வழங்கப்பட்டது.




வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்களுக்கு:

# இலவச அரிசி, வேட்டி, சேலை

வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற அதாவது முந்நூறு ரூபாய்க்குக் குறைந்த மாத வருமானம் உடைய குடும்பங்களுக்கு 5 கிலோ அரிசி இலவசமாக வழங்கப்படும் என்றும், மாத வருமானம் ரூ.200 அதற்குக் கீழும் உள்ள ஏழை எளிய மக்கள் 50 இலட்சம் பேருக்குத் தீபாவளியையொட்டி இலவச வேட்டி - சேலை வழங்கப்படும் என்றும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்திருந்தார். தமிழக அரசின் வரவு செலவுத் திட்டத்தில் அதன்படி, இது வரை தமிழகம் முழுவதும் 83 இலட்சம் ஏழைக்குடும்பங்களுக்கு 5 கிலோ இலவச அரிசி நான்கு தடவை வழங்கப்பட்டுள்ளது. ஐந்தாவது தடவையாகப் பொங்கலுக்கு இலவச அரிசி வழங்கப்படும்.





### இலவச வேட்டி - சேலை

இந்த ஆண்டு தீபாவளித் திருநாளையொட்டி, தமிழகம் முழுவதும் இருநூறு ரூபாயும், இருநூறு ரூபாய்க்குக் கீழும் மாத வருமானமுள்ள ஐம்பது இலட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு வேட்டி-சேலை இலவசமாக வழங்கப்பட்டது.

முதல் தடவையாக இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் இலவச - வேட்டி - சேலை வழங்கப்பட்டிருக்கிறது. முந்நூறு ரூபாய் அதற்குக் குறைவாக உள்ளவர்களுக்கு என்று எடுத்துக் கொண்டால், 83 இலட்சம் பேருக்குத் தர வேண்டும். இருநூறு ரூபாயும், அதற்குக் குறைவான மாத வருமானம் உள்ளவர்களுக்கு என்று, இலவச வேட்டி - சேலை ஐம்பது இலட்சம் பேருக்குத் தீபாவளித் திருநாளில் கொடுக்கப்பட்டு விட்டது. பொங்கல் அன்று மீதமுள்ள 33 இலட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு வழங்கப்படும்.

இதனால் ஏழை எளிய மக்களுக்கு இலவச வேட்டி - சேலை கிடைக்கின்றன என்பது மட்டுமல்ல, பல்லாயிரக்கணக்கான கைத்தறி நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பும் உருவாகியுள்ளது.




# இயல் இசை நாடக மன்றமும் மாணவர்க்கு உதவித் திட்டங்களும்

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், நமது மாணவர்களுக்காகப் பல்வேறு உதவிகளையும் திட்டமிட்டுச் செய்து கொண்டிருக்கிறது. கல்வியறிவும் கலைத் திறனும் இரண்டு கண்களைப் போன்றவையல்லவா? ஆகையால், மாணவர்களின் பள்ளிப் பருவத்திலிருந்து கல்லூரிப் பருவம் வரையில் தொடர்ந்து கல்விப் பயிற்சியுடன் கலைத் தேர்ச்சியும் பெறுவதற்கேற்ற வாய்ப்பு வசதிகளையும் நிதி உதவிகளையும் மன்றம் வழங்குகிறது.

கடந்த 25 ஆண்டுகளில் இயல் இசை நாடக மன்றத்தின் பேருதவியால், ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள், இளங்கலைஞர்களாக அறிமுகமாகி வளர்புகழ் பெற்றுள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன்.

பள்ளிப் பருவமான 10 வயது முதல் 14 வயது வரையுள்ள மாணவக் கலைஞர்களுக்கு உபகாரச் சம்பளம் வழங்கும் திட்டத்தினை ஆண்டுதோறும் அறிவித்து விண்ணப்பங்களைப் பெறவும், அதன் மூலம் தேர்வு பெறுகின்ற இளைஞர்கள் 20 வயது நிறையும் கல்லூரிப் பருவம் வரையில் உபகாரச் சம்பளம் பெறவும் இந்த இயல் இசை நாடக மன்றம் பரிந்துரை செய்கிறது. அந்தப் பரிந்துரையால், மத்திய அரசின் கலைத் திறன் பயிற்சி மையத்திடமிருந்து மாதந்தோறும் உள்ளூர் மாணவர்கள் ரூ.75-ம், வெளியூர் மாணவர்கள் ரூ.100-ம் உபகாரச் சம்பளம் பெறுகின்றனர்.



-கு. மா. பாலசுப்பிரமணியம்,
உறுப்பினர்-செயலாளர்,
தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்.

மேலும், 18 வயது முதல் 28 வயதுள்ளவர்களும் பயனடைவதற்காக விளம்பரம் செய்து விண்ணப்பங்களைப் பெற்று மத்திய அரசின் மனித ஆற்றல் மேம்பாட்டுத் துறையின் மூலம் மாதந்தோறும் ரூ.400 உபகாரச் சம்பளம் வழங்கவும் மன்றமே பரிந்துரை செய்கிறது.

அத்துடன், தமிழ்நாடு அரசின் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனத்தில் நடிப்பு, இயக்கம், முதலிய தொழில்நுட்பத் துறைகளில் பயின்றுவரும் எளிய மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகையாக மாதந்தோறும் ரூ.75 முதல் ரூ.100 வரையில் 3 ஆண்டுகளுக்கு இயல் இசை நாடக மன்றம் வழங்கி வருகிறது.

பாரம்பரியமான கிராமியக் கலைகளை வளர்ப்பதற்காகவும் இந்த மன்றம், எளிய நிலையிலுள்ள பல கிராமியக் கலைக் குழுக்களுக்கு இசைக் கருவிகள், ஆடையணிகள், மேடைப் பொருட்களை வாங்குவதற்கு மானிய உதவி அளிக்கின்றது. இதனால் பல கிராமியக் கலைக் குழுக்கள் ஆண்டுதோறும் பயனடைகின்றன. இத்திட்டத்தினை மேலும் விரிவடையச் செய்வதற்காக, தமிழ்நாடு அரசு இந்த ஆண்டின் பகுதி-2 திட்டத்தின் மூலம் 50 ஆயிரம் ரூபாயை மன்றத்துக்கு ஒப்பளிப்பு செய்துள்ளது என்பதையும் நன்றியுடன் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தெருக்கூத்து,புரவியாட்டம், வில்லுப்பாட்டு, கரகம், காவடி முதலிய கிராமியக் கலைகளுக்கு மேலும் மேலும் புகழ் தேடுவதற்காக, தமிழகத்தின் முக்கிய நகரங்களிலும் பெரிய அளவில் கிராமியக் கலை விழாக்களை நடத்துவதற்கு மன்றம் ஏற்பாடு செய்துள்ளது.

வளர்ந்து வரும் இளங்கலைஞர்களை ஊக்குவிப்பதற்காக ஆண்டுதோறும், கர்நாடக இசை, வாய்ப்பாட்டு. வீணை, புல்லாங்குழல், மிருதங்கம், கடம், நாதசுரம், நாட்டியம், கதாகாலட்சேபம் பயின்றவர்களை அழைத்து இயல் இசை நாடக மன்றம் நேர்முகத் தேர்வு நடத்துகிறது. தகுதி வாய்ந்த நடுவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் இளங்கலைஞர் ஒவ்வொருவரும் ஆண்டுக்கு 4 நிகழ்ச்சிகள் வீதம் குறிப்பிட்ட சபாக்களிலும், ஆலயங்களிலும் நடத்துவதற்கு மன்றம் ஏற்பாடு செய்து பொருள் உதவுகிறது.

பண்டைக் காலத்தில் ஆலயங்களால் வளர்க்கப்பட்ட அருங்கலைகள், இடைக்காலத்தில் சபாக்களிலேயே நிகழ்த்தப்பெற்ற நிலையை மாற்றி, இந்த ஆண்டு முதல் பொதுமக்களும் கண்டுகளிக்கும்படி மீண்டும் ஆலயங்களிலும் கலை நிகழ்ச்சிகளை நடத்துவதற்குத் திட்டமிட்டிருப்பது குறிப்பாகப் பாராட்டத் தகுந்த பணியாகும்.

''சென்றிடுவீர் எட்டுத் திக்கும்-கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!'' என்ற பாரதியாரின் வாக்கை உணர்ந்து, ஆண்டுதோறும் இருவேறு பிற மாநிலங்களிலிருந்து இரண்டு கலைக் குழுக்களை நடத்த மன்றம் ஏற்பாடு செய்கிறது.

அதேபோல் ''திறமான புலமையெனில் பிறநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்'' என்ற பாரதியாரின் ஆசையை நிறைவேற்றிடவும் தமிழகத்திலிருந்து ஆண்டுதோறும் இரண்டு கலைக் குழுக்களை இருவேறு வெளி மாநிலங்களுக்கு அனுப்பி



தமிழகத்தின் கலைத் திறமைக்குப் புகழ் தேடவும் மன்றம் பணியாற்றுகின்றது. இத்தகைய கலைக் குழுக்கள் பரிமாற்றத் திட்டத்தினால், இந்தியக் கலைக் குடும்பங்களின் நட்புறவும் ஒற்றுமையும் வளர்ந்து கொண்டு இருக்கின்றன.

இதுபோலவே, பிற மாநில மொழிகளின் கலை இலக்கியங்களைக் கேட்டு வாங்கித் தமிழாக்கம் செய்து வெளியிடவும், நமது தமிழ்க் கலை இலக்கியங்களைப் பிற மாநில மொழிகளில் வெளியிடச் செய்து இலக்கியப் பரிவர்த்தனை நடத்தவும் மன்றம் யோசனை உருவாக்குகிறது.

தமிழ்நாட்டிலுள்ள பல அருங்கலைப் பயிற்சி நிறுவனங்களுக்கு வாத்தியக் கருவிகள், தளவாடச் சாமான்கள், அரிய கலை நூற்களை வாங்குவதற்கும் மன்றம் நிதியுதவி செய்கிறது.

சிறந்த கலை நூற்களைப் புதிதாகப் பதிப்பித்து வெளியிட முனைகின்ற கலைஞர்களுக்கும் மன்றம் ஒரு பகுதி உதவித் தொகையை வழங்குகிறது.

அவ்வாறே, தமிழ்க் கலைப் பண்பாட்டினைப் போற்றி வளர்க்கும் புதிய தமிழ் நாடகங்களைத் தயாரிக்கவும், மேடைகளில் அரங்கேற்றவும் திறமையான தொழில்முறை நாடகக் குழுக்களுக்கு மானியத் தொகையும் மன்றம் கொடுத்து ஆதரிக்கிறது.

இயல், இசை, நாடகம், நாட்டியம், நாதசுரம், திரைப்படம், கிராமியக் கலை ஆகிய பிரிவுகளில் செயற்கரிய சேவை செய்த அருங்கலைஞர்களுக்கு மன்றம் ஆண்டுதோறும் ''கலைமாமணி' எனும் பட்டங்களும் விருதுகளும் வழங்கிச் சிறப்புச் செய்கிறது.

வறுமையால் நலிந்த, முதிர்ந்த கலைஞர்களுக்கு மாதந்தோறும் உதவி மானியம் வழங்கும் திட்டத்தை. மன்றம் செயல்படுத்துகிறது. ஏற்கெனவே மாதத்துக்கு ரூ. 150 வழங்கியதை இந்த ஆண்டு முதல் ரூ.250 ஆக உயர்த்தியும்-முன்னர் ஆண்டுதோறும் 200 நலிந்த கலைஞர்களை மட்டும் தேர்ந்தெடுத்த நிலையை மாற்றி இந்த ஆண்டு முதல் 300 நலிந்த கலைஞர்களைத் தேர்ந்தெடுக்கவும் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் புதிய ஆணை வெளியிட்டிருப்பதை, எளிய கலைக் குடும்பங்கள் அனைத்துமே மகிழ்ச்சியுடன் வரவேற்று வாழ்த்துகின்றன

நலிந்த கலைஞர் மறைந்தால் இறுதிச் சடங்குச் செலவு ரூ. 350 கொடுத்துதவியும், அவர்கள் குடும்பப் பராமரிப்புக்கு ரூ. 2,000 வழங்கப் பரிந்துரையும் செய்கிறது. இறந்த கலைஞரின் மனைவியும் தொடர்ந்து உதவிப் பணம் பெறவும் மன்றம் வழிவகை செய்துள்ளது.

தமிழ்க் கலை வளர்ச்சிக்காகவே வாழ்ந்து மறைந்த மாமேதைகளான சங்கரதாஸ் சுவாமிகள், பம்மல் சம்பந்த முதலியார், பாபநாசம் சிவன், டி.என். இராஜரத்தினம் பிள்ளை, கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் ஆகியோரின் பெருமை போற்றுகின்ற விழாக்களை ஆண்டுதோறும் சிறப்பாகஇயல்இசைநாடக மன்றம் கொண்டாடி வருகிறது.

ஆண்டுதோறும் மத்திய அரசின் சங்கீத நாடக அகாடமி வழங்கும் கௌரவ விருதுகளுக்குத் தமிழ் இசை, நாடக, கிராமியக் கலை வல்லுநர்களை மன்றம் பரிந்துரை செய்கிறது. மத்திய அரசிடம் 'பெலோஷிப்' எனும் கலை ஆராய்ச்சி உபகாரச் சம்பளம் மாதம் ரூ. 500 அல்லது ரூ. 1,000 பெறத் தகுந்த கலையறிஞர்களையும் இயல் இசை நாடக மன்றம் பரிந்துரை செய்கிறது.

தமிழக அரசின் முழுமையான நிதி உதவியுடன் அமைந்த ஒரு தன்னாட்சி நிறுவனமான இந்த இயல் இசை நாடக மன்றம், புதுடில்லி சங்கீத நாடக அகாடமியுடன் இணைந்தும் கலைப் பணிகளை மாநில அளவில் செயலாற்றி வருவது குறிப்பிடத் தகுந்த சிறப்புச் செய்தியாகும்.

இவ்வாறு தமிழ்க் கலைஞர்களின் மாணவப் பருவத்தில் உதவிகளைத் தொடங்கி, அவர்கள் வளர்ந்து வாழ்ந்து மறைந்த பின்னாலும் புகழ் வளர்க்கப் பணியாற்றுகின்ற இயல் இசை நாடக மன்றத்தைத் தமிழக அரசும், தமிழர் சமுதாயமும் பேராதரவுடன் போற்றிப் பாதுகாக்கும் என்று நம்புகிறேன்.

# முன்னேற்ற பாதையில் வெற்றிநடை போடும் டான்சி




டான்சி, தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம், பல்வேறு தொழிற்துறை மற்றும் வீட்டு உபயோகப் பொருட்களைத் தயாரித்து விற்பனை செய்து வருகிறது. தமிழ்நாட்டில் அமைந்துள்ள 47 தொழிற் கூடங்கள் மற்றும் 7 விற்பனை நிலையங்களைக் கொண்ட டான்சியின் தொகுப்பு, நாடு முழுவதும் நன்கு அறிமுகமாகியுள்ளது.

கடந்த ஆண்டில் டான்சியின் சாதனைகளைக் கணக்கில் கொண்டால், இன்று டான்சி முன்னேற்றப் பாதையில் வெற்றிநடை போடும் நிறுவனமாக மாறி வருகிறது: தயாரிப்பு கூடங்களில் உற்பத்தி அதிகரித்துள்ளது. விற்பனை நிலையங்களில் விற்பனை அதிகரித்துள்ளது,

சென்ற விழாக்காலத்தில், எஃகு மற்றும் மரச்சாதனங்களை டான்சி ரூ. 1 கோடிக்கும் அதிகமாக விற்பனை செய்து அரிய சாதனை புரிந்துள்ளது.

டான்சியின் தரமிகு தயாரிப்புகள் :
* தரமேன்மையான எஃகு மற்றும் மரச்சாதனங்கள் (ஃபர்னிச்சர், * ஸ்பிரிட் சார்பு பொருட்கள் * ஆழ்த்துளை கைப்பம்புகள் * காஸ்கெட் ஷெல்லாக் காம்பௌண்ட் இயந்திரங்கள் தேவைக்கு * கனரக கட்டுமானங்கள் * இயந்திரக் கருவிகள் * விண்வெளி ஆராய்ச்சி மற்றும் இராணுவத் தொழில்களுக்கான உபகரணங்கள் * சூரியசக்தி மூலம் சுடுநீர் தயாரிப்பு சாதனங்கள் * கருவிகள் மற்றும் வார்ப்புகள் * அழுத்தப்பட்ட வார்ப்பட உறுப்புகள்.

அதிக வளர்ச்சி - பன்முனை இயக்கங்கள், உயர்தர தயாரிப்புகள் - ஆம் இவைதான் டான்சியின் உயிர்நாடி - இவற்றின் பிரதிபலிப்புத்தான் தேசிய அளவில் அவர்களது சேவையும், நுகர்வோர் மன நிறைவும்.



**டான்சி**
**தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்**
(ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)
(விற்பனைப் பகுதி)
1, ஒயிட்ஸ் சாலை, சென்னை-600 014
தொலைபேசி : 862161 தந்தி : TANSI
டெலக்ஸ் : 41-7496 TNSI

டான்சி விற்பனை நிலையங்கள் : * 1, ஒயிட்ஸ் சாலை, சென்னை-600 014. தொலைபேசி : 862273 * 681, அண்ணா சாலை, சென்னை-600 006. தொலைபேசி : 860816 * 23-27, அமெரிக்கன் கல்லூரிக் கட்டிடம், மதுரை-625 002. தொலைபேசி : 43832 * 20-23, நேரு ஸ்டேடியம், வ.உ.சி. பூங்கா, கோயம்புத்தூர்-641 018. தொலைபேசி : 30755 * 28-ஏ, நந்தி கோயில் தெரு, தெப்பக்குளம், திருச்சி-620 002. தொலைபேசி : 26983 * 13-15, முனிசிபல் ஷாப்பிங் காம்பிளெக்ஸ், நெடுஞ்சாலை, திருநெல்வேலி-627 001. தொலைபேசி : 23880 * சாரங்கபாணி கிழக்கு சந்நிதி தெரு, கும்பகோணம்-612 001. தொலைபேசி : 21605.

*டான்சி - நாட்டுக்கான சேவையில் 24வது ஆண்டு.*

DIPR /MS/89 (R)




# மகளிர் நலனில் கூட்டுறவு

## தையல் தொழில்

சமூக நலத்துறையில் 1987-'88-ஆம் ஆண்டில் 29 தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வந்தன. அத்துடன் 43 மகளிர் தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் தொழில் வணிகத் துறையிடமிருந்து இத்துறைக்கு மாற்றப்பட்டன. தற்சமயம் மொத்தம் 72 தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இத்துறையின் மூலம் மாநிலம் முழுவதும் இயங்கி வருகின்றன.

தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டத்தின் மூலம் பயனடையும் மாணவ, மாணவியர், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மாணவ, மாணவியர்க்கு இலவசமாக வழங்கப்படும் சீருடைகளை இந்த 72 மகளிர் தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் தைத்து வருகின்றன.

1988-'89-ஆம் ஆண்டில் 64 இலட்சம் சீருடைகளை மேற்கண்ட 72 மகளிர் தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் தைத்துள்ளன. இச்சங்கங்கள் மூலம் 22,000 மகளிர்க்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இம்மகளிர்க்குக் கூலியாக 1988-'89-ஆம் ஆண்டு சுமார் 3.88 கோடி ரூபாய்வழங்கப் பட்டது.

## காலணி தயாரித்தல்

தமிழ்நாடு சத்துணவுத் திட்டம் மூலம் பயனடையும் 1 முதல் 8-ஆம் வகுப்பு வரையில் பயிலும் பள்ளி மாணவ, மாணவியருக்கும் மற்றும் ஏழை எளிய கிராமப்புறப் பெண்களுக்கும் அரசு இலவசக் காலணிகள் வழங்கும் பொருட்டு, அக்காலணிகளைத் தயாரிப்பதற்காக இத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ், 89 மகளிர் காலணி கூட்டுறவுச் சங்கங்கள் 1987-'88-ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டன. இரண்டாயிரம் ஆதிதிராவிடர் மகளிர்க்கு இச்சங்கங்கள் மூலம் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. 1988-'89-ஆம் ஆண்டில் சுமார் 11.64 இலட்சம் இணை - பள்ளிக் குழந்தைகளுக்கான காலணிகள் தயார் செய்து வழங்கப்பட்டன.

## எழுது பொருள் தயாரித்தல்

1979 முதல் 1981 வரை 15 மகளிர் எழுதுபொருள் தயாரிப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டன. எழுது பொருள் தயாரிப்போர் தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான நோட்டுப் புத்தகங்கள் தயாரிக்கும் ஆர்டர்கள் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்திடமிருந்தும் மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் மூலமும் பெறப்படுகின்றன. ஏறக்குறைய 700 மகளிர், இச்சங்கங்களில் உறுப்பினர்களாக இருந்து வேலை வாய்ப்புப் பெறுகின்றனர். ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்திற்கும் அச்சு இயந்திரம், இரண்டு கோடுகள் போடும் இயந்திரம் மற்றும் காகித உறைகள் செய்யக்கூடிய இயந்திரம் அரசு மானியத் தொகையில் வழங்கப்பட்டன.



## பனை ஓலை தயாரித்தல்

1982-ஆம் ஆண்டு தர்மபுரி மாவட்டத்தில் பனைப் பொருட்கள் தயாரிக்கும் 10 மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. ஏறக்குறைய 250 மகளிர்க்கு வேலை வாய்ப்பு இச்சங்கங்கள் மூலம் வழங்கப்படுகிறது. இச்சங்கங்களில் பெரும்பாலும் பனைவெல்லம் மற்றும் அது தொடர்பான பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. சமூக நலத்துறையின் கீழ், செயல்பட்டு வரும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்திற்குத் தேவையான பனைவெல்லம் இச்சங்கங்கள் மூலமாகக் கொடுக்கப்பட்டு வருகிறது.

## கயிறு பொருட்கள் தயாரித்தல்

1981-ஆம் ஆண்டில் தஞ்சாவூர் மாவட்டத்தில் நல்லூர் என்ற

**ஏராளமான மகளிர்**

**வேலை வாய்ப்புப் பெறுகின்றனர்!**

**கிராமப் பொருளாதாரம்**

**வளர்கிறது**

அஷ்யா பல்பொருள் சிறப்பங்காடி
13A நேத்தாஜி ரோடு,
மஞ்சக்குப்பம்
கடலூர் - 607 001. போன் 230

நல்வாழ்த்துக்கள்

கிளை: 20A லாரன்ஸ் ரோடு
திருப்பாதிரிப்புலியூர் போன்: 907

NANDAKUMAR STEEL TRADERS

WITH BEST COMPLEMENTS

15-A, CAR STREET,
THIRUPAPULIYUR,
CUDDALORE: 607 002

கிராமத்தில் கயிறு தயாரிப்போர் தொழிற் கூட்டுறவுச் சங்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இச்சங்கம் உற்பத்தி நிலையமாகவும், மகளிர்க்குப் பயிற்சி அளிக்கும் நிலையமாகவும் இயங்கி வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் சுமார் 50 மகளிர்க்குக் கயிறு தயாரிப்பதில் பயிற்சியளிக்கப் படுகிறது. தவிர 75 மகளிர்க்கு முறையாக வேலை வாய்ப்பும் அளிக்கப்படுகிறது.

### பட்டு நூல் தயாரித்தல்

சேலம் மாவட்டத்தில் 1982-ஆம் ஆண்டு 2 பட்டு நூல் தயாரிப்பு மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டன. இச்சங்கங்கள் மூலம் 50 மகளிர்க்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

### திரவ சோப்பு தயாரித்தல்

சென்னைக்கருகில் நாராயண புரத்தில் இருந்த கிராம வளர்ச்சி மையம் மூடப்பட்டதால், அதில் வேலையிழந்த மகளிர்க்குப் புனர் வாழ்வு அளிக்கும் நோக்கத்தோடு 1987-ஆம் ஆண்டில் நாராயண புரத்தில் திரவ சோப்பு தயாரிப்புத் தொழிற் கூட்டுறவுச் சங்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இச்சங்கத்தின் மூலம் 25 மகளிர்க்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது. இச் சங்கத்தில் உற்பத்தியாகும் திரவ சோப்புப் பொருள், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் விற்பனை செய்யப்படுகிறது.

### சாக்குக்கட்டி தயாரித்தல்


இத்துறையின் கீழ் 24 மகளிர் சாக்குக் கட்டி தயாரிப்பாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் நடைபெறுகின்றன. கல்வி நிறுவனங்களுக்குத் தேவையான சாக்குக் கட்டிகளை இச்சங்கங்கள் தயாரித்து வழங்கி வருகின்றன. 1989-90-ஆம் ஆண்டில் 1,200 மகளிர்க்கு இச்சங்கங்கள் மூலம் வேலை வாய்ப்பு வழங்கப்படும்.

### இணையுணவு தயாரித்தல்

1988-'89-ஆம் ஆண்டில் 22 மகளிர் இணையுணவு தயாரிப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப் பட்டுள்ளன. சுமார் 1,650 மகளிர்க்கு ஒரு வாரகாலம் இணையுணவு தயாரிப்பதில் பயிற்சி அளிக்கப்பட்டது. உதவித் தொகையாக ரூ.50 வழங்கப்பட்டது. சமூக நலத் துறையின் சிறப்புத் திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்டுள்ள இக்கூட்டுறவுச் சங்கங்கள் முன்னோடிச் சங்கங்களாகச் செயல்பட்டு வருகின்றன. இதன்மூலம் ஒவ்வொரு உறுப்பினரும் ரூ.8 முதல் 10 வரை தினக்கூலியாகப் பெற வாய்ப்புள்ளது. உறுப்பினர்கள் அனைவரும் தாழ்த்தப்பட்ட மற்றும் பின் தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



## பயன் அடைந்தோர் பகர்வன:



**வாழ வழியில்லாமல் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள ஏழை எளிய மக்களைக் கை தூக்கி விடும் பல்வேறு நலத் திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தைச் சேர்ந்த இருவர், தாங்கள் பெற்ற பயன்களை இங்கே விவரிக்கிறார்கள்:**



## தொழிலாளி முதலாளி ஆனார்!

நாங்குனேரியைச் சேர்ந்தகருப்பையா என்பவரின் மகன் திரு. நல்லக்கண்ணு (வயது 39) வறுமைச் சூழலிலே வாழ்ந்தவர்.

வாழ்க்கையில், வறுமைச் சூழலால் வெறுப்புற்று, பிழைப்புத் தேடிப் பம்பாய்க்குச் சென்றார். அங்கு ஒரு ஓட்டலில் தினமும் எடுபிடி வேலை செய்து நாளைக் கழித்த இவர் மீண்டும் நாங்குனேரிக்கு வந்தார்.

ஊராட்சி ஒன்றிய ஆணையரின் அறிவுரையின்படி இவருக்குத் தொழில், பணிச் சேவைத் திட்டத்தின் கீழ், 1988-89-ஆம் ஆண்டில் ரூ. 6,600 சுயதொழில் செய்வதற்காகக் கடனாக வழங்கப்பட்டது. அதில் ரூ. 2,500- மானியமாகத் தரப்பட்டது.

இந்தத் தொகையைக் கொண்டு, காலணிகள் தயாரிக்கும் கடை ஒன்றை ஆரம்பித்தார். அதற்குத் தேவைப்படும் மூலப்பொருட்களை வாங்கி, இரண்டு தொழிலாளர்களை வேலைக்கும் அமர்த்திக் கொண்டுள்ளார். வியாபாரம் திருப்திகரமாக நடந்து வருகிறது.

இவர் செருப்பு தைக்கும் இனத்தைச் சேர்ந்தவர் அல்ல என்றாலும், அரசு அளித்த கடனுதவியைக் கொண்டு இந்தத் தொழிலை ஆரம்பித்தார். தற்போது மாதம் ரூ. 3,000 வருமானம் ஈட்டி வருகிறார் இவர். அந்த அளவுக்கு இவருக்கு நல்வாழ்வு தந்துள்ளது, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்:

இவருக்குத் தினமும் செலவெல்லாம் போக ரூ. 20 வருவாய் கிடைக்கிறது. பம்பாயில் ஒரு சாதாரணத் தொழிலாளியாக வாழ்வதற்கே சிரமப்பட்ட இவர், அரசின் கடன் உதவியைப் பெற்று, சுய தொழிலைத் தொடங்கியதன்மூலம், தான் பிறந்த நாங்குனேரியிலேயே இரண்டு பேரை வைத்து வேலை வாங்கும் முதலாளியாகவே உயர்ந்து விட்டார்.

## பாசனக்கிணறு தந்த பயன்

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், தென்காசி ஒன்றியத்தைச் சேர்ந்த திருமலாபுரத்தைச் சேர்ந்தவர் திரு. எஸ். முருகையா. இவர் ஏழை ஆதி திராவிடர். இவருக்கு இரண்டு ஏக்கர் நிலம் இருக்கிறது. ஆனால் வானம் பார்த்த பூமி. மழையை நம்பியே விவசாயம் செய்ய முடியும். அக்டோபர் மாதத்தில் பெய்கின்ற மழையை நம்பி, அந்த ஆண்டு முழுவதும் காட்டுச் சோளம், கம்பு ஆகியவற்றைப் பயிர் செய்வார். ஆனால், நம்பிய மழையும் சரியாகப் பெய்யாமல், போட்ட பங்கும் சரியாக முளைக்காமல் காய்ந்து விடும். இதனால் இவருக்குப் பெரிதும் நட்டம் ஏற்படும். இவருக்கு உற்ற துணையாக-இவரது கவலையைத் தீர்க்கும் விதத்தில்,

# THE THIRUKOILUR CO-OPERATIVE URBAN BANK LTD., NO.E-25/1975

## THIRUKOILUR, TAMILNADU

ESTABLISHED: 1916

*Head Office: 9 Market Street, Tirukoilur, Phone: 332*

*Branch : 41, Bazeer Street, Kallakurichi Phone: 492*

| | |
|---|---|
| **Paid up Share Capital** | **Rs. 13.94 lakhs** |
| **Reserves** | **Rs. 20.89 "** |
| **Deposits** | **Rs. 336.64 "** |
| **Working Capital** | **Rs. 429.43 "** |
| **Loans outstanding** | **Rs. 304.13 "** |

**SERVICE** **SMILE** **SATISFACTION**

Blood is the **Source of Energy** to the Body

So is THIS BANK **SOURCE OF PROSPERITY** to a comman man

**SALIENTY FEATURES:**

**A FLOURISHING CO-OPERATIVE BANK**

1. *Offering ONE PERCENT higher interest on all deposits.*
2. *Affording Locker Facilities.*
3. *Issueing Drafts at far comparatively a lower rate of Commission to all important places throughout India.*
4. *Securing placement 'A' Class since 1964*
5. *Extending Financial Assistance to the Small scale Industries, professional and self employed persons, Small Transport Operators and to Weaker Sections of the Community.*

**Assuring EFFICIENT PERSONALISED QUICK SERVICE**
**a Special Characteristic of the Bank**
**That is the Tirukoilur Co-operative Urban Bank**

Tirukoilur
23.9.1989

**(C.K. SRINIVASAN)**
Administrator




# கோ-ஆப்டெக்ஸ்

**கோ-**ஆப்டெக்ஸ் தமிழ்நாட்டிலுள்ள 1600 பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தியாகும் பருத்தி, பாலியஸ்டர், பட்டு மற்றும் கலவை இழைகளில் தயாரிக்கப்படும் கைத்தறி ஜவுளிகளை இந்தியா முழுவதும் 31-8-1989 முடிய 497 விற்பனை நிலையங்கள் விற்பனை செய்து வருகின்றன.

கோ-ஆப்டெக்ஸ் 1988-89-ஆம் ஆண்டு ரூ. 100.28 கோடிக்கு விற்பனை செய்து சாதனை புரிந்துள்ளது. இதில் ரூ. 42.33 கோடி அளவிற்கு 1988 தீபாவளியின்போது விற்பனையாகி உள்ளது.

கோ-ஆப்டெக்ஸ், சென்னை, சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், திருச்சி, பெங்களூர் மற்றும் ஐதராபாத் ஆகிய நகரங்களில் பிரத்தியேகப் பட்டு விற்பனை நிலையங்களைத் திறந்து, பட்டுத் துணி விற்பனைத் துறையில் சாதனை புரிந்துள்ளது.

பட்டு மற்றும் பருத்தியில் நெசவு மற்றும் அச்சிட்ட ரகத்தில் கைத்தறி ஜவுளிகள் உற்பத்தி செய்யும் வகைகளுக்கு "வண்ணப்பாவு" என்று பெயரிடப்பட்டு, இந்த வகையில் 200 புது வடிவங்களைக் கொண்ட சேலை இரகங்களை, சென்னை மற்றும் புதுதில்லி மாநகரங்களில் நடைபெற்ற கண்காட்சிகளின் மூலம் கோ-ஆப்டெக்ஸ் வெளியிட்டுப் பெரும் சாதனை நிகழ்த்தியுள்ளது.

ஆயத்த ஆடைகளுககுத தேவைப்படும் துணிகளும், "காஞ்சிக் காட்டன்" சேலைகளும் தற்போதைய துணிரக உற்பத்தி வகைகளாகும். எளியோரும் வாங்கும் வகையில் குறைந்த விலையில், லேசான பட்டுச் சேலைகளைத் தற்போது கோ-ஆப்டெக்ஸ் தயார் செய்து உள்ளது. இவை பவானிசாகர் மற்றும் சிறுமுகைப் பகுதியில் உள்ள நெசவாளர்களால் தயாரிக்கப்படுகின்றன. இப்பகுதியின் நெசவாளர்கள் தற்போதுதான் பட்டு ரகங்களைத் தயாரிக்க முனைந்துள்ளனர். இதன் மூலம் இவர்களது தினசரி வருமானம் அதிகரித்துள்ளது.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளபடி, வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள ஏழை மக்களுக்கு இலவச அரிசி வழங்குவதற்காக 83 இலட்சம் துணிப் பைகளை வழங்கி, அரசு உத்தரவைச் செம்மையாகக் கோ-ஆப்டெக்ஸ் நிறைவேற்றியுள்ளது.

தமிழ்நாட்டில் 18 கூட்டுறவு நூற்பாலைகள் மொத்தம் 4.00 இலட்சம் கதிர்களுடன் இயங்கி வருகின்றன. இக்கூட்டுறவு நூற்பு ஆலைகள் மாதம் ஒன்றுக்குச் சுமார் 16,000 பேல்கள் (சிட்டம் மற்றும் தோல்) நூலினை உற்பத்தி செய்கின்றன. இவற்றில் சுமார் 9,450 பேல்கள் சிட்ட நூல்களாக உற்பத்தி செய்யப்படுகின்றன. இக் கூட்டுறவு நூற்பு ஆலைகள் சமீபத்தில் அரசு ஆணைப்படி முதல் கட்டமாக, கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுக்கும், இரண்டாவதாக தனியார் நெசவாளர் சங்கங்களுக்கும், மூன்றாவதாக விசைத்தறி நெசவாளர்களுக்கும் என்ற முன்னுரிமை அடிப்படையில் நூல் விநியோகம் செய்து வருகின்றன.

மேலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புப்படி, அரசு மேற்கொள்ளவிருக்கும் 6 நூற்பாலைகளும் கைத்தறிகளுக்குத் தேவையான நூலை மட்டுமே உற்பத்தி செய்ய உள்ளன.

ஒன்றியத்தின் மூலம் பாசனக்கிணறு வெட்டிக் கொள்வதற்காக நிதி உதவி கிடைத்தது.

இதைக் கொண்டு இவர் 10 மீட்டர் ஆழத்திற்குக்கிணறு வெட்டி உள்ளார். இதற்காக இவருக்கு ரூ.15,300 மானியமாகத் தரப்பட்டு உள்ளது. மேலும், விவசாயப் பெருநோக்குத் திட்டத்தின் கீழ், நீர் இறைக்கும் மோட்டார் பம்பு செட் வாங்க ரூ. 9,000-மும், பம்பு செட் அறை கட்டிக் கொள்ள ரூ.1,500-ம் அளிக்கப்பட்டுள்ளது.

இவர் குடும்பத்தைச் சேர்ந்த 5 பெண்கள், 4 ஆண்கள் இந்தக் கிணறு வெட்டும் பணியில் முழுமூச்சுடன் ஈடுபட்டதால், இவருக்குச் செலவு அதிகம் ஏற்படவில்லை.

1988 ஜூலை மாதம் கிணறு வெட்டும் வேலையை ஆரம்பித்த இவர், 6 மாதத்திலேயே முடித்துவிட்டார். தற்போது கிணற்றில் தண்ணீர் நிறைந்துள்ளது. குறைந்தது ஒரு நாளைக்கு 6 மணி நேரம் கிணற்றிலிருந்து தண்ணீர் பாய்ச்ச முடிகிறது. தற்போது அதிகமான தண்ணீர் வசதி கிடைப்பதால் வேர்க்கடலை, வெங்காயம், வாழை, தென்னை ஆகியவற்றைப் பயிரிட்டுள்ளார். மேலும் தமது தேவை போக, மீதி நேரங்களில் பக்கத்திலிருக்கும் நிலங்களுக்கும் தண்ணீர் விட்டு, அதன் மூலம் இவர் வருவாயை அதிகரித்துக் கொள்ள முடிகிறது.

கிணறு வெட்டுவதற்கு முன்பு ஐந்தாறு ஆண்டுகள் நட்டத்தையே பாாத்துக் கொண்டிருந்த இவருக்கு, இப்பொழுது நல்ல இலாபம் ஏற்பட்டிருக்கிறது. அக்கம்பக்கத்து நிலக்காரர்களும் இவரது கிணற்று நீரை நம்பி, இப்பொழுது வேர்க்கடலை போட்டிருக்கிறார்கள்.

"முன்பெல்லாம் ஒவ்வொரு ஆண்டும் ஆயிரம் ரூபாய், 2 ஆயிரம் ரூபாய் செலவு செய்து விதைக் கடலையை வாங்கிப் போட்டு, தண்ணீர் இல்லாத குறையினால் அத்தனையும் முளைக்காமல் பாழாகும். அதனால் கைக் காசையும் இழந்து நட்டப்படும் நிலைமை இருந்து வந்தது. அந்நிலை இன்று மாறி நிறைந்த ஆதாயம் கிடைக்க வழி வகை ஏற்பட்டுள்ளது." என்கிறார் தென்காசி வட்டார வளர்ச்சி ஆணையர் திரு. சிங்கராயன்.

# பட்டின் பெருமை

ஆர்.சி. பாண்டர்,இ.ஆ.ப.,
இயக்குநர்,
பட்டு வளர்ச்சித் துறை இயக்ககம்
சேலம்.

பட்டு வளர்ச்சித் துறை, சேலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு 1979-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இந்தத் துறை தனியாகத் தொடங்கப்படுவதற்கு முன்னால் தொழில் மற்றும் வணிகத்துறையில் ஒரு அங்கமாகச் செயல்பட்டு வந்தது.

நமது மாநிலத்தில் பட்டு நூல் நெசவுக்குப் பெரிதும் கர்நாடக மாநிலத்தை நம்பியிருக்க வேண்டிய நிலை முன்னர் இருந்து வந்தது. தமிழ்நாடு, பட்டு நூல் உற்பத்தியில் தன்னிறைவு பெறும் நோக்கத்தில் ஒரு பகுதியாக இத்துறையால் பட்டு கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டன. அரசு பட்டு நூற்பு மையங்கள் மூலமும் தனியார் நூற்பகங்கள் மூலமும் பட்டு நூற்பு நடைபெற்று வருகிறது. பட்டு விவசாயிகள் மற்றும் நூற்பாளர்களுக்கு இத்துறை தேவையான எல்லா உதவிகளையும் செய்து வருகிறது.

பட்டு வளர்ப்பு கிராமப் பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு அதிகப்படியான வேலை வாய்ப்பையும், வருமானத்தையும் கொடுக்கின்றது. இதில் மேலும் சிறந்த முன்னேற்றங்கள் எய்த 1979-ஆம் ஆண்டு தனியாக இத்துறை துவக்கப்பட்டது. பட்டு வளர்ச்சித்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் 70 கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன.

பட்டு நூற்பு மற்றும் பட்டு முறுக்கேற்றும் சங்கங்கள் பட்டுக்கூடுகளிலிருந்து பட்டு நூல் நூற்கும் பணியில் ஈடுபட்டு வருகிறது. பட்டு விவசாயிகள், பட்டுப்புழு வளர்த்து அதிலிருந்து பட்டுக் கூடுகள் அறுவடை செய்கிறார்கள். இப்பட்டுக் கூடுகள் பட்டுக்கூடு அங்காடிகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு ஏலம் மூலம் பட்டு நூற்பாளர்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. இத்துறையில் நடத்தப்பட்டு வரும் அரசு பட்டுக் கூடு அங்காடியில் இக்கூட்டுறவுச் சங்கங்கள் தங்களுக்குத் தேவையான பட்டுக் கூடுகளைக் கொள்முதல் செய்து வருகின்றன. பட்டுக்கூடுகளிலிருந்து எடுக்கப்படும் பட்டு, கச்சாப்பட்டு என்று அழைக்கப்படுகிறது. இதில் இரண்டு விதமான கச்சாப்பட்டு உள்ளது. அவைகள் பேசின்பட்டு. சர்க்கா பட்டு என்று வழங்கப்படுகின்றன. பட்டின் தரம் அதன் டெனியரைப் பொறுத்து மேலும் பிரிக்கப்படுகிறது. இந்த கச்சாப்பட்டு, பட்டு நெசவாளர்களுக்குத் தேவைப்படும் தரத்திற்கு ஏற்ப முறுக்குப் பட்டாக மாற்றி விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.



பட்டு நூல் தயாரிக்கும்தொழிலில் மொத்தம் 64 பட்டு கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. எல்லாச் சங்கங்களிலும் சேர்த்து சுமார் 12,450 சிறு பட்டு விவசாயிகள் உறுப்பினர்களாக இருந்து இயங்கி வருகிறார்கள். அச்சங்கங்களில் மொத்தம் 550 நபர்கள் பட்டு நூற்புத் தொழிலில் ஈடுபட்டு உள்ளனர்.

### பட்டுப்புழு வளர்ப்போர் சங்கங்கள்

மூன்று பட்டுப் புழு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் சமீப காலத்தில் போர்டு அறக்கட்டளை மற்றும் சுவீஸ் மேம்பாட்டுக் கழகத்தின் பொருள் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டு இயங்கத் தொடங்கி உள்ளன. பட்டு வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள மகளிர்களுக்கெனத் தனியே இச்சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இது வல்லாமல் மேலும் 5 சங்கங்கள் பட்டு நூற்புத் தொழிலில் ஈடுபட்டு உள்ள பெண்களுக்காகச் சமீப காலமாக அந்த நிறுவனங்களின் உதவியுடன் இயங்கி வருகின்றன. இத்துறையின் மூலம் அம்மகளிருக்குத் தேவைப்படும் தொழில் நுட்பம் மற்றும் உதவிகள் அவ்வப்பொழுது வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

இரண்டு பட்டுச்சேவை சங்கங்கள் பட்டு விவசாயிகளுக்கும் மற்றும் பட்டு நூற்போர்க்கும் தேவைப்படும் பொருட்களை நியாயமான விலைக்குக் கொள்முதல் செய்து, விற்பனை செய்து வருகின்றன. மேலும் புழு வளர்ப்புத் தளவாடங்கள், பூச்சி மருந்து, பார்மாலின் மற்றும் இது போன்ற பொருட்கள் அச்சங்கத்தின் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன

1989-ஆம் ஆண்டு இத்துறையால் புதிய ஒரு திட்டம் புதிதாகப் பட்டு விவசாயம் செய்வோருக்காக 4,000 ஏக்கர் பரப்பளவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் தட்டு, சந்திரிகை போன்ற தளவாடங்கள் குறைந்த வாடகைக்குப் பட்டு விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டு வருகின்றன. அரசு, இத்திட்டத்தில் செயல்படுத்தப்படும் தளவாடங்களுக்கு ஆகும் செலவில் 50 சதவீதம் மானியமாகச் சங்கங்கட்கு வழங்கியுள்ளது.

### டான்சில்க்

தமிழ்நாடு மாநில பட்டு உற்பத்தியாளர் தொழிற்கூட்டுறவு விற்பனை இணையம், காஞ்சிபுரம் ஒரு இணையமாகப் பதிவு செய்யப்பட்டு 'டான்சில்க்' என்ற பெயரில் 1978-ஆம் ஆண்டிலிருந்து இயங்கி வருகிறது. தமிழ்நாடு முழுவதும் இதன் இயக்க எல்லையாக வகுக்கப்பட்டுள்ளது. இந்த இணையம், நூற்பாளர்களிடமிருந்தும், முறுக்காளர்களிடமிருந்தும் பெறப்பட்ட பட்டு நூலினைப் பட்டு நெசவாளர்களுக்கு விற்பனை செய்து வருகிறது. இவ்விணையத்திற்கு 6 கிளைகளும் 5 பார்வை நிலையங்களும் முக்கியமான இடங்களில் இயங்கி வருகின்றன. இவ்விணையத்தைப் பொறுத்த வரையில் நமது மாநிலத்தில் பட்டின் விலையை நிலை பெறச் செய்வதில் முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை அறுதியிட்டுக் கூறலாம். 1988-89-ஆம் ஆண்டில் ரூ. 14.48 கோடி விலை மதிப்புள்ள 1.85 இலட்சம் கிலோ பட்டு நூல் டான்சில்க் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.



### வருங்காலத் திட்டம்

இரண்டு பட்டு கூட்டுறவுச் சங்கங்கள் மலைவாழ் மக்களின் மேம்பாட்டிற்காகத் தனியே ஆரம்பிக்கத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. மேலும் இணையத்தில் வியாபாரத்தை விரிவாக்கவும், முன்னேற்றம் அடையச் செய்யவும் இம்மாநிலத்தின் பட்டு நூல் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கத்தை எய்தவும் தேவையான சில திட்டங்கள் 'டான்சில்க்' மூலம் செயல்படுத்த இத்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

## அதிக அளவில் பட்டு நூலைப் பயன்படுத்தும் தமிழ்நாடு!

இந்தியாவில் தமிழ்நாடுதான் அதிக அளவில் பட்டுநூலை உபயோகிக்கும் மாநிலமாகும்.

காஞ்சிபுரம், ஆரணி, சேலம் மற்றும் கும்பகோணத்தில் உள்ள பட்டு நெசவாளர்கள் தங்களுக்குத் தேவையான பட்டுநூலைக் கர்நாடக மாநிலத்திலிருந்தே பெற்று வந்தனர். தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு பட்டு வளர்ச்சித் திட்டங்களின் காரணமாக, தமிழ்நாட்டில் பட்டுநூல் உற்பத்தி பெருகியதால், பட்டுநூல் தேவைக்குக் கர்நாடக மாநிலத்தை நம்பியிருந்த நிலை, குறைய ஆரம்பித்துள்ளது.

தமிழ்நாட்டில் பட்டுத் தொழிலின் ஒருமித்த வளர்ச்சியைக் கணக்கில் கொண்டும், பட்டு நூல் தேவையில் தன்னிறைவு பெறும் நோக்கத்துடனும் ரூ.41.77 கோடி செலவில் விரிவான பட்டு வளர்ப்புத் திட்டம் ஒன்று உலக வங்கி உதவியுடன் 1989-90-ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படவிருக்கின்றது.

இந்தத் திட்டம் தமிழகத்தில் மல்பரிச் சாகுபடிகளுக்கு ஏற்ற வசதிகள் அதிகம் பெற்றுள்ள ஒன்பது மாவட்டங்களில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்படி 12,000 எக்டேர் நிலம் மல்பரி நடவின் கீழ், புதிதாகக் கொண்டு வரப்படும்.

பட்டுக் கூடுகளின் உற்பத்தி 7,937 டன்கள் என்ற அளவிற்கும், பட்டுநூல் உற்பத்தி 859 டன்கள் என்ற அளவிற்கும் அதிகரிக்கும். இத்திட்டம் படிப்படியாக ஆண்டுக்கு ஒரு இலட்சம் பேர்களுக்குக் கூடுதலாக வேலை வாய்ப்பு அளிக்கும். இதில் 37 சதவிகிதம் வேலை வாய்ப்பு பெண்களுக்குக் கிடைக்கும்.

இத்திட்டத்தின் செயலாக்கத்திற்கு உலக வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டுவிட்டது. இத்திட்டத்திற்காக 1989-90-ஆம் ஆண்டில் ரூ.525.52 இலட்சம் செலவு செய்யப்படும். இத்திட்டம் ஐந்து ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்ட பிறகு, தமிழ்நாடு பட்டுநூல் உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதுடன், கிராமப்புறங்களில் உள்ள நலிவுற்ற மக்கள் – குறிப்பாக, பெண்கள் அதிக அளவில் வேலை வாய்ப்பினைப் பெறுவார்கள். அவர்களுடைய வாழ்க்கைத்தரமும் உயரும்.

வாழ்த்துக்கள்

# அரசு ரப்பர் கழகம்

(தமிழக அரசு நிறுவனம்)

ரப்பர் உற்பத்தியாளர் மற்றும் விநியோகஸ்தர்:

ஐ.எஸ்.ஐ. முத்திரை பெற்ற கான்சென்ட்ரேட்டட் லாட்டக்ஸ்

(ஐ.எஸ்.ஐ.எல். - 1860661)

மற்றும்

ஆர்.எம்.ஏ. இ.பி.சி., ஸ்கீம் கிரேப் ஆகியவை

ரப்பர் ரகங்கள் தேவைக்குத்

தொடர்பு கொள்ளவும்

பதிவு அலுவலகம்:

அரசு ரப்பர் கழகம்,

வடசேரி, நாகர்கோவில்-629 001

போன்: 3203/3204/3205 டெலக்ஸ்: 436 - 218

DIPR/2291/MS/89/எ.ரி/



இ.ஐ.டி. பாரி (இந்தியா) லிமிடெட், நெல்லிக்குப்பம்

இருநூறு ஆண்டுகாலமாக நாட்டின் சேவைக்காகத் தன்னை
அர்ப்பணித்துள்ள ஒரே இந்திய நிறுவனம் - இ.ஐ.டி. பாரி

அமிழ்தினும் இனிய பாரி சர்க்கரை
பார் புகழும் பாரி மிட்டாய்கள்
தரத்தில் மிகுந்த நிலத்தின் உரங்கள்
நலம் பல பயக்கும் பூச்சி மருந்துகள்
ஒளி மயமாக்கும் ஜென் செட்டுகள்
கண்ணைக் கவரும் பீங்கான் சுகாதாரச் சாதனங்கள்
மற்றும் பல அன்றாடத் தேவைப் பொருட்களைத்
தந்திடும் நிறுவனம் - இ.ஐ.டி. பாரி

கரும்பு பயிரிட ஏராளமான சலுகைகள்
இலவச வீரிய விதைக் கரணைகள்
மானிய விலையில் பூச்சி மருந்துகள்
கரும்பு பயிரிட வங்கிகள் மூலம் கடன் வசதிகள்
குறிப்பிட்ட ரகக் கரும்பிற்கு அதிக ஊக்கத் தொகைகள்
முன்பட்ட நடவுக்கு மானியங்கள்
பயிர்ப் பாதுகாப்பு ஆலோசனைகள்
கரும்பு மொத்த விலையும் ஒரே தவணையில் பட்டுவாடா
மற்றும் ஏராளமான சலுகைகள்
விவசாயிகளுக்கு அளிக்கும் ஒரே நிறுவனம் - இ.ஐ.டி. பாரி, நெல்லிக்குப்பம்.

E.I.D.-PARRY (INDIA) LIMITED,
NELLIKUPPAM - 607 105







# தடய அறிவியல்

பேராசிரியர் டாக்டர் ப. சந்திரசேகரன்

தடய அறிவியல் துறை இயக்குநர் பேராசிரியர் டாக்டர் ப. சந்திரசேகரன் 'மண்டை ஓடு இணைப்புக் கோடுகளைக் கொண்டு இறந்தோனை அடையாளம் காணல்' எனும் புதிய ஆய்வுக் கண்டுபிடிப்பை வெளியிட்டார். இதற்காக அவருக்கு ஆஸ்திரேலிய நாட்டுப் பல்கலைக் கழகம் ஜே.எல். யூஸ்டேஸ் விருதை அளித்துக் கௌரவித்தது. இத்தகைய விருதைப் பெறும் முதல் தமிழர், முதல் இந்தியர் இவரே ஆவார். இவரது நூற்றுக்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள் சர்வதேச சஞ்சிகைகளில் வெளி வந்துள்ளன.

ஓர்ந்துகண் ணோடாது இறை
புரிந்(து) யார் மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை'
என வள்ளுவம் வகுத்திட்ட வழியில் நீதி நடக்கும் நீதித் துறையையும், சமுதாய அமைதிக்குக் காவலனாய் அமைந்த காவல்துறையையும் இணைக்கும் பாலமாய் அமைந்து குற்றக் கண்டுபிடிப்பில் காவலதிகாரிக்குக் குற்றம் நடந்த விதம் விளக்கி, குற்றத்தை வழக்காடு மன்றத்தில் மெய்ப்பித்தலில் நேரும் தடை நீக்கி, வழக்



தடய அறிவியல் துறை-ஆய்வகத்தின் முகப்புத் தோற்றம்.

காடு மன்றத் தலைவர் 'மறம் அழித்து அறம் வளர்க்கும்' வகையில் நீதி கிடைத்திட வழிவகை செய்து அருந்தொண்டு புரியும் துறையாகும் இத்தடய அறிவியல் துறை.

**தோற்றமும் வளர்ச்சியும்**

இத்துறை மிகப்பழமையான பாரம்பரியம் கொண்டது. 1849- இல் இந்தியாவில் முதலில் சென்னையில் ஆரம்பிக்கப்பட்ட "வேதியல் ஆய்வாளர் ஆய்வகம்தான்" இன்றைய தடய அறிவியல் துறையின் முன்னோடி. இவ் 'வேதியல் ஆய்வாளர் ஆய்வகம் தவிர' 1886- இல் ஏற்பட்ட மதுவிலக்கு மற்றும் கலால் ஆய்வகம், 1905-இல் ஏற்பட்ட 'காவல்துறை ஆய்வகம்' ஆகியனவும் இன்றைய தடய அறிவியல் துறை அமையக் காரணமாயிருந்த ஆய்வகங்களாகும். ஒத்த பணி புரிந்த இம்மூன்று ஆய்வகங்களும் இணைக்கப்பட்டு 1959-இல் ஒருங்கிணைந்த 'மாநிலத் தடய அறிவியல் ஆய்வகம்' உருவாக்கப் பட்டது.

தற்போது இந்தத் தடய அறிவியல் ஆய்வகம் பெரிதும் வளர்ந்து, ஆய்வகப் பணியுடன், கல்விப் பணியும் செய்து தடய அறிவியல் துறை என்று செயலுக்கு ஒப்ப, பெயர் மாற்றத்துடன் இயங்கி வருகின்றது.

தொடக்க காலத்தில் சில அறிவியல் பிரிவுகளைக் கொண்டதாய் அமைந்த இத்துறை இன்றளவு பல சிறப்பு அறிவியல் பிரிவுகளை உள்ளடக்கி நல்லாய்வு நடத்தி வருகின்றது. இச்சிறப்பு அறிவியல் பிரிவுகளாவன: உயிரியல் (Biology) குருதி வடிநீரியல் (Serology), தெரியியல் (Physics), வேதியல் (Chemistry), நஞ்சியல் (Toxicology), ஆவணப் பிரிவு (Documents), மதுவிலக்குப் பிரிவு (Prohibition), கலால் பிரிவு (Excise), போதைப்பொருள் ஆய்வுப் பிரிவு (Norcotics), கருவிகள் பிரிவு (Instruments), ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப்பிரிவு (Research and Development) மற்றும் புகைப்படப் பிரிவு (Photo Division) என்பனவாகும்.

இத்துணைச் சிறப்புப் பிரிவுகளுடன் சென்னையில் மட்டுமே ஆய்வகம் அமைத்துச் செயல்பட்டு வந்த இத்துறை, பல்கிப்பெருகி வரும் குற்ற எண்ணிக்கையையும், அக்குற்ற வழக்குகளில் கண்டெடுக்கப்படும் தடயங்களை அறிவியல் முறையில் அணுகி ஆய்வுக்கேற்ற முறையில் சேகரித்தலின் நோக்கத்தையும் கருத்தில் கொண்டு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் முதன் முறை முதல்வராக இருந்தபோது, 1972-ஆம் ஆண்டு 'இயங்கும் தடய அறிவியல் ஆய்வகங்கள்' என்ற புதிய அமைப்பை, தமிழக அரசு ஒவ்வொரு காவல் மாவட்டத்திலும் ஏற்படுத்தியது.

ஒவ்வொரு மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளரின் நேரடி மேற்பார்வையில் தேர்ந்த இளம் தடய அறிவியல் வல்லுநர்களைக் கொண்டு நிர்வகிக்கப்படும் 'இயங்கும் தடய அறிவியல் ஆய்வகங்கள்' குற்றக் கண்டுபிடிப்பில் ஈடுபடும் காவலதிகாரிகளின் சீரிய குற்ற ஆய்வு முறைக்கு வித்திட்டன. தமிழகத்தில்தான் இத்தகைய அமைப்பு முதலில் தோற்றுவிக்கப்பட்டுப் பின்னர் பிற மாநிலங்களும் இத்தகைய அமைப்பை அமல்படுத்திக்கொண்டு வருகின்றன என்பது இத்துறையின் பெருமைக்குச் சான்று ஆகும்.

மேலும் 1975-ஆம் ஆண்டு முதல் மாநிலத்தில் பல்வேறு முக்கிய நகரங்களிலும் வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகங்களை ஏற்படுத்தி அந்தந்த வட்டாரத்தில் நடக்கும் குற்றத் தடயங்களை விரைவில் பெற்று குறுகிய காலத்தில் செம்மையான அறிக்கைகள் கிடைக்கும் வகையில் 'வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகங்கள்' வேலூர், சேலம், கோயம்புத்தூர், தஞ்சை, மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் ஏற்படுத்தப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன.

**ஆய்வுப் பணிகள்**

பல்வேறு பணி அமைப்பு அறிவியல் பிரிவுகளைக் கொண்டு அமைந்த தடய அறிவியல் துறை மற்றும் வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகங்கள் செய்யும் ஆய்வுப் பணியை அறிய வேண்டின், ஒவ்வொரு பணி அமைப்பு அறிவியல் பிரிவும் செய்யும் ஆய்வுப் பணியைச் சுருக்கமாக அறிவது சாலப் பொருத்தமாகும்.

**உயிரியல் பிரிவு**

இரத்தக்கறை, விந்துக்கறை, வியர்வைக்கறை, எச்சில்கறை, சிறுநீர்க்கறை, எலும்புகள், மயிரிழை மற்றும் மனித முயற்சியால் உருவான செயற்கை இழை வகைகள் ஆகியவற்றை ஆய்வு செய்தல் இப்பிரிவின் பணியாகும்.





மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் இந்திய கிரிக்கெட் அணித்தலைவர் திரு. கே. ஸ்ரீகாந்திற்கு சென்னை இந்திரா நகரில் வீட்டு மனையொன்றை அரசின் பரிசாக வழங்கியதற்காக திரு. ஸ்ரீகாந்த் அவர்கள் மாண்புமிகு முதல்வரை அவரது இல்லத்தில் சந்தித்து நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். (4.11.89)

**குருதி வடிநீரியல் பிரிவு**

உயிரியல் பிரிவில் ஆய்வு செய்து அறியப்பட்ட கறை மனித இனத்தைச் சார்ந்ததா? மிருக இனத்தைச் சார்ந்ததா? என்று அறிதலும், மனித இனமெனில் அதன் இரத்தவகைப் பாகுபாடு (Blood Grouping) செய்து அறிக்கை அளித்தலும் இப்பிரிவின் முக்கியப் பணிகள்.

**வேதியல்**

மண், வண்ணப் பூச்சுகள், தீப்பற்றக்கூடிய திரவம் மற்றும் திடப்பொருள்கள், வெடி விபத்து வழக்குகளில் கண்டெடுக்கப்படும் வெடி மருந்துப் பொருள்களின் துகள்கள், ஆகியனவற்றை வேதியல் ஆய்வு செய்து, அதன் வேதியல் மூலப்பொருள்களை அறிதல், அவை எந்த அளவில் உள்ளன என்று அறிதல், ஒப்பிடல் ஆகிய பணிகளும் இப்பிரிவில் செய்யப்படுகின்றன.

**தெரியியல்**

கள்ள ரூபாய் நோட்டுகள், கள்ள நாணயங்கள், அவற்றைத் தயாரிக்கப் பயன்படுத்தப்பட்ட கருவிகள், பேப்பர், உலோகம் ஆகியவற்றை ஆய்தல், மண்டையோட்டில் உள்ள இணைப்புக் கோடுகளைக் (Sutures) கொண்டு இறந்துவிட்ட நபரை அடையாளம் காணல்; மண்டையோட்டையும், சந்தேக நபரின் (இறந்து விட்டவர்) புகைப்படத்தையும் கொண்டு புகைப்படப்பதிவு ஒப்புகையும், மற்றும் உடைந்த பொருள்களின் பொருத்த ஒப்புமையும், வாகன விபத்து வழக்குகளில் வண்டியின் வேகம் ஆகியவற்றைக் கணித்தலும் ஆகிய ஆய்வுப் பணிகளை இப்பிரிவு மேற்கொள்ளுகிறது.

**ஆவணப்பிரிவு**

ஆவணங்களை ஆய்ந்து, போலி ஆவணமா, உண்மை ஆவணமா என்று அறிதல், முத்திரைகளை (Seals and Stamps) ஆய்தல், ஆவணத்தில் எழுத்துக்களை ஆய்ந்து, எழுதியோனை அடையாளங் காட்டல், பிற்சேர்க்கைகள், பின் தவிர்த்தல், அழித்தல் இருக்கின்றனவா என ஆய்தல், எழுதப்பட்ட காகிதத்தின் தன்மை, மையின் தன்மை, தட்டச்சு மற்றும் அச்சு எழுத்துக்களை ஆய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்கிறது இப்பிரிவு.

**துப்பாக்கிப் பிரிவு**


துப்பாக்கி பயன்படுத்தப்பட்ட வழக்குகளில் கண்டெடுக்கப்பட்ட துப்பாக்கி மற்றும் வெற்றுக்குண்டுகள், உயிர்க் குண்டுகள் ஆகியவற்றை ஆய்ந்து அந்த வழக்கில் ஒரு குறிப்பிட்ட துப்பாக்கி பயன்படுத்தப் பட்டதா என்றும், கண்டெடுக்கப் பட்ட குண்டு அந்தக் குறிப்பிட்ட துப்பாக்கியில் பயன்படுத்தப் பட்டதா என்றும் கண்டுபிடித்தலும், இந்திய ஆயுதச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள விதிகளின்படி ஒரு குறிப்பிட்ட வகைத் துப்பாக்கி உள்ளதா என ஆய்ந்து அறிக்கை அனுப்புதலும் இப்பிரிவுக்குரிய பணிகளாகும்.

**நச்சியல்**

சந்தேக மற்றும் கொலை வழக்குகளில் மருத்துவரால் எடுத்து அனுப்பப்படும் மனித உள் அவயவங்கள், இரத்தம், சிறுநீர் ஆகியவற்றை ஆய்ந்து நஞ்சு ஏதேனும் உள்ளதா, இருப்பின் நஞ்சின் தன்மை, அதன் அளவு ஆகியவற்றை அறிந்து சொல்லுதல் இப்பிரிவின் முக்கிய வேலை ஆகும்.

நம்முடைய தேகமும் உள்ளமும் ஆண்டவனுடைய கோயில். அதைச் சுத்தமாக வைத்துக் காப்பது நம் கடமை.

எவ்வளவு கல்வியும் செல்வமும் இருந்தாலும், அடக்கம் இல்லாவிடில், பண்பாடென்பது இல்லை.



ஒழுக்கத்துடனும், நாணயத்துடனும் ஒவ்வொரு வரும் நடந்து கொண்டால், எல்லோருக்கும் நன்மை விளையும்.

தீண்டாமை என்பது நமது சமூகத்தில் ஒரு மாசு, தீண்டாமை ஒரு விஷப் பாம்பு. அதைக் கொன்றாக வேண்டும்.

வாழ்க்கையில் தைரியமாக இருப்பதைவிட மகிழ்ச்சி அளிக்கக் கூடிய விஷயம் வேறு என்ன இருக்க முடியும்!

நம்முடைய சமூகம் சுதந்திர வாழ்க்கை அடைந்து விட்டது. சுதந்திரத்துடன் சுகமும் பெற வேண்டு மானால், மக்கள் அறவழியில் நிற்க வேண்டும்.

**கலால் பிரிவு**

கலால் மற்றும் கலால் வரிகள் சட்டவிதிகளுக்குட்பட்ட எரிசாரா யத்தை ஆய்ந்து சட்டவிதிகளின்படி தரம் மற்றும் அளவு உள்ளதா என்று ஆய்தல்; மருந்துகள் மற்றும் ஒப் பனைப் பொருட்களில் பயன்படுத் தப்படும் எரிசாராயம் விதி களின்படி சரியான அளவில் பயன்படுத்தப்படுகின்றதா என் பதை ஆய்ந்து, இது குறித்து, தயாரிப்பு உரிமம் வழங்குதலுக்குப் பரிந்துரை அளித்தல்; இந்திய வெளிநாட்டு மதுபான வகைகள், கைப்பற்றப் படும் வெளிநாட்டு மதுபான வகைகள் ஆகியவற்றில் எரிசாராயத் தரம் மற்றும் அளவு ஆகியவற்றை ஆய்தல் ஆகியவை இத்துறை ஆற்றுகின்ற பணிகளாகும்.

**மதுவிலக்குப் பிரிவு**

மதுவிலக்கு வழக்குகளில் அனுப் பப்படும் பலதரப்பட்ட மதுபான வகைகள், ஆயுர்வேதத் தயாரிப்புகள் ஆகியவற்றை ஆய்வு செய்தல் இப் பிரிவின் பணிகளாகும்.

**போதைப்பொருள் பிரிவு**

போதைப்பொருள் சட்டத்தில் தடை செய்யப்பட்டு சமுதாய வாழ் வில் கொடிய தீய பழக்கத்திற்குப் பயன்படும் கஞ்சா, அபின் ஆகிய வற்றை ஆய்வு செய்து அறிக்கை அளித்தலே இப்பிரிவின் வேலை யாகும்.

**கருவிகள் பிரிவு**

நவீன உயர்ரகக் கருவிகளைப் பயிற்சி பெற்ற அறிவியல் ஆய்வா ளர்களைக் கொண்டு புதிய ஆய்வு முறைகளைப் பயன்படுத்தி வழக்குத் தடயங்களை ஆய்வு செய்தும் மற்றப் பிரிவுகளுக்கு உதவியும் இப்பிரிவு பணியாற்றுகிறது.

**ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பிரிவு**

புதிய ஆய்வு முறைகளை வழி வகைப்படுத்தல், புதிய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளல், பிற பணி அமைப்பு அறிவியல் பிரிவுகளில் வழக்குத் தடயங்களை ஆய்வு செய்வதில் ஏற் படும் இடர்ப்பாடுகளைக் களைந்து நல்லாய்வு செய்தல் ஆகிய பணி களைச் செய்கிறது இப்பிரிவு.

**புகைப்படப் பிரிவு**

தடயங்கள் மற்றும் குற்ற நிகழ் விடங்களை அறிவியல் அணுகுமுறை யில் புகைப்படம் எடுத்தல், பொருத்த ஒப்புமை மற்றும் பொருள்கள் ஒப்புமை ஆய்வுகளில் புகைப்படம் எடுத்து மற்ற பிரிவுகள் ஆய்வறிக்கை தயாரிக்க உதவுகிறது இப்பிரிவு.

இவ்வாறு பலதரப்பட்ட தட யங்கள், தடயத் தன்மைக்கு ஏற்ப, பல பிரிவுகளால் ஆய்வு செய்யப்பட்டு, ஆய்வறிக்கை முடிவுகள் வழக்காடு மன்றத்திற்கு அளிக்கப்படுகின்றன. இத்தடய அறிவியல் துறையின் தேர்ந்த அறிவியல் அலுவலர்களால் அளிக்கப்படும் ஆய்வு முடிவுகள் குற்றவியல் நடைமுறைச் சட்ட (Criminal Procedure code...) விதி 293-இன் படி வழக்காடு மன்றங்களில் ஒப்புக் கொள்ளப்பட்ட சாட்சி ஆவண மாகும். மேலும் அறிவியல் ஆய்வு அறிக்கைகள் கண்ணால் கண்ட நேரடிச் சாட்சியமில்லாத வழக்கு களில் குற்றத்தை மெய்ப்பிக்கவும், வழக்காடு மன்றத் தலைவருக்கு நீதி வழங்குதலுக்குத் துணை நிற்கின்[illegible].

**(அடுத்த இதழில் முடியும்)**



# மூதறிஞர் இராஜாஜியின் வாழ்க்கையிலே...



1878 ஓசூருக்கு அருகில் உள்ள தொரப்பள்ளி கிராமத்தின் முன்சீப்பாக இருந்த சக்கரவர்த்தி வேங்கடார்யா, சிங்காரம்மா தம்பதியருக்கு 10-12-1878 செவ்வாய்க்கிழமை மூன்றாவது மகனாகப் பிறந்தார்.

ஓசூரில் பள்ளிக் கல்வி-பெங்களூரில் உயர்நிலைக் கல்வி-கல்லூரிக் கல்வி, சென்னை மாநிலக் கல்லூரியில் பட்டப்படிப்பு.

1896- பி.ஏ. பட்டதாரியானார்.

1898- சித்தூர் திருமலை சம்பங்கி அய்யங்கார் மகள் அலர்மேலு மங்கம்மாளை (மங்கா) மணந்தார். மூன்று ஆண்கள், இரண்டு பெண்கள் பிறப்பு.

1900- வழக்குரைஞர் பட்டம்- வழக்குரைஞர் பணி சேலத்தில் துவக்கம்.

1906- சென்னை உயர்நீதிமன்ற வழக்குரைஞராகப் பதிவு செய்தல். தாயார் மறைவு.

சேலம் கல்லூரியில் ஆதிதிராவிட மாணவர்களைக் சேர்க்க முயன்று வெற்றி கண்டார்.

1909- மக்கள் கவிஞர் சுப்பிரமணிய பாரதியாருடன் சந்திப்பு.

1910- கர்நூல் சமூக சீர்திருத்த மாநாட்டில் கலப்புத் திருமணத்தை ஆதரித்துப் பேசினார்-காந்தியடிகளுடன் சந்திப்பு-காந்தியடிகளின் நூல்களைப் படித்து மகிழ்ந்தார்.

1911- சேலம் நகராட்சி உறுப்பினர்.

1915- மனைவி மறைவு.

1916- 'விஞ்ஞானத் தமிழ்ப் பதங்கள் சங்கம்'- தோற்றுவித்தார்-சுயாட்சி சங்கத்தில் சேர்ந்திருந்தார்.

1917- நகராட்சி உறுப்பினராக இல்லாமலேயே நகராட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். வைதிகர் எதிர்ப்புக்கிடையே ஆதிதிராவிடர்களைப் பணியில் சேர்த்தார்.

1918- பம்பாய் காங்கிரஸ் மாநாட்டில் பங்கேற்பு-காஞ்சிபுரம் தமிழ் மாகாண மாநாட்டில் பங்கேற்பு-டாக்டர் வரதராஜுலு நாயுடு மீது சாட்டப்பட்ட ராஜதுவேஷ வழக்கில் வாதாடி வெற்றி பெற்றார்.

1919- சேலம் நகராட்சித் தலைவர் பதவியை ராஜினாமா செய்தார். சென்னையில் மயிலாப்பூர் 'திலகர் பவனத்தில்' குடியேறினார். காந்தியடிகள் சென்னை வந்தபோது இராஜாஜி வீட்டில் தங்கினார்-சென்னையில் சத்தியாகிரக சபைக்கு இராஜாஜி செயலாளர் ஆனார்.

1920- திருநெல்வேலி தமிழ் மாகாண மாநாட்டில் பங்கேற்பு.

1921- ஒத்துழையா இயக்கப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு முதன் முறையாக வேலூர்ச் சிறையில் அடைக்கப்பட்டார்.

மூத்த சகோதரரும் தந்தையாரும் மறைவு.

1922- 'யங் இந்தியா', 'லீடர்' 'நோ சேஞ்ச்' ஆகிய ஏடுகளின் ஆசிரியர் பொறுப்பு.

1925- திருச்செங்கோட்டை அடுத்துள்ள புதுப்பாளையத்தில் காந்தி ஆசிரமம் துவக்கம். 'புரொகிபிஷன்' என்ற ஆங்கில ஏட்டிற்கும், 'விமோசனம்' என்ற தமிழ் ஏட்டிற்கும் ஆசிரியராக இருந்தார். அகில இந்திய மதுவிலக்குச் சங்கத்திற்கும், காங்கிரஸ் மதுவிலக்குக் கமிட்டிக்கும் செயலராக இருந்தார்.

1929- மதுவிலக்குப் பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபட்டார்.

1930- வேதாரண்யம் உப்பு சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு, 9 மாத சிறைத்தண்டனை.

1932- அரிசனங்கள் ஆலயப் பிரவேச இயக்கத்தில் தீவிரம்.

1933- மகள் லட்சுமிக்கும், காந்தியடிகள் மகன் தேவதாசுக்கும் திருமணம்.

1937- பிரிக்கப்படாத சென்னை மாநிலத்தின் பிரதம அமைச்சரானார். வெள்ளையர் நீல் துரையின் உருவச்சிலை அகற்றப்பட்டு மியூசியத்தில் வைக்கப்பட்டது.

1938- விவசாயிகள், கடன் நிவாரணச் சட்டம்- மதுவிலக்குத் திட்டம் முதன் முதலாக சேலம் மாவட்டத்தில் அமல்படுத்தப்பட்டது.

1939- பிரதம அமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார்.

1940 இந்தியப் பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்பட்டு வேலூர்ச் சிறையில் அடைக்கப்பட்டார். சிறைவாசத்தில் தமிழில் நூல்கள் எழுதினார்.

1942- காங்கிரசின் கொள்கையில் மாறுபட்டு, காங்கிரசு இயக்கத்தை விட்டு வெளியேறினார்.

1945- மீண்டும் காங்கிரசில் சேர்ந்தார்.

1946- பண்டித நேருவின் தலைமையில் அமைந்த இடைக்கால அமைச்சரவையில் அமைச்சர் ஆனார்.

1947- ஆகஸ்டு-15, இந்தியா விடுதலை-மேற்கு வங்காளத்தில் ஆளுநர் பொறுப்பு.

1948- இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலாகப் பொறுப்பு ஏற்றார்.

1950- இராசேந்திர பிரசாத் குடியரசுத் தலைவரானதும், இராஜாஜி மைய அரசின் அமைச்சர் ஆனார்.

1952- மைய அரசு அமைச்சர் பொறுப்பிலிருந்து விலகி, சென்னை மாநில முதலமைச்சர் ஆனார்.

1954- பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது. மாநில முதலமைச்சர் பொறுப்பிலிருந்து விலகினார்.

1960 சுதந்திரக் கட்சியை உருவாக்கினார். 'சுயராஜ்யா' என்ற ஆங்கிலப் பத்திரிகையை நடத்தினார்.

> ★ கோபம் கூடாது. அது முகத்தின் அழகைக் கெடுத்து விடுகிறது. சாந்தமே முகத்திற்கு அழகு தருகிறது.
>
> ★ பள்ளிக்கூடங்கள் தேசத்தில் எத்தனை இருந்தாலும், பண்பாட்டுக்குப் பள்ளிக்கூடம் வீடேயாகும்.
>
> இராஜாஜி

1962- தம் 85-வது வயதில் அணு ஆற்றலைத் தீய செயலுக்குப் பயன்படுத்துவதை எதிர்க்கும் குழுவில் பங்கு பெற்று அமெரிக்கா சென்று அந்நாளைய அமெரிக்கக் குடியரசுத் தலைவர் கென்னடியைச் சந்தித்தார்.

1967- தமிழ்நாட்டில் பொதுத் தேர்தலில் பேரறிஞர் அண்ணாவுக்கு உறுதுணையாக இருந்து, காங்கிரஸ் அல்லாத ஆட்சி அமையப் பாடுபட்டார்.

1972- அக்டோபர் 8 அன்று, சென்னை கிண்டி காந்தி மண்டபத்தில் காந்தி பிறந்த நாள் விழாவில் கலந்துகொண்டு பேசினார். அதுதான் அவரது கடைசி உரை.

டிசம்பர் 25-சென்னையில் மறைவு. டிசம்பர் 26—இல் அவரது உடல் அரசு மரியாதையுடன் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு, சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள கிருஷ்ணாம்பேட்டை மயானத்தில் எரியூட்டப்பட்டது.

### நினைவில் இராஜாஜி

1973- டிசம்பர் 25 அன்று இராஜாஜி நினைவு 20 காசு அஞ்சல் தலையை மைய அரசு வெளியிட்டுச் சிறப்பித்தது.

1975- சென்னை கிண்டி படேல் சாலையில் காந்தி மண்டபம் அருகில் இராஜாஜி நினைவாலயம் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் கட்டப்பட்டு 5-5-1975 அன்று திறந்து வைக்கப்பட்டது.

1978- தர்மபுரி மாவட்டம், தொரப்பள்ளியில் இராஜாஜி பிறந்த வீட்டை, அன்றைய தமிழக முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் 10-12-1978 அன்று நினைவு இல்லமாக மாற்றினார்.

அதே நாளில் இராஜாஜி நினைவு 25 காசு அஞ்சல் தலையையும் மைய அரசு வெளியிட்டுச் சிறப்பித்தது.

சென்னை உயர்நீதிமன்றத்துக்கருகில் இராஜாஜி சிலை 24-12-78 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வடக்குக் கடற்கரைச் சாலைக்கு இராஜாஜி சாலை என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் இராஜாஜி முழு உருவப்படம் அணி செய்கிறது.



TNPSC விளம்பர எண் 65

## தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

தமிழ்நாடு வேளாண்மை விரிவாக்கப் பணியில் வேளாண்மை அலுவலர் (விரிவாக்கம்) பதவியில் 111 காலியிடங்களுக்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்ய விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

குறிப்புகள்:-

(அ) விளம்பரத்தில் கண்டுள்ள காலியிடங்களின் எண்ணிக்கை தோராயமானவையே. மேற்படி காலியிடங்களின் எண்ணிக்கை தேர்ச்சி நடக்கும் சமயமோ அல்லது அதற்கு முன்னரோ காலியிடங்களைப் பொறுத்து மாற்றியமைக்கப்படும்.

(ஆ) இன ஒதுக்கீட்டு விதியின்படியும் (ஆதி திராவிட வகுப்பினர், பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர் மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பகிரங்க போட்டி) மற்றும் பெண்களுக்கான ஒதுக்கீட்டு விதியின்படியும் தெரிவு செய்யப்படும்.

(இ) தேர்ச்சியும் தகுதியும் வாய்ந்த பெண்கள் கிடைக்கப் பெறாவிடில், அத்தகைய காலியிடங்கள் ஆண்களைக் கொண்டு நிரப்பப்படும்.

(ஈ) அறிவிக்கப்பட்டுள்ள காலியிடங்கள் முந்தைய தேர்வில் நிரப்பப்படாத ஆதி திராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினருக்கான 58 காலியிடங்கள் உள் அடக்கியதாகும்.

சம்பளம்:- மாதம் ஒன்றுக்கு ரூ.1,640-60-2,600-75-2,900

வயது:- 30 வயதிற்குக் குறைவாக. எம்.எஸ்.சி (விவசாயம்) அல்லது பி.எச்.டி. போன்ற வேளாண்மையில் முதுநிலைப் பட்டம் பெற்றவர்களுக்கு 32 வயதிற்குக் குறைவாக.

தகுதி:-

(1) வேளாண்மையில் ஓர் இளநிலைப் பட்டம்; (A Bachelor's degree in Agriculture)

(2) ஒவ்வொரு விண்ணப்பதாரரும் போதுமான தமிழறிவு பெற்றிருக்க வேண்டும்.

விளக்கம்:- கீழ்க்காணும் தகுதியைப் பெற்றிருந்தால் ஒருவர் போதிய தமிழ் அறிவு பெற்றவராய்க் கருதப்படுவார். பள்ளியிறுதி பொதுத் தேர்வில் தமிழை ஒரு மொழியாக எடுத்து தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் அல்லது உயர்நிலைப் பள்ளிப்படிப்பில் தமிழைப் பயிற்றுமொழியாகக் கொண்டும், பள்ளியிறுதி பொதுத் தேர்வைத் தமிழில் எழுதி தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும், அல்லது தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தினால் நடத்தப்பெறும் இரண்டாம் வகுப்பு மொழித் தேர்வில் தமிழில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

குறிப்பு:- இந்த தேர்விற்கு, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகள் பத்தி 7-ன் கீழ் உள்ள குறிப்பில் கூறப்பட்டு உள்ளவை பொருந்தாது.

இறுதி நாள்: 18.12.1989 அன்று மாலை 5.30 மணி

வயது வரம்பு: 1.7.1989 அன்றுள்ளபடி

ஆதி திராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்பட்ட வகுப்பினர்/சீர் மரபினர், பிற்பட்ட வகுப்பினர், ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் ''பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்'' தரப்பட்டுள்ளன. தேர்வாணையத்தின் ''பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்'' (Instructions etc. to Candidates) பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் அறிவிக்கப்பட்டுள்ள எல்லா சலுகைகளும், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர் மரபினருக்கும் பொருந்தும்.

விண்ணப்பப் படிவமும் நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு, செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-2 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.11.1989 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10/-) சென்னை, அண்ணாசாலை. தபால் அலுவலகத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் (State Bank of India) ஏதாவது ஒரு கிளையில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக்கூடிய 1.10.1989 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட சென்னை-6 ஆயிரம் விளக்கு பாரத ஸ்டேட் வங்கியில் Code No.0800ல் செலுத்தத்தக்க பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10/-) ''கேட்புக் காசோலை'' (Account Payee Demand Draft) உடன் சுய விலாசம் எழுதிய உறையுடனும் (26 × 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிறமொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழிபெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

DIPR/2439/MS/89

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

**சென்னை-600 002**

தேர்வாணையத்தால் 1989 அக்டோபர் 24 மற்றும் 25 நாட்களில் தமிழ்நாடு மருத்துவப் பணியில் உதவி பல் மருத்துவர் பதவிக்கு நடத்தப்பட்ட முதன்மை எழுத்துத் தேர்வு (Main written Examination) முடிவின் அடிப்படையில் தற்காலிகமாக நேர்முகத் தேர்வுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களின் பதிவெண்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. நேர்முகத் தேர்வு, சென்னை-2, அண்ணா சாலை அரசினர் தோட்டத்தில் உள்ள அரசுப் பணியாளர் தேர்வாணைய அலுவலகத்தில் நடைபெறும். நேர்முகத் தேர்விற்கான நாள் மற்றும் நேரம் ஆகியன குறித்த விவர அறிவிப்பு தனித்தனியே விண்ணப்பதாரர்களுக்கு உரிய நேரத்தில் தெரிவிக்கப்படும். இப்பட்டியலில் இடம் பெறாத பதிவு எண்களை உடைய விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வுக்கு அனுமதிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறார்கள்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 6 | 9 | 13 | 34 | 36 | 41 | 58 |
| 60 | 66 | 70 | 81 | 82 | 102 | 116 |
| 126 | 132 | 137 | 146 | 155 | 156 | 159 |
| 186 | | | | | | |

DIPR:2521/MS/89-Efficient

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

அதி நவீன பட்டு வகைகள்



100% உன்னதமான பட்டு
உத்தரவாதமான சரிகை

ங்கள் உலகில் முக்கிய பங்கு பெறுவது வண்ணங்கள்... அவைகளின் அழகு ஜாலங்களை பொலிவும் நேர்த்தியும் மிக்க பட்டு வகைகளில் உங்களுக்குக் கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது.

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் —
உங்கள் இனிய நேரங்களில்!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி
இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

• புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு • ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங்
• பெட்ஷீட்கள் • டவல்கள் • வேட்டிகள் • லுங்கிகள். இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.

DIPR/1766/MS/88/HTA

தமிழரசு பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)













# தமிழரசு

16-12-1989 ரூ. 1





தோற்றம்: 10.12.1878
மறைவு: 25.12.1972



தோற்றம்: 17. 9. 1879
மறைவு: 24.12.1973

# இந்த இதழில்...


| | |
|---|---|
| புதிதாகப் பொறுப்பேற்றுள்ள மத்திய அமைச்சர்கள் ... | 2 |
| கொடி நாள் ... | 8 |
| தடய அறிவியல் ... | 9 |
| சொந்தக்காலில் நிற்போம்! ... | 13 |
| தாமிரபரணி நீர்ப்பாசன மேம்பாட்டுப் பணிகள் ... | 15 |
| பெரியார் ஒருவர்தான்! ... | 17 |
| நினைவில் இராஜாஜி ... | 18 |
| 1989 நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் தமிழ்நாடு ... | 19 |
| திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டத்தில் கூட்டுறவு வளர்ச்சி ... | 33 |
| கோழி நலத்தில் வடகிழக்குப் பருவக்காற்று ... | 37 |
| சமுதாயத்தின் தேவையை நிறைவு செய்வது கல்வி -மாண்புமிகு கல்வி அமைச்சர் ... | 41 |



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2020

சுக்ல ஆண்டு - மார்கழி - 1

மலர்:20 இதழ்:12

16-12-1989

# புதிதாகப் பொறுப்பேற்றுள்ள மத்திய அமைச்சர்கள்

## மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. வி.பி. சிங்

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. விஸ்வநாத் பிரதாப் சிங் அவர்கள் உத்தரப் பிரதேச மாநிலம் அலகாபாத் நகரில் 1931-ஆம் ஆண்டு ஜூன் 25-ந் தேதி பிறந்தார். திரு. வி.பி. சிங்கின் தந்தை திரு. பகவதி பிரதாப் சிங். அவர் தையா அரசர் ஆவார்.

திரு. வி.பி. சிங்குக்கு 5 வயது இருக்கும் போது, மாண்டா அரசர் கோபால் சரண்சிங்கால் தத்து எடுக்கப்பட்டார்.

திரு. வி.பி. சிங்கின் தந்தைக்கு 2 மனைவிகள், முதல் மனைவியின் மகன்களில் மூத்தவர் திரு. சந்திரசேகர் பிரதாப் சிங். இவர் அலகாபாத் உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்தவர். 2-வது மகன் திரு. வி.பி. சிங். அவர் மனைவியின் பெயர் திருமதி சீதாகுமாரி.

5 வயதிலேயே திரு. வி.பி. சிங் தத்து கொடுக்கப்பட்டதால் அவர் தனது பெற்றோரையோ, சொந்த சகோதரர்களையோ சந்திக்க முடியாமல் வளர்ந்தார். இதனால் திரு. வி.பி. சிங்கின் இளமைக்காலம் அலகாபாத்தில் உள்ள ஆயிசா மகாலில் பெரும்பாலும் தனிமையிலேயே கழிந்தது.

திரு. வி.பி. சிங் டேராடூனில் கர்னல் பிரவுன் பள்ளியில் படிப்பைத் தொடங்கினார். பின்னர் அலகாபாத்தில் உள்ள பாலஸ் உயர்நிலைப் பள்ளியில் படித்தார்.

அதனைத் தொடர்ந்து வாரணாசியில் உள்ள உதய்பிரதாப் கல்லூரியில் படித்தார். கல்லூரியில் படிக்கும்போதே தையா நகரில் சிறுவர்களுக்கான பள்ளிக்கூடம் நடத்தினார். அப்போது பொதுக் கூட்டங்களில் ஜமீன்தாரி முறைக்கு எதிர்ப்பு தெரிவித்துப் பேசி உள்ளார்.

1950-ஆம் ஆண்டு பூமிதான இயக்கத் தலைவர் ஆச்சாரியவினோபாபாவே உத்தரப் பிரதேசத்தில் சுற்றுப்பயணம் செய்தார். திரு. வி.பி. சிங்கை பூமிதான இயக்கம் கவர்ந்தது. ஒரு கிராமத்தில் நடந்த கூட்டத்தில் தனது விவசாய நிலங்கள் அனைத்தையும் பூமிதான இயக்கத்திற்கு அளிப்பதாக திரு. வி.பி. சிங் அறிவித்தார். ஆனால், அத்தனை நிலத்தையும் வினோபா ஏற்கவில்லை. விதிமுறைப்படி ஆறில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றார். இதனால் மீதி இடத்தைப் பள்ளிக்கூடம் கட்ட இலவசமாக வழங்கி விட்டார் திரு. வி.பி. சிங். பின்னர், தனது மாண்டா அரண்மனையின் பாதியை சாஸ்திரி குடும்பத்திற்கு வழங்கினார்.

பூமிதான இயக்கத்தில் திரு. வி.பி. சிங் தீவிரமாக இருந்தபோது, வயலில் வேலை செய்து இருக்கின்றார். உழுதல், கதிர் அறுத்தல், மண் வெட்டுதல் உள்பட அனைத்து வேலைகளும் செய்வார். கட்டடம் கட்டச்செங்கல் சுமந்தார்.

படிக்கும்போது, அரசியலில் தலையிடமாட்டார். விடுமுறை கிடைக்கும்போது ஒவ்வொரு கட்சியின் கொள்கைகளையும் படிப்பார்.

காங்கிரஸ் கட்சியில் 1956-ஆம் ஆண்டுதான் சேர்ந்தார்.

1971-ஆம் ஆண்டு உத்தரப் பிரதேசத்தில் திரு. வி.பி. சிங் துணை அமைச்சராக இருந்தார். நெருக்கடி நிலைக்காலத்தில் ராஜாங்க அமைச்சராக இருந்தார். பின்னர், உத்தரப் பிரதேச முதல் அமைச்சரானார்.

இந்திரா மறைவுக்குப் பின் திரு. ராஜீவ் காந்தி பிரதமர் ஆனபோது நிதி அமைச்சராக ஆனார். அப்போது அவர் பேர்பாக்ஸ் என்ற வெளிநாட்டு உளவு அமைப்பு உதவியுடன் இ. காங்கிரஸ் ஆதரவுத் தொழில் அதிபர் திரு. அம்பானியின் வெளிநாட்டுக் கணக்குகளைக கண்டுபிடிக்க முயற்சித்தார். இதனால் பதவியில் இருந்து இராஜினாமா செய்ய வேண்டியதாயிற்று.

இ. காங்கிரசில் இருந்து விலகிய திரு. வி.பி. சிங் ஊழலை எதிர்த்துப் போராட, ஜனமோர்ச்சா என்ற அமைப்பைத் தொடங்கினார். அதில் பல கட்சிகள்இணைந்தன. பின்னர் அவர் ஜனதா, மக்கள் கட்சி இணைந்து உருவான ஜனதா தளத்திற்கே தலைவரானார்.

ஜனதா தளம், தி.மு.க., தெலுங்கு தேசம், அசாம் கனபரிஷத் போன்ற கட்சிகளுடன் கூட்டணி அமைக்கும் வகையில், தேசிய முன்னணியைத் தொடங்கி அதன் அமைப்பாளராகச் செயல்பட்டு வந்தார்.

திரு. வி.பி. சிங் இயற்கைக் காட்சிகளை ஓவியமாக வரைவதில் வல்லவர். புகைப்படம் எடுக்கும் ஆர்வமும் உண்டு. இவை தவிர இரண்டு வரி கவிதைகளை இயற்றுவதிலும் வல்லவர்.



## துணைப் பிரதமர் திருதேவிலால்

துணைப் பிரதமராகப் பதவி ஏற்றுள்ள திரு தேவிலால் அவர்கள் அரியானா மாநிலத்தில் உள்ள கிராமத்தில் 1914 செப்டம்பர் 25-ந் தேதி பிறந்தார். அவர் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர். பள்ளிப் படிப்போடு தனது படிப்பை முடித்துக் கொண்டவர். ஆரம்ப காலத்தில் காங்கிரசில் சேர்ந்து, நாட்டின் விடுதலைக்காக அரும்பாடு பட்டார். அரியானாவில் பெரும்பான்மையாக உள்ள 'ஜாட்' இனத்தின் தலைவராக ஏற்கப்பட்டார். அரியானாவில் பல அரசியல் தலைவர்களை உருவாக்கிய பெருமை இவருக்கு உண்டு.

1950-இல் பஞ்சாபும், அரியானாவும் ஒரே மாநிலமாக இருந்தபோது, பிரதாப் சிங் கைரோன் முதலமைச்சராக இருந்தார். அவரது அமைச்சரவையில் தேவிலால் இடம் பெற்று இருந்தார். 1952, 1957, 1962 ஆகிய ஆண்டுகளில் பஞ்சாப் சட்டசபைக்கு நடந்த தேர்தல்களில் வெற்றி பெற்றார். 1956-57-இல் பஞ்சாப் மாநிலக் காங்கிரஸ் தலைவராக இருந்தார்.

1968-முதல் 73 வரை கிசான் சங்கர்ஷ் சமிதி என்ற விவசாயிகள் சங்கத்தை உருவாக்கி, அதன் தலைவராக இருந்தார்.

அரியானா சட்டசபைக்கு 1974, 1977, 1982, 1987 ஆகிய ஆண்டுகளில் நடந்த தேர்தல்களில் போட்டியிட்டு வேற்றி பெற்றார்.

1977-இல் ஜனதா ஆட்சிக்கு வந்தபோது தேவிலால் அரியானா முதலமைச்சராக இருந்தார்.

1980 ஜனவரியில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றார்.

1985-இல் பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி சீக்கியத் தலைவர் லோங்கோவாலுடன் பஞ்சாப் ஒப்பந்தம் செய்தார். இந்த ஒப்பந்தத்தில் அரியானா வஞ்சிக்கப்பட்டதாக பலத்த எதிர்ப்பு கிளம்பியது; அதனால் ஒப்பந்தத்தை ஆட்சேபித்து தேவிலால் தலைமையில் ஜனதா கட்சி எம்.எல்.ஏ.க்கள் கூண்டோடு பதவி விலகினார்கள்.

திரு. தேவிலால் சரண்சிங்குக்குப் பிறகு லோக்தளம் கட்சிக்குத் தலைமை வகித்தார்.

## மத்திய அமைச்சர்களின் துறைகள் விவரம்:

பிரதமர் திரு. வி.பி. சிங் :

பாதுகாப்பு, ஊழியர்நலன், பொதுமக்கள் குறைகள் தீர்ப்பு, ஓய்வூதியம். விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், அணுசக்தி, மின்னணுயியல், கடல்வள மேம்பாடு, விண்வெளி, சுற்றுச் சூழல், வனத்துறை (இவைதவிர காபினட் அமைச்சர்கள் இணை அமைச்சர்கள் யாருக்கும் ஒதுக்கீடு செய்யப்படாத துறைகள் அனைத்தும்)

| | | |
|---|---|---|
| துணைப் பிரதமர் திரு. தேவிலால் | ... | விவசாயம் |
| பேராசிரியர் திரு. மதுதண்ட வதே | ... | நிதி |
| திரு. ஜார்ஜ் பெர்னாண்டஸ் | : | இரயில்வே |
| திரு. அஜித் சிங் | : | தொழில் |
| திரு. சரத் யாதவ் | : | ஜவுளி, கூடுதல் பொறுப்பு உணவு பதப்படுத்தும் தொழில்கள் |
| திரு. முப்தி முகமது சையத் | : | உள் துறை |
| திரு. அருண்குமார் நேரு | : | வர்த்தகம், சுற்றுலா |
| திரு. ஆரிப் முகமதுகான் | : | எரிசக்தி, கூடுதல் பொறுப்பு உள்நாட்டு விமானப் போக்குவரத்து |
| திரு. ராம்விலாஸ் பஸ்வான் | : | தொழிலாளர் நலம் |
| திரு. நீலமணி ரௌத்திரே | : | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலம் |
| திரு. ஐ.கே. குஜ்ரால் | : | வெளியுறவு |
| திரு. எம்.எஸ். குருபாதசாமி | : | பெட்ரோலியம், இரசாயனம் |
| திரு. நாதுராம் மிர்தா | : | உணவு, விநியோகம் |
| திரு. பி. உபேந்திரா | : | செய்தி மற்றும் ஒலிபரப்பு, நாடாளுமன்ற விவகாரம் |
| திரு. கே.பி. உன்னிகிருஷ்ணன் | : | சாலைப் போக்குவரத்து, கூடுதல் பொறுப்பு தகவல் தொடர்பு |
| திரு. தினேஷ் கோஸ்வாமி | : | உருக்கு, சுரங்கங்கள், கூடுதல் பொறுப்பு-சட்டம் - நீதி |
| திரு. முரசொலி மாறன் | : | நகர்ப்புற வளர்ச்சி |

இணை அமைச்சர்கள்: (தனிப்பொறுப்பு)

| | | |
|---|---|---|
| திரு. மனுபாய் கொதாடியா | : | நீர்வளம் |
| திருமதி மேனகா காந்தி | : | சுற்றுப்புறச் சூழல், வனம் |

1987-இல் நடந்த அரியானா சட்டசபைத் தேர்தலில் தேவிலால் தலைமையிலான லோக் தளம் அமோக வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தது. தேவிலால் 2-வது தடவையாக முதலமைச்சர் ஆனார். தனது ஆட்சிக் காலத்தில் அரியானாவில் விவசாயிகளுக்குக் கடன் தள்ளுபடி செய்தார்.

லோக்தளம், ஜனமோர்ச்சா, ஜனதா ஆகிய மூன்று கட்சிகள் சேர்ந்த ஜனதா தளம் என்ற புதிய கட்சி உருவாக மூல காரணமாக இருந்தவர்களில் தேவிலாலும் ஒருவர்.

### பேராசிரியர் திரு. மதுதண்டவதே

65 வயதான திரு. மதுதண்டவதே மராட்டிய மாநிலம் அகமத் நகரில் பிறந்தவர்.

சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டவர். 1942-இல் நடந்த 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில் தீவிர பங்கு கொண்டவர்.

எம்.எஸ்ஸி பட்டதாரியான மதுதண்டவதே 1948-ஆம் ஆண்டு பிரஜா சோசலிஸ்டு கட்சியில் சேர்ந்தார். பிரஜா சோசலிஸ்டு கட்சியும், சம்யுக்த சோசலிஸ்டு கட்சியும் இணைந்தபோது இணைந்த கட்சியின் பொதுச் செயலாளர் ஆனார். முதன் முதலாக 1971-ஆம் ஆண்டு மராட்டிய மாநிலம் ராஜாப்பூர் தொகுதியில் இருந்து மக்களவைக்குத் தேர்ந்து எடுக்கப்பட்டார். அது முதல் தொடர்ந்து அந்தத் தொகுதியின் பிரதிநிதியாக இருந்து வருகிறார்.

1975-ஆம் அண்டு மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு 15 மாதம் சிறையில் அடைக்கப்பட்டார்.

மதுதண்டவதே பம்பாயில் உள்ள சித்தார்த்தா கலைக்கல்லூரியில் துணை முதல்வராகவும் பணியாற்றி இருக்கிறார்.

பல உலக நாடுகளில் சுற்றுப் பயணம் செய்துள்ள அவர் சிறந்த எழுத்தாளர். ஏராளமான புத்தகங்கள் எழுதி இருக்கிறார்.

மத்தியில் ஜனதா ஆட்சியின் போது ரெயில்வே மந்திரியாக இருந்தார்.



### திரு. ஜார்ஜ் பெர்னாண்டஸ்

தொழிற்சங்கவாதியான திரு. ஜார்ஜ் பெர்னாண்டஸ், பத்து ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் பதவிக்கு வந்துள்ளார். மொரார்ஜி தேசாய் தலைமையிலான ஜனதா அரசில் தொழில்துறை அமைச்சராக பெர்னாண்டஸ் பணியாற்றினார்.

கர்நாடக மாநிலம் மங்களூரில் 1930-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 3-ஆம் தேதி பெர்னாண்டஸ் பிறந்தார். பெர்னாண்டஸின் பெற்றோர், அவரைப் பாதிரியாராக்க விரும்பினர். ஆனால் அவருக்கு அதில் விருப்பமில்லை. அவர் தத்துவம் படித்தார்.

முதன் முதலில் 1967-இல் பம்பாய் தெற்குத் தொகுதியிலிருந்து மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1971-இல் அதே தொகுதியில் தோல்வி அடைந்தார். 1974-இல் ரெயில்வே ஊழியர்களின் வேலை நிறுத்தத்துக்கு பெர்னாண்டஸ் தலைமை வகித்தார்.

1977-இல் முஜாஃபர்பூர் தொகுதியிலிருந்து 3 லட்சத்துக்கும் அதிகமான வாக்குகள் வித்தியாசத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தத் தேர்தலின்போது, இவர் தமது தொகுதியில் பிரச்சாரமே செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலிலும், இதே தொகுதியிலிருந்து தான் பெர்னாண்டஸ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.




வாழ்க்கையில், தைரியமாக இருப்பதை விட மகிழ்ச்சி அளிக்கக் கூடிய விஷயம் வேறு என்ன இருக்க முடியும்?

*மூதறிஞர் ராஜாஜி*

### திரு. அஜீத் சிங்

முன்னாள் பிரதமர் சௌத்ரி சரண்சிங்கின் புதல்வரான அஜீத் சிங் 1984-ஆம் ஆண்டுதான் அரசியலில் பிரவேசித்தார். அமெரிக்காவில் கம்ப்யூட்டர் இயலில் பட்டம் பெற்று அஜீத் சிங் அங்கு பணியாற்றி வந்தார்.

1939-ஆம் ஆண்டு பிப்ரவரி 12-ஆம் தேதி பிறந்த அஜீத் சிங், 1986-ஆம் ஆண்டு சரண்சிங்குக்கு உடல்நலம் குன்றத் தொடங்கியதும் லோக்தளம் கட்சியின் பொதுச் செயலாளர் ஆனார். லோகதளத்தில் பிளவு ஏற்பட்டபோது ஒரு பிரிவுக்கு இவர் தாற்காலிகத் தலைவர் ஆனார். இன்னொரு பிரிவில் தேவிலாலும், எச்.என். பகுகுணாவும் இருந்தனர்.

சரண்சிங்கின் மறைவுக்குப் பிறகு திரு. அஜீத் சிங் ஜனதா கட்சியில் இணைந்து ஐக்கியக் கட்சி அமைப்பின் செயல் தலைவர் ஆனார். பிறகு தேவிலால் தலைமையிலான லோக்தளம் கட்சியும், வி.பி. சிங்கின் ஜனமோர்ச்சாவும் இணைந்து ஜனதா தளம் ஆனது.

### திரு. ஷரத் யாதவ்

திரு. ஷரத் யாதவ் மத்தியப்பிரதேசத்தில் சக்தி வாய்ந்த மாணவர் தலைவராக இருந்தார். இந்தத் தேர்தலில்உத்தரப்பிரதேச மாநிலம் படாவுன் தொகுதியில் ஜனதா தளம் வேட்பாளராக நின்று வென்றார். தனது 29-வது வயதில் ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்களின் இயக்கத்தில் சேர்ந்தார். கணிதத்தில் முதுகலைப் பட்டம் பெற்றவர். என்ஜினீயரிங் பட்டப் படிப்பில் தங்கமெடல் பெற்றவர்.

### திரு. முப்தி முகமது சையுது

திரு. முப்தி முகமது சையது ஜம்மு-காஷ்மீர் மாநிலம் அனந்தநாக் மாவட்டத்தில் 1936-ஆம் ஆண்டு ஜனவரி 12-ஆம் தேதி பிறந்தார். 1957-இல் அரசியலில் நுழைந்தார். இவர் காஷ்மீர் அரசியலில் முக்கிய இடம் பெற்றவர்.

1986-இல் ராஜீவ், பாரூக் அப்துல்லா இடையே உடன்பாடு ஏற்பட்டபின்னர், மத்திய அரசின் சுற்றுலாத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டார். ஆனால் உடன்பாட்டைத் தொடாந்து எதிர்த்த இவர், 1987-இல் தமது பதவியை ராஜினாமா செய்தார்.

பின்னர் வி.பி. சிங்குடன் நெருக்கமான தொடர்பு கொண்டிருந்தார். கட்சி தாவல் தடைச் சட்டத்தின்கீழ் மாநிலங்களவை உறுப்பினர் பதவியை முதன்முதலாக இழந்தார்.

### திரு. அருண்குமார் நேரு.

திரு. அருண்குமார் நேரு ஜனதா தளம் மூத்த தலைவர்களில் ஒருவர். பிரதமர் வி பி. சிங்கின் நெருங்கிய நண்பர்.

அரசியலுக்கு வருவதற்கு முன்பு வர்த்தகராக இருந்தார். 1980-இல் இந்திரா காந்தியால் அரசியலில் நுழைக்கப்பட்டார். நேருவின் குடும்பத்தைச் சேர்ந்தவர். ஆரம்ப காலத்தில் ராஜீவுக்கு ஆலோசகராக விளங்கினார். 1980-84 தேர்தல்களில் உ.பி. யில் ரேபரேலி தொகுதியில் போட்டியிட்டு வென்றார்.

### திரு. ஆரீப் முகமதுகான்

உத்தரப் பிரதேச மாநிலத்தில் உள்ள பர்னாலா கிராமத்தில் 1951-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஆரிப் பிறந்தார். பள்ளிநாட்கள் முதலே அரசியலில் ஈடுபாடு கொண்டிருந்தார். 1977-இல் உ.பி.யிலிருந்து சட்டமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அமைச்சராக நியமிக்கப்பட்டார். லக்னோவில் முஸ்லீம் பிரிவினருக்கிடையே ஏற்பட்ட கலவரத்தில் அரசு நடவடிக்கை சரியில்லை என்று கூறி ராஜினாமா செய்தார்.

பின்னர் 1978-இல் இ.காங்கிரசில் சேர்ந்தார். ராஜீவ் காந்தி அமைச்சரவையில் இடம் பெற்று இருந்த ஆரிப் முகமது கான், முஸ்லீம் பெண்கள் மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து, கடந்த 1986-இல் அமைச்சர் பதவியிலிருந்து விலகினார்.

சர்ச்சைக்குரிய ஷாபானு வழக்கில், உச்சநீதிமன்றம் முதலில் வழங்கிய தீர்ப்பை, ஆரீப் முகமதுகான் ஆதரித்தார். இதனால் முஸ்லீம் பழமை வாதிகளின் கோபத்திற்கு ஆளானார். 1986-இல் காங்கிரசிலிருந்து விலகிய பின்னர், வி.பி. சிங் மற்றும் பலருடன் சேர்ந்து ஜனமோர்ச்சாவைத் துவக்கினார்.



டெல்லியில் பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்களை முதல்வர் கலைஞர் அவர்கள் சந்தித்து உரையாடினார் (12-12-89)

### திரு. ராம்விலாஸ் பஸ்வான்

திரு. ராம்விலாஸ் பஸ்வான், தேசிய முன்னணியின் பொதுச் செயலாளர் ஆவார். பஸ்வான், தனது பள்ளிப் பருவத்திலேயே அரசியலில் நுழைந்தார். ஆரம்பத்தில் சமாஜ்வாடி சோசலிச கட்சியிலும், பாரதீய லோக்தளம் கட்சியிலும் இருந்தார். 1969-இல் எம்.எல்.ஏ. ஆனார். பாராளுமன்றத்துக்கு 1977, 80-இல் நடந்த தேர்தலில் இதற்கு முன்பு தேர்ந்து எடுக்கப்பட்டவர்.

### திரு. நீலமணி ரவுத்ரே

ஒரிசா மாநிலத்தைச் சேர்ந்த திரு. நீலமணி ரவுத்ரே மாநிலத் துணை அமைச்சர் பதவியிலிருந்து, முதலமைச்சர் வரை பல்வேறு பதவிகளை வகித்த மூத்த தலைவர்; கல்கத்தா பல்கலைக் கழகத்தில் படித்தவர். மாணவர் தலைவராக விடுதலைப் போராட்டத்தில் குதித்தவர்.

1977-ஆம் ஆண்டுத் தேர்தலுக்குப் பிறகு ஜனதாக் கட்சிக் காலத்தில் முதலமைச்சர் ஆனார். பத்திரிகை நிர்வாகத்திலும் அனுபவம் பெற்றவர். ஒரிசாவின் முன்னேற்றத்துக்கு அடிகோலிய அரிகிருஷ்ணமேதாவுடன் நெருக்கமாக உழைத்தவர்.

1970-இல் பிஜு பட்நாயக்குடன் காங்கிரசிலிருந்து விலகினார்.

### திரு. ஐ.கே. குஜ்ரால்

திரு. ஐ.கே. குஜ்ரால் என்று அழைக்கப்படும் இவரது முழுப்பெயர் இந்தர்குமார்குஜ்ரால். இவருக்கு வயது எழுபது. 1919-ஆம் ஆண்டு டிசம்பர் நாலாம் தேதி, ஜீலம் என்ற ஊரில் பிறந்த குஜ்ரால் ஜீலத்திலும், லாகூரிலும் கல்வி பயின்றார். பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு ஜலந்தரில் இவர்களின் குடும்பம் குடியேறியது.

1976-ஆம் ஆண்டு முதல் 1980 வரை இவர் ரஷ்யாவில், இந்தியத் தூதராகப் பணி புரிந்தார். 1964 முதல் 1976 வரை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார்.

1967-ஆம் ஆண்டு இந்திரா காந்தி அமைச்சரவையில் இடம் பெற்றார். செய்தி, ஒலிபரப்பு, வீடமைப்பு, திட்டமிடல், தகவல் தொடர்பு, நாடாளுமன்ற விவகாரம் ஆகிய துறைகளில் அமைச்சராகப் பணிபுரிந்துள்ளார். இவரது மனைவியார் ஷீலாவும் பிரபல எழுத்தாளரும், கவிஞரும் ஆவார்.

### திரு. குருபாதசாமி

திரு. எம்.எஸ். குருபாதசாமிக்கு 67 வயதாகிறது. கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்தவர். 1960-இல் இந்திரா காந்தி மந்திரி சபையில்

விவசாயத் துறைத் துணை அமைச்சராக இருந்தார். 1980-இல் மாநிலங்களவை ஜனதா கட்சித் தலைவர் ஆனார்.

### திரு. நாதுராம் மிர்தா

மத்திய உணவு விநியோகத் துறை அமைச்சர் திரு. நாதுராம் மிர்தா ராஜஸ்தான் மாநிலம் நகாவுர் பாராளுமன்றத் தொகுதியிலிருந்து ஜனதா தளம் சார்பில் தேர்ந்து எடுக்கப்பட்டார். இவருக்கு வயது 68. இவர் ராஜஸ்தான் மாநில அமைச்சராகவும், மத்திய இணை அமைச்சராகவும் பதவியில் இருந்திருக்கிறார்.

### திரு. உபேந்திரா

திரு. உபேந்திரா 1936-ஆம் ஆண்டு ஜூலை 14-ஆம் தேதி பிறந்தார். ஆந்திரப் பல்கலைக் கழகம், சென்னைப் பல்கலைக் கழகம், வால்ட்டேர் பல்கலைக் கழகம் ஆகியவற்றில் கல்வி பயின்றார். மேற்கு வங்கத்தில் பல ஆண்டுக் காலம் நுகர்வோர் கூட்டுறவு இயக்கத்தில் பங்கு கொண்டிருந்தார். ரயில்வேயில் பணிபுரிந்து வந்த இவர் திரு.ராமாராவ் தெலுங்குதேசம் கட்சி ஆரம்பித்தபோது, அக்கட்சியில் சேர்ந்தார். ஆந்திரத்தில் தெலுங்குதேசம் கட்சி ஆட்சிக்கு வந்தபின்னர், மாநிலங்களவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சுதந்திரப் போராட்ட வீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர் உபேந்திரா. தனி ஆந்திர மாநிலம் கோரி, 1952 இல் பீமாவரத்தில் நடந்த சத்தியாகிரகப் போராட்டத்தில் கலந்து கொண்டு கைதானார். இவர் சிறந்த பேச்சாளர்.

### திரு. உன்னிகிருஷ்ணன்

திரு. உன்னிகிருஷ்ணன் எஸ். காங்கிரஸ் தலைவர். அரசியலுக்குப் புதியவரல்ல. கேரளாவில் உள்ள படகரா மக்களவைத் தொகுதியில் இருந்து ஐந்தாவது முறையாக மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளார்.

முன்பு இ.காங்கிரசில் இருந்தார். காங்கிரஸ் சோஷலிசப் பேரவையின் அமைப்பாளராக இருந்தார். 1978-இல் நெருக்கடி நிலை மீறல்கள் உள்பட பல பிரச்சினைகள் காரணமாக, அக்கட்சியிலிருந்து விலகினார். பின்னர், காங்கிரஸ் எஸ். கட்சியின் பொதுச்செயலாளராக நியமிக்கப்பட்டார்.

## 1989 தமிழ்நாடு சட்டமன்ற இடைத்தேர்தல்

### பெரணமல்லூர் தொகுதி

மொத்த வாக்காளர் : 1,59,973
பதிவான வாக்குகள் : 1,17,679
செல்லாதவை : 4,818

| எம். சின்னக்குழந்தை | அ.இ.அ.தி.மு.க வெற்றி | |
|---|---|---|
| 1. எம். சின்னக்குழந்தை | அ.இ.அ.தி.மு.க. | 49,405 |
| 2. திருமதி எ. எட்டியம்மாள் | தி.மு.க. | 40,350 |
| 3. எ. ராஜேந்திரன் | பா.ம.க. | 22,102 |
| 4. டி. ராமலிங்கம் | சுயே. | 530 |
| 5. திருமதி கே. புனிதவதி | சுயே. | 259 |
| 6. கே. ராஜேந்திரன் | சுயே. | 215 |

### திரு. தினேஷ் கோஸ்வாமி

திரு. தினேஷ் கோஸ்வாமி அசாம் கனபரிஷத் பிரதிநிதி. இவருக்கு 44 வயது ஆகிறது. சிறந்த வழக்கறிஞர். ஆரம்பத்தில் காங்கிரசில் இருந்தார். 1973 முதல் 1978 வரை மக்களவை உறுப்பினராக இருந்தார். 1978 முதல் 1983 வரை மாநிலங்களவை உறுப்பினராக இருந்தார்.

1983-இல் இவர் காங்கிரசில் இருந்து வெளியேறி அசாம் கனபரிஷத் இயக்கத்தில் சேர்ந்தார். அசாமில் மக்களவைத் தேர்தல் நடக்காததால் இவர் போட்டியிடவில்லை.

### திரு. முரசொலி மாறன்

திரு.முரசொலி மாறன் அவர்களின் இயற்பெயர் தியாகராஜ சுந்தரம். இவரது பிறந்த தேதி: 17-6-1932. இவர் பிறந்த இடம் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த திருக்குவளை. இவரது தந்தையார் பெயர் திரு. சண்முக சுந்தரம்; தாயார் பெயர் திருமதி சண்முக சுந்தரி (கலைஞரின் சகோதரி).

சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பயின்று எம்.ஏ. (பொருளாதாரம்) பட்டம் பெற்றார். மாணவப் பருவத்திலிருந்தே இவர் அரசியலில் தீவிர ஈடுபாடு கொண்டார். இவர் கல்லூரிப் படிப்பைத் துவக்கியதும் கலைஞர் அவர்கள் ஆசிரியராக இருந்து நடத்திய முரசொலியில் பெரும் பங்கு வகித்தார். பின்னர் முரசொலியின் ஆசிரியராகவும் ஆனார். மற்றும் குங்குமம், முத்தாரம், வண்ணத்திரை, குங்குமச் சிமிழ், சுமங்கலி ஆகிய இதழ்களின் பதிப்பாளர் ஆனார்.

இவர் எழுதிய நூல்கள்:

ஏன் வேண்டும் இன்பத் திராவிடம்?, மாநில சுயாட்சி, ஊஞ்சல் மனம் (சமூக சீர்திருத்தக் கருத்துக்கள் நிறைந்த நாடகம்), திராவிடர் இயக்க வரலாறு (அச்சில்), சிறுகதைத் தொகுப்புகள் பல.

32 திரைப்படங்களுக்கு மேல் வசனம் எழுதியுள்ளார். பத்து படங்களுக்கு மேல் டைரக்ஷன் செய்து உள்ளார்.

இவர் தமிழ்நாடு அரசு வழங்கிய கலைமாமணி விருது பெற்றவர்.

1967-இல் தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதியில் வெற்றி பெற்ற அறிஞர் அண்ணா அவர்கள் தமிழக முதல்வரானார். அப்போது தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதிக்கு அறிஞர் அண்ணாவால் இவர் வேட்பாளராகத் தேர்வு செய்யப்பட்டார். தென் சென்னையில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். 1967 முதல், நாடாளுமன்ற உறுப்பினராகவும், பின்னர் மாநிலங்கள் அவை உறுப்பினராகவும், தி.மு.



கழக நாடாளுமன்றக் குழுவின் தலைவராகவும் இருந்து வருகிறார்.

1965-இல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் இவரது பங்கு குறிப்பிடத்தக்கது.

எமர்ஜென்சிக் காலத்தில் இந்திரா காந்தி அரசால், கைது செய்யப்பட்டு, மிசா கைதியாக ஓராண்டு கடும் சிறைத் தண்டனையை அனுபவித்தார்.

**திரு. முரசொலிமாறன் அவர்கள் பொறுப்பிலுள்ள துறைகளின் விவரம் வருமாறு:**

மத்திய பொதுப் பணித்துறை, அச்சகத் துறை இயக்குநரகம், அரசினர் குடியிருப்புகள், மத்திய அரசுக் கட்டடங்கள் கட்டுதல், ஒதுக்கீடு செய்தல், தேசிய கட்டுமானப் பணி நிறுவனம், நில மேம்பாட்டுத் துறை, நகர் மற்றும் கிராமப்புறத் திட்ட அலுவல்கள், எழுதுபொருள் மற்றும் அரசு வெளியீடுகள், வீடு மற்றும் கிராமப்புற மேம்பாட்டுக் கழகம், டில்லி பெருநகர வளர்ச்சி ஆணையம், தேசிய நகர்ப்புற வளர்ச்சி நிறுவனம், வீட்டு வசதி மற்றும் குடியிருப்பு.

### திரு. மனுபாய் பட்டேல் கொதாடியா

54 வயதான திரு. மனுபாய் கொதாடியா குஜராத் மாநிலத்தைச் சேர்ந்தவர். அம்ரேலி தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர், நாடாளுமன்றத்துக்குப் புதியவர். சிறிது காலம் மாநிலத் துணை அமைச்சராக இருந்தவர்.

விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த இவர் கூட்டுறவு இயக்கத்தில் தீவிர ஈடுபாடு கொண்டவர்.

### திருமதி மேனகா காந்தி

மறைந்த சஞ்சய் காந்தியின் மனைவி திருமதி மேனகா காந்தி, உத்தரப் பிரதேச மாநிலம் பிலிபித் தொகுதியிலிருந்து மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இந்த ஆண்டு துவக்கத்தில் ஜனதா தளக் கட்சியின் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

கடந்த 1984-இல் நடந்த மக்களவைத் தேர்தலின்போது, அமேதி தொகுதியில் ராஜீவ் காந்திக்கு எதிராகப் போட்டியிட்டுத் தோற்றவர் மேனகா காந்தி.

## தமிழக அமைச்சரவையில் சில அமைச்சர்களின் துறைகள் மாற்றம்

தமிழக அமைச்சரவையில் சில அமைச்சர்களின் துறைகள் மாறுதல் செய்யப்பட்டுள்ளன. அதற்கான ஆணை தமிழக அரசால் 9.12.89 அன்று பிறப்பிக்கப்பட்டது.

மாறுதல் செய்யப்பட்ட துறைகள் விவரம் வருமாறு:-

திரு. கோ.சி. மணி: **உள்ளாட்சித் துறை அமைச்சர்** (நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, பஞ்சாயத்து, பஞ்சாயத்து ஒன்றியம்)

திரு. **ஆற்காடு வீராசாமி: மின்துறை அமைச்சர்** (மின்சாரம், பால்வளம், குடிசை மாற்றுவாரியம்)

திரு. பொன். முத்துராமலிங்கம்: **உணவு மற்றும் கூட்டுறவு அமைச்சர்** (உணவு, விலைக் கட்டுப்பாடு, சிவில் சப்ளை. கூட்டுறவு மற்றும் புள்ளி விவரம்)

திரு. வீரபாண்டி ஆறுமுகம்: **வேளாண்மைத் துறை அமைச்சர்** (விவசாயம், விவசாய நிதி, விவசாயப் பொறியியல், உணவு உற்பத்தி)

திரு. டாக்டர் பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: **மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** (பொது சுகாதாரம், மருத்துவம், குடிநீர், சுற்றுப்புறச் சூழல்)

திரு. கே.என். நேரு: **செய்தி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர்** (செய்தி, விளம்பரம், திரைப்படம், தொழிலாளர், வேலை வாய்ப்பு, பயிற்சி, காகிதக் கட்டுப்பாடு, அரசு அச்சகம், எழுது பொருள் மற்றும் அச்சுத்துறை)

திரு. எஸ். தங்கவேலு: **கைத்தறி, நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்** (கைத்தறி, ஜவுளி, நகர அமைப்பு, நகர்ப்புற வளர்ச்சி)

சென்ற இதழ்த் தொடர்ச்சி...

# தடய அறிவியல்

**பேராசிரியர் டாக்டர் ப. சந்திரசேகரன்**

**பெற்றோர் யாரென ஆய்ந்தறியும் மையம்:** (Disputed parentage test centre)


வழக்கு தொடர்பான ஆய்வு அறிக்கைகள் அல்லாது இத்துறை பல சமுதாயப் பணிகளும் செய்து வருகின்றது. பெற்றோர் யார் என்று அறியும் சோதனை மையம் இத்துறையில் கடந்த 5 ஆண்டுகளாகச் செவ்வனே செயல் புரிந்து வருகின்றது. குழந்தை தனக்குப் பிறந்ததா என்று சந்தேகப்படும் கணவனின் தீராக் கொடுமையிலிருந்து விடுபட விரும்பும் பெண், காணாமல் போன குழந்தையின் உண்மைப் பெற்றோரை அறிய நடக்கும் வழக்குகள், ஒருவரை நம்பி சிலகாலம் வாழ்ந்து கைவிடப்பட்ட பெண் தன் குழந்தைகளின் தகப்பன் 'இவர்தான்' என அடையாளங் காண, இப்படிப் பல தரப்பட்ட நிலையில் இருப்பவர்களுக்கும் அவர்தம் துயர் நீக்கிடத் துணை நின்று சமுதாயப் பணி செய்து வருகின்றது. இப்படிப்பட்ட மையம் இந்தியாவிலேயே இத்துறை ஒன்றின் கீழ்தான் செயல்பட்டு வருகிறது.

**நச்சுத்தன்மை ஆராய்ச்சி மையம்:** (Clinical toxicology centre)

நஞ்சு அருந்தி அல்லது நஞ்சு கலந்த உணவருந்தி அல்லது தேவைக்கதிகமாகப் போதை மாத்திரைகளை உண்டதன் விளைவாக மருந்தகத்தில் உயிருக்குப் போராடும் ஒருவரின் இரத்தத்தை மருத்துவர் எடுத்து அனுப்புவதை ஆய்வு செய்து, நஞ்சின் இனம், அளவு ஆகியவற்றைத் தெரிவு செய்து, அதன் அடிப்படையில் மருத்துவம் செய்வதற்கு ஏதுவாக பொதுச்சேவை புரிந்து வரும் இம் மையம் நச்சியல் பிரிவின்கீழ் செயல்பட்டு வருகிறது.

**கல்விப் பணி**

இத்தடய அறிவியல் துறை மற்றைய அரசுத் துறைகளினின்றும் பெரிதும் மாறுபட்டுத்தனித்து விளங்கும் துறை. இவ்வரசுத்துறை சென்னைப் பல்கலைக் கழகம் மற்றும் பல்கலைக்கழக மானியக் குழுவால் தடய அறிவியலில் மூதறிவியல் கல்வி (M.Sc., Forensic Science Course) வழங்கும் கல்விக் கழகமாகவும் செயல்பட்டு வருகிறது. இதற்கு 1975-இல் வித்திட்ட பெருமை முதல்வர் கலைஞர் அவர்களையே சாரும். தற்போது இத்துறை சென்னைப் பல்கலைக்கழகம் மற்றும் அண்ணா பல்கலைக் கழகம் ஆகிய வற்றால், தடய அறிவியலில் பண்டாரகர் (Ph.D., Programme) பட்டத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட ஆய்வுக் கழகமாகவும் விளங்குகின்றது. இது தவிர இத்துறை தரமணியில் உள்ள டாக்டர் இலட்சுமணசாமி முதலியார் முதுகலை அடிப்படை மருத்துவ அறிவியல் கழகத்தால் நடத்தப்படும் 'முதுகலை சுற்றுப்புறச் சூழல் நஞ்சியல்'' மாணவர்களுக்கும், சென்னைப் பல்கலைக் கழகத்தால் நடத்தப்படும் 'குற்றவியல் முதுகலை' மாணாக்கர்



பாத்தூர் கோயிலில் இருந்து களவு போன நடராஜர் சிலை, பிற சிலைகளுடன்...




கொடிநாள் விழாவினையொட்டி மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் கொடிநாள் நிதியினைத் தலைமைச் செயலகத்தில் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் வழங்கினார். (7-12-89)



கொடிநாள் விழாவினையொட்டி மேதகு தமிழக ஆளுநர் அவர்கள், கொடிநாள் நிதியினை ராஜ்பவனில் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் வழங்கினார். (7-12-89)



கொடிநாள் விழாவினையொட்டி மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் திரு. அன்பழகன் அவர்கள், கொடிநாள் நிதியினை வழங்கினார். (7-12-89)



## கொடி நாள் 7.12.1989

# பேரறிஞர் அண்ணா கருத்துமணிகள் வரிசையில் தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள முதல் நூல்
# 'அண்ணா போற்றிய பெருமக்கள்'

திருவள்ளுவர் முதல் இன்றைய ஆன்றோர்கள், சான்றோர்கள், இந்திய விடுதலை இயக்கத் தலைவர்கள், திராவிட இயக்கத் தலைவர்கள், அனைத்துக் கட்சிகளையும் சார்ந்த அரசியல் தலைவர்கள், கலைஞர்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் பணியாற்றிச் சிறந்த தமிழ்நாட்டுப் பெருமக்கள் ஆகியோர் பற்றி மறைந்த தமிழக முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பாராட்டுரைகள் அடங்கிய ஓர் இலக்கியக் கருவூலம் *'அண்ணா போற்றிய பெருமக்கள்' (முதல் தொகுதி)* என்னும் நூல். இது வரலாற்று ஆய்வுக்கு மிகவும் பயன்படக்கூடிய அரிய இலக்கியப் பேழை.




**பக்கங்கள் : 456**

**விலை : ரூ.46/-**

***நூல் கிடைக்குமிடங்கள்:***

1) 'தமிழரசு' அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-600 002.

2) வள்ளுவர் கோட்டம்,
சென்னை-600 034.

3) அண்ணா சதுக்கம்,
சென்னை-600 005.

**குறிப்பு:** *பத்துப் படிகளும் அவற்றுக்கு மேலும் வாங்குவோருக்கு நூற்றுக்கு 15 விழுக்காடு கழிவுத்தொகை உண்டு.*

இயக்குநர்,
செய்தி-மக்கள் தொடர்புத் துறை,
தமிழ்நாடு அரசு.





***மூர் அங்காடி தீ விபத்திற்கான காரணத்தைத் தடய அறிவியல் இயக்குநர் மற்றும் அறிவியல் ஆய்வாளர்கள் ஆய்வு செய்ததை விளக்கும் படம்.***

களுக்கும் வகுப்புகள் நடத்துகின்றது. 20க்கும் மேற்பட்ட முழுநேர மற்றும் பகுதிநேர ஆராய்ச்சி மாணவர்கள் தடய அறிவியலில் ஆராய்ச்சி செய்து வருகின்றார்கள்.

இதுதவிர தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களிலும் 'ஒட்டந்தழை' 'ஓடுவான்' என, பலவிதமாக அழைக்கப்படும் – தற்கொலைக் குப் பயன்படுத்தப்படும் – ஒருவகை நச்சுச்செடி குறித்த ஆய்வும், உமிழ்நீரை ஆய்வு செய்து இரத்த வகை செய்தல் போல், உமிழ்நீரி லுள்ள சர்க்கரை சேர்ந்த புரத வகைப்படுத்தும் ஆய்வு, மக்கள் தொகையில் வெள்ளை அணுக் களின் இரத்தவகை பரவிக் கிடக்கும் அளவு. (Distribution of HLA antigens) ஆகியவற்றைப் பற்றிய ஆய்வுகள் நடத்தப்பட்டு இத்தடய அறிவியல் துறையின் ஆராய்ச்சி மாணவர்கள் பண்டாரகர் பட்டம் பெற்றுள்ள னர்.

***பயிற்சி நிலையம்***

வழக்குகள் பொருள்கள் ஆய்வு மற்றும் பிற தொண்டுகளுடன் இத் துறை நீதித்துறை அலுவலர், காவல் துறை அலுவலர், வங்கிகள் மற்றும் சுங்கத்துறை அலுவலர்கள் ஆகியோ ருக்கு வருடந்தோறும் 'பணியிடைப் பயிற்சி' நடத்துகின்றது. இத்தகைய பயிற்சி அந்தந்தத் துறைகளில் அவர் களின் அன்றாடப் பணிகளில் பெருந்துணையாக விளங்குகின்றது.

***குறிப்பிடத்தக்க சில வழக்குப் பணிகள்:***

சென்னையிலுள்ள ஆயுள் காப்புக் கழகக் கட்டடம் 1975-இல் தீ விபத்துக்குள்ளானபோது அதற் குரிய காரணங்களை அறிவியல் பூர்வ மாகக் கண்டறிய உதவியது இவ் வாய்வகமே. விபத்து நடந்த இடத்தைத் தமிழக முதல்வர் பார்வையிட்டு விவரங்களைக் கேட்டறிந்தது குறிப் பிடத்தக்கது.

தஞ்சை மாவட்டத்தில் திருவாரூர் வட்டத்தில் உள்ள பாத்தூர் எனும் கிராமத்தில் கவனிப்பாரற்று இருந்த சிவன் கோயிலில் உள்ள சிலை களைக் கடத்தும் நோக்கத்துடன், சிலைத் திருட்டுக் கும்பல் அங்கிருந்த நடராசர் மற்றும் பல சிலைகளைக் கோவிலுக்கு அருகில் மண்ணில் புதைத்து வைத்து, பின்னர் நடராசர் சிலையை மட்டும் கடத்தி விற்று விட்டது. அச்சிலை பலபேர் கைமாறி ஒருவழியாக இலண்டன் மாநகரத் தில் உள்ள அருங்காட்சியகத்திற்கு அதைச் சீர் செய்வான் வேண்டி கடைசியாக விலைக்கு வாங்கி யவர்கள் அனுப்பி வைத்தனர்.

தமிழ்நாட்டில் களவு போன சிலை போல அது இருப்பதைக் கண்ட இலண்டன் காவல்துறையினர் தமிழகக் காவல்துறையினரைத் தொடர்பு கொண்டனர். இலண்டன் போலீ சாரால் அனுப்பப்பட்ட நடராசர் சிலையின் புகைப்படத்தை அதன் உண்மை அளவுக்குப் பெரிதாக்கி ஒரு கட்அவுட் மாதிரி தயாரித்து மற்ற சிலைகளுடன் சிற்ப நூல் கணிதப்படி, ஒப்பிட்டு அச்சிலை பாத்தூரில் களவு போன சிலையாக இருக்கலாமென இத்துறையின் இயக்குநர் ஒரு ஆய்வறிக்கை அளித்தார். அதை மேற்கோள்காட்டி தமிழக அரசும், இந்திய அரசும் இலண்டன் மாநகரப் பெருநகர நீதிமன்றத்தில் சிலையைத் திரும்பப் பெற வழக்கு தொடுத்தன.

இது தொடர்பாக இலண்டன் அருங் காட்சியகத்தில் சிலையின் பீடத்தில் ஒட்டியிருந்த கரையான் புற்று மண், பாத்தூர் கிராமத்தில் புதைக்கப் பட்ட இடத்தில் இருந்து அனுப்பப்



ஆயுள் காப்புக் கழகக் கட்டடத்தில் 1975-ஆம் ஆண்டு ஏற்பட்ட தீ விபத்திற்கான காரணத்தை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கு, இத் துறையின் தலைவர் விளக்கும் காட்சி.

பட்ட கரையான் புற்றுடன் கூடிய மண் மற்றும் பல சிலைகள் இவ் வாய்வகத்திற்கு ஆய்வுக்கு அனுப்பப் பட்டன. கரையான் புற்று மண்ணும், புதைக்கப்பட்ட இடத்திலிருந்து எடுத்த னுப்பப்பட்ட மண்ணும் மண்ணாய் வில் ஒன்றாய் இருந்ததையும், இவ் விரண்டு மண்ணிலும் இறந்துபட்டுக் கிடந்த கரையான், இந்திய நாட்டுக் குரிய கரையான் இன வகையை ஒத்திருந்ததையும் ஆய்ந்தும், சிலை யினை உலோக ஆய்வு செய்தும், இவ்வழக்கில் ஆய்வு அறிக்கை அளிக்கப்பட்டது.

இலண்டன் பெருநகர வழக் காடு மன்றத்தில் இத்தடய அறி வியல் துறையின் இயக்குநர் ஆய்வு அறிக்கை தொடர்பாக நேரடிச் சாட்சியமாக விசாரிக்கப்பட்டார். இறுதியில் இத்துறையின் ஆய்வு அறிக்கையின்படி லண்டன் நடராசர் சிலை தமிழ்நாட்டில் பாத்தூரில் இருந்து கடத்தப்பட்ட சிலை தான் என்று நீதிமன்றம் அச்சிலையை மீண்டும் தமிழ்நாட்டிற்குக் கிடைக்க வழிவகை செய்தது.

தஞ்சையில் பிரதமர் வருகையின் போது, தீவிரவாதிகளால் குடமுருட் டிப் பாலத்தில் வைக்கப்பட்டு வெடித்த வெடிகுண்டு வழக்கில் இத்தடய அறிவியல் ஆய்வு அறிக்கை குற்றவாளிகளைத் தெளிவாக அடை யாளங் காட்டியது.

திருச்சிக்கருகே அரியலூர் அருகில் உள்ள பாலத்தில் தீவிரவாதிகளால் வைக்கப்பட்ட வெடிகுண்டால் மலைக்கோட்டை ரயிலுக்கு ஏற்பட்ட விபத்து எல்லோர் மனதையும் வாட்டிய நிகழ்ச்சி. இவ்வழக்கில் நிகழ்ச்சியிடத்தில் தடயம் தெரிவு செய்து பின்னர் ஆய்வகத்தில் ஆய்வு செய்து குற்றவாளிகளைக் கண்டு பிடிக்க உதவி செய்தது.

நடுக்கடலில் தீப்பிடித்து எரிந்த வ.உ.சி. பயணியர் கப்பல் தீ விபத்து வழக்கு, சென்னையின் 'மூர் மார்க்கெட்' தீ விபத்து வழக்கு, சென்னையில் மணலியில் அமைந் திருக்கும் கோத்தாரியின் குளோரின் வாய்வு தயாரிக்கும் இடத்தில் ஏற் பட்ட குளோரின் எனும் நச்சு வாய்வுக் கசிவு ஆகிய வழக்குகளில் இவ்வாய்வகம் சீரிய ஆய்வு முடிவு களை அளித்துள்ளது.

அண்மையில் தமிழக மக்கள் மட்டுமன்றி, இந்திய அளவில் பெரி தும் பரபரப்பு ஏற்படுத்திய வழக்கு, தமிழகத்தின் உயர் நீதிமன்றத்திற்கு ஒரு குழந்தைக்காக இரு பெற்றோர் சொந்தம் கொண்டாடிய வழக்கு. உயர் நீதிமன்றத்தின் ஆணைக்கேற்ப இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட குழந்தை மற்றும் இரு பெற்றோர்களின் குருதி மற்றும் உமிழ்நீர் ஆகியவற்றை ஆய்வு செய்து குழந்தையைப் பெற் றெடுத்த பெற்றோர் இவரே என அறுதியிட்டுக்கூறி பரபரப்பான இவ் வழக்கிற்கு முத்தாய்ப்பு வைத்த பெருமை இத்துறையைச் சாரும்.

இவ்வாறு இத்தடய அறிவியல் துறை தேர்ந்த அறிவியல் வல்லுநர் களைக் கொண்டு சிக்கலான வழக்கு களை ஆய்ந்து நீதி கிடைக்கவும், சமுதாய வளர்ச்சிக்குத் தொண்டு புரிந்து இந்தியாவிலேயே சிறந்த தடய அறிவியல் மையமாகத் திகழ்ந்து வருகிறது.



# சொந்தக்காலில் நிற்போம்!

''**வா**டகை ரிக்ஷா ஓட்டிப் பிழைத்த நாங்கள், இப்போது தமிழக முதல்வர் அவர்கள் அளித் துள்ள ஆட்டோ மற்றும் ரிக்ஷா ஓட்டுநர்களுக்கு ஆட்டோ, ரிக்ஷா சொந்தமாக்கும் திட்டத்தின் கீழ், சொந்தத்தில் புதிய ஆட்டோ, ரிக்ஷா வாங்கி ஓட்டிச் சொந்தக் காலில் நிற்கிறோம். இதன் மூலம், எங்கள் குடும்பம் கடனின்றி வாழ வழி செய்த தமிழக முதல்வர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறோம்'' என்று பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் ஆட்டோ மற்றும் ரிக்ஷா ஓட்டு நர்கள் தெரிவித்தனர்.

தமிழக அரசின் புதிய சமுதாய மறுமலர்ச்சித் திட்டங்களில் ஒன் றானதும், வறுமை ஒழிப்புத் திட்டங் களில் ஒன்றானதுமான ஆட்டோ ஓட்டுநர்கள், ரிக்ஷா ஓட்டுநர்களுக்கு ஆட்டோ, ரிக்ஷா சொந்தமாக்கி, அவர்களது வறுமையினை விரட்டி வாழ்க்கையினை வளமாக்கிடும் வகையில் மானியத்துடன் கூடிய கடனில் புதிய ஆட்டோ, ரிக்ஷா வழங்கும் திட்டம் பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் மிகச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வரு கிறது. இம்மாவட்டத்தில் இத்திட் டத்தினைச் செயல்படுத்திட ரூ.13.29 இலட்சம் கடன் தொகையும், ரூ. 3.11 இலட்சம் மானியத் தொகையினை யும் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் கடந்த 30-9-89 முடிய ரூ. 4.85 இலட்சம் கடனில் 15 ஆட்டோக்களும், ரூ.6.28 இலட்சம் கடனில் 119 புதிய மோட்டார் பொருத்திய ரிக்ஷாக்களும் வழங்கப்பட்டுள்ளன

பயன் அடைந்தோர் பகர்வன



இதற்கென அரசு வழங்கியுள்ள மானியம் ரூ. 2.23 இலட்சம் ஆகும். 100 புதிய மோட்டார் பொருத்திய ரிக்ஷா வழங்கிட அரசு இலக்கு நிர்ணயித்திருந்ததில் இலக்கைத் தாண்டி மொத்தம் 119 ரிக்ஷாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம் காரைக்குடி நகரில் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற்று உள்ள சிலரைச் சந்தித்து, இத்திட்டத்தினால் ஏற்பட்டுள்ள நன்மைகள் பற்றிக் கேட்டபோது- காரைக்குடி நகர் ரிக்ஷா ஓட்டுநர்கள் சங்கத் தலைவர் திரு. வி. போஸ் கூறியதாவது:

''இள வயது முதல் ரிக்ஷா ஓட்டும் தொழில் செய்து பிழைத்து வருகிறேன். வாடகைக்கு ரிக்ஷா ஓட்டிப் பிழைத்து வந்த நாங்கள் தற்போது சொந்தத்தில் ரிக்ஷா பெற்று தொழில் செய்து பிழைத்து வருகிறோம். இதனால் எங்கள் குடும்பம் கடனின்றி வாழ வழி செய்துள்ள தமிழக முதல்வர் அவர்களை நாங்கள் மனமாரப் பாராட்டுகிறோம்''.

''தற்போது நாளொன்றுக்கு ரூ. 30 முதல் 50 வரை சம்பாதித்து வருகின்றோம். மழைக் காலங்களில் ரூ. 25 தான் சம்பாதிப்போம். நாளொன்றுக்குக் கடன் பாக்கிக்காக ரூ.3 கட்டினால் போதும் என்று அரசு தெரிவித்துள்ளது. வாடகை ரிக்ஷா ஓட்டியபோது ஒரு வேளைகூட வயிறார உண்ணாமல் வாழ்ந்த நாங்கள்- ரிக்ஷாவைக் காலால் மிதித்துக் கஷ்டப்பட்ட நாங்கள், இப்போது கஷ்டமின்றி மோட்டார் பொருத்திய ரிக்ஷாவை ஓட்டுகின்றோம். எங்கள் வாழ்க்கையில் இப்போதுதான் மறு மலர்ச்சியைக் காணுகிறோம்''.

காரைக்குடி நகராட்சி மீனாட்சிபுரத்தைச் சேர்ந்த ஆட்டோ ஓட்டுநர் திரு. எம். கருப்பசாமி:

''முன்பு சைக்கிள் ரிக்ஷா ஓட்டிவந்தேன். 2 வருடங்களாக மாதச் சம்பளத்திற்கு ஆட்டோ டிரைவராகப் பணிபுரிந்து வந்தேன். தற்போது தமிழக முதல்வர் அவர்களின் இந்தப்புதிய திட்டத்தினால் சொந்தத்தில் ஆட்டோ வாங்கி உள்ளேன். நாளொன்றுக்கு அதிகப்பட்சமாக நூறு ரூபாய் சம்பாதித்து வருகிறேன். இதற்கு முன்பு நாங்கள் பயன்பெறவில்லை. இந்த அரசு தான் கடன் கொடுத்து எங்களுக்குச் சொந்தமாக ஆட்டோ வாங்க வசதி செய்து கொடுத்து உள்ளது. இதற்கென எங்களது பாராட்டுக்களையும், நன்றியினையும் தெரிவித்துக் கொள்கிறோம்.''




பழனி நகரில் உள்ள திரையரங்குகள் அனைத்திலும் பொதுமக்களின் வசதிக்கேற்ப நவீனமுறை இருக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. எல்லா திரை அரங்கங்களிலும் பொது மக்களின் விருப்பப்படி, தரமான திரைப்படங்கள் அவ்வப்போது திரையிடப்படுகின்றன. பொதுமக்கள் எங்களுக்கு ஆதரவு தந்து அருளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு

பழனி நகர் திரையரங்கம் உரிமையாளர்கள் சங்கம்,
பழனி.






# தாமிரபரணி நீர்ப்பாசன மேம்பாட்டுப் பணிகள்

தேசிய நீர் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் தாமிரபரணி ஆற்றில் கிடைக்கும் நீரை, சேதமில்லாமல் சிக்கனமாகப் பயன்படுத்தி வேளாண்மைத் தொழிலை மேம்படுத்த உலக வங்கியின் உதவியுடன் ரூ. 8.70 கோடி மதிப்பீட்டில் நீர் விநியோக அமைப்புத் திட்டத்திற்குத் தமிழ்நாடு அரசு அங்கீகரித்துள்ளது.

இதனால் தாமிரபரணி ஆற்றின் கீழ் உள்ள அணைக்கட்டுகள், வாய்க்கால்கள், மதகுகள், ஏரிகள் மேம்பாடுசெய்தலும் அம்மன்புரம் மற்றும் அதன் கீழ் உள்ள 11 குளங்களும், தென் கால்வாய்களிலிருந்து தனிக் கால் அமைத்து நேரடிப் பாசன நீர் பெறுதலும், சிவகளை, பெருங்குளம் மங்கலக் குறிச்சி, ஏரல், உமரிக்காடு, தென்திருப்பேரை, ராஜபதி, மனத்தி, பொறையூர் ஆகிய கிராமங்களில் வடிகால் வசதி செய்தலும் இந்த திட்டத்தில் உள்ள முக்கியமான பெருந்திட்டங்களாகும். இத்திட்டம், நடப்பு ஆண்டிலிருந்து தொடங்கி 5 ஆண்டுகள் செயல்முறையில் மேலே குறிப்பிட்டுள்ள திட்டங்களை நிறைவேற்ற வழிவகை செய்கிறது.

தாமிரபரணி பாசன அமைப்பிலுள்ள 8 அணைக்கட்டுகள் மற்றும் 11 பாசனக் கால்வாய்களை ரூ. 245.45 இலட்சம் செலவில் மேம்படுத்துவதற்கும், தாமிரபரணி ஆற்றுப் பாசன நீர் பெறும் 187 ஏரிகளை ரூ. 48.80 இலட்சம் செலவில் மேம்படுத்துவதற்காகவும், திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுச்செயல் படுத்தப்படவுள்ளன.

வடிகால் திட்டங்களுக்கு ரூ.105.75 இலட்சத்திற்குத் திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இவற்றில் ஆலங்கால், ஏரல், உமரிக்காடு, ஆறுமுகமங்கலம், கடம்பா ஏரிப் பாசன நிலங்களில் வடிகால் வசதி செய்தல் மற்றும் ஊப்பார் ஓடை ரெகுலேட்டரைச் சீர் செய்யும் பணிகள் அடங்கும்.

தாமிரபரணி ஆற்றிலுள்ள எட்டு அணைக்கட்டுகளில், திருவைகுண்டம் அணைக்கட்டு எட்டாவது அணைக் கட்டாகும். இந்த அணைக்கட்டில் வலது புறத்தில் இருந்து பிரியும் வாய்க்கால் தென்கால் வாய்க்கால் எனப்படும். இதன்மூலம் 15 ஏரிகள் பாசன வசதி பெறுகின்றன. இவற்

தொலைபேசி எண்: 4185

## திண்டுக்கல் நகர கூட்டுறவு வங்கி லிமிடெட், எண்.193

### திண்டுக்கல், காயிதே மில்லத் மாவட்டம்

| | | |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் | : | ரூ. 30,00,000/- |
| செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் | : | ரூ. 15,69,235/- |
| வைப்புகள் | : | ரூ. 2,54,94,459/- |

**கடன்கள்:**

| | | |
|---|---|---|
| நபர் ஜாமீன் பேரில் | : | ரூ. 2,36,642/- |
| ஈடு சொத்து அடமானத்தின் பேரில் | : | ரூ. 44,45,590/- |
| நகை ஈட்டின் பேரில் | : | ரூ. 1,79,51,803/- |
| டிபாசிட்களின் பேரில் | : | ரூ. 16,84,973/- |
| சிறு தொழில் மற்றும் இதரக் கடன்கள் | : | ரூ. 5,86,284/- |

**வங்கியின் சிறப்புகள்**

1. சிறு மற்றும் குடிசைத் தொழில்களுக்கு ரூ.25,000/- வரை கடன் வசதி அளிக்கப்படுகிறது.
2. நகை மற்றும் வீடு அடமானக் கடன்கள் ரூ.10,000/- வரை வழங்கப்படுகிறது.
3. தேசிய மயமாக்கப்பட்ட மற்ற வணிக வங்கிகளை விட, வைப்புகளுக்கு ஒரு சதவீதம் கூடுதல் வட்டி வழங்கப்படுகிறது.
4. தமிழகமெங்கும் இதர வங்கிகளைவிட குறைந்த செலவில் டிராப்ட் வழங்கப்படுகிறது.
5. வைப்புகளுக்கு இன்சூரன்ஸ் பாதுகாப்பு செய்யப்பட்டுள்ளது.
6. பாதுகாப்புப் பெட்டக வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.
7. தொடர்ந்து தணிக்கையில் முதல் வகுப்பு வங்கியாக இருந்து வருகிறது.
8. நாகல் நகர் கிளை 18.12.88 முதல் செயல்பட்டு வருகிறது.

ப. ராஜலட்சம்,
செயலாளர்,

பி. பிச்சை முத்து, பி.எஸ்ஸி, பி.டி.,
கூட்டுறவு சார்பதிவாளர்/தனி அலுவலர்


றில் 338.40 மில்லியன் கன அடி கொள்ளளவுள்ள கடம்பா ஏரியும் ஒன்று. இது தென்கால் மெயின் வாய்க்கால் மூலம் நேரடியாகப் பாசனம் பெறுகிறது.

திருவைகுண்டம் அணை தென் கால்வாய்க்காலில் இருந்து கடம்பா ஏரி தவிர்த்து அம்மன்புரம் மற்றும் அதன் கீழ் உள்ள 11 குளங்களுக்கு நேரடியாக நீர்ப்பாசன நீர் கிடைக்க வசதி செய்யும் திட்டத்திற்கு ரூ. 220 இலட்சமும், மருதூர் கீழ்க்காளிலிருந்து சிவகளை மற்றும் பெருங்குளம் ஏரிகளுக்கு நேரடிப் பாசன நீர் கிடைக்க வசதி செய்யும் திட்டத்திற்கு ரூ. 100 இலட்சமும், கன்னடியன் கால்வாயிலிருந்து வாகைக்குளம் மற்றும் அதன்கீழ் உள்ள ஏரிகளுக்கு நேரடிப் பாசன நீர் கிடைக்க வசதி செய்யும் திட்டத்திற்கு ரூ. 7.இலட்சமும், கன்னடியன் கால்வாயிலிருந்து ஓமநல்லூர் மேலக்குளம் ஏரி மற்றும் அதன் கீழ் உள்ள ஏரிகளுக்கு நேரடிப் பாசன நீர் கிடைக்க வசதி செய்யும் திட்டத்திற்கு ரூ. 5.80 இலட்சமும், தாமிரபரணி ஆற்றின் வெள்ளத் தடுப்புகளால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளைச் சீரமைக்க ரூ.3 இலட்சமும், விவசாயக் களர் நிலங்களைப் புதிய முறையில் மேம்படுத்த ரூ. 5 இலட்சமும் ஒதுக்கீடுசெய்யப்பட்டுப்பணிகள் துவக்கப்படவுள்ளன.

மணிமுத்தாறு திட்டத்தின்கீழ் உள்ள சீரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு ரூ. 34.70 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நவீன வானிலை அளவிடும் கருவி அமைப்புகள் மேற்கொள்ள ரூ. 42.745 இலட்சமும் ஆக மொத்தம் அனைத்துத் திட்டப் பணிகளுக்கும் ரூ. 871.45 இலட்சமும் திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு பணிகள் இவ்வாண்டு துவங்கப்படவுள்ளன.

மேற்காணும் தாமிரபரணி நீர்ப்பாசன மேம்பாட்டுத் திட்டத்திற்கான கால்கோள் விழா 11-10-89 அன்று சிதம்பரனார் மாவட்டம் திருவைகுண்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ம. கனகசபாபதி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாண்புமிகு இந்து அறநிலையத்துறை அமைச்சர் திரு. கே.பி. கந்தசாமி அவர்கள், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ். ராஜரத்தினம், இ.ஆ.ப., ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மாண்புமிகு பொதுப் பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் இத்திட்டத்திற்கான கால்கோளினை நாட்டினார்.

இத்திட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு, தாமிரபரணி ஆயக்கட்டிலுள்ள விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கைகள் நிறைவெய்தும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

தொகுப்பு:
டி. ராஜ்குமார்,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
சிதம்பரனார் மாவட்டம்.





# பெரியார் ஒருவர்தான்

-பேரறிஞர் அண்ணா

விசித்திர வைதீகர்களை வீதி சிரிக்கச் செய்தார் **சாக்ரடீஸ்!**

உலகுணராதவர்களுக்கு அது உருண்டை என்று உரைத்து உதைபட்டார் **கலிலியோ!**

வைதீகத்தின் மடமையை வாட்டினார் **வால்டேர்!**

மக்கள் மன்றத்துக்கு மதிப்புத்தர வேண்டும் என்றார் **ரூசோ!**

வேதப் புத்தகத்தை விற்று, விபச்சார விடுதிக்குப் பணம் தரும் போகிகளைக் கண்டித்தனர் **விக்ளிப், ஜிவிங்கிலி, மார்ட்டின் லூதர் போன்றோர்!**

அடிமைகளை விடுவித்தார் **ஆபிரகாம் லிங்கன்!**

முதலாளியின் கொடுமையை எடுத்துரைத்தார் **காரல் மார்க்ஸ்!**

முதலாளிகளை எதிர்த்துப் போராடினார் **லெனின்!**

சீனரின் சிறுமதியைப் போக்கினார் **சன்-யாட்-சென்**

துருக்கியரின் மதி தேய்வதைத் தடுத்தார் **கமால் பாட்சா!**

இறைவன் பெயர் கூறி ஏழையை வஞ்சித்தவரைச் சந்தி சிரிக்க வைத்தார் **இங்கர்சால்!**

பேதைமையைப் போக்கும் பணியை மேற்கொண்டார் **பெர்னாட்சா!**

வாழ்க்கையிலே வாட்டம், வேதனை, வறுமையின் கொடுமை, வஞ்சகத்தின் ஆட்சி- இவையிருப்பதைப் படம்பிடித்துக் காட்டினார் **கோர்க்கி, டர்கினாவ், டாஸ்ட்டாவ்ஸ்கி, சின்கிளேர்** போன்ற எண்ணற்றவர்கள்.

இவர்களும், இன்னும் எண்ணற்றவர்களும் தோன்றித் தொல்லைப்பட்டு, தூற்றப்பட்டு, கொடுமைகளுக்கு ஆளாகி, மனித சமுதாயத்தின் மறுமலர்ச்சிக்காகக் கொள்கைகளை, புதுக் கோட்பாடுகளை, எவருக்கும் எதற்கும் அஞ்சாது எடுத்துக்கூறிப் பாமரர்களுக்காகப் போராடியதால், இன்று பல்வேறு நாடுகளிலே மக்களின் மனம் விடுதலை பெற்றது.

அடிமை மனப்பான்மை அகன்றது!

அதனால் அங்கு ஒரு நாட்டை இன்னொரு நாடு அடக்க முடியவில்லை!

அடக்கினால், எரிமலை கக்குகிறது!

மக்கள் மனமென்னும் கடல் பொங்கி வழிகிறது; புரட்சிப் புயல் வீசுகிறது.

அதன் முன்பு எந்தக் கொடியவனாலும் நிற்க முடியவில்லை!

இங்கே நடக்கும் கொடுமைகளைக் கண்டிக்க, எடுத்துக்கூற, எதிர்க்கப் **பெரியார்** ஒருவர் தானே இருக்கிறார்!

# நினைவில் இராஜாஜி



தமிழ்நாட்டில் பிறந்து, அறிவாலும், ஆற்றலாலும், பண்பாலும், இந்திய நாட்டிற்கே பெருமையையும், உயர்வையும் தேடித் தந்த அரசியல் ஞானி மூதறிஞர் இராஜாஜி. 'தமிழ் நாட்டு அறிவு' என்று இவரைத் தமிழ்த் தென்றல் திரு.வி.க. பாராட்டினார். 'தனது மனச்சாட்சியின் காப்பாளர்' என்று அண்ணல் காந்தியடிகள் போற்றினார்.

அண்ணல் காந்தியடிகள் தம் சுக போகங்களையும், செல்வம் முதலிய சிறப்புகளையும் தியாகம் செய்து விட்டு, பொதுத் தொண்டிற்காகத் தம் வாழ்வையே அர்ப்பணித்ததைப் போலவே மூதறிஞர் இராஜாஜி அவர்களும் தம் செல்வச் செழிப்பையும் ஆடம்பர வாழ்வையும் உதறித் தள்ளி விட்டு, எளிய வாழ்க்கை வாழ்ந்ததோடு, தேச சேவைக்காகவே தம் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தார்.

சாதி வேற்றுமைகளையும்,. சமய வேற்றுமைகளையும் ஒழித்து, சமூகத்தில் ஒற்றுமையையும், சமத்துவத்தையும் நிலைநாட்ட அரும்பாடு பட்டார். கலப்புத் திருமணத்தை ஆதரித்தார். தீண்டாமை, மது ஆகிய இரு அரக்கர்களையும் எதிர்த்துப் போராடினார். 'கதர் இயக்கத்தின் தந்தை' என்று போற்றப்படும் வகையில், தமிழ்நாடு கதர் உற்பத்தியில் புகழ் பெற மூலகாரணராக இருந்தார்.

சத்தியம், அகிம்சை என்ற இரு கோட்பாடுகளின் அடிப்படையில் இந்திய சுதந்திரப்போரை நடத்திய மகாத்மா காந்தியின் நம்பிக்கைக்குரிய தளபதிகளுள் ஒருவராக நாட்டு விடுதலைப் போரில் ஈடுபட்டார். நடைமுறை வாழ்க்கையில் முழுக்க முழுக்க காந்தியவாதியாக இருந்தார். பண்டித ஜவகர்லால் நேரு, சர்தார் பட்டேல், பாபுராஜேந்திர பிரசாத் ஆகிய தலைவர்களோடு நெருக்கமான தொடர்பு வைத்திருந்ததோடு, ஆக்கப் பூர்வமான யோசனைகளை நல்கிச் சிறந்த வழிகாட்டியாக விளங்கினார்.

அவர் மனச்சாட்சிக்கு எது சரி, எது நியாயம் என்று தோன்றுகிறதோ, அதை யார் எதிர்த்தாலும் விட்டுக் கொடுக்க மாட்டார். சொந்த வாழ்வில் கண்ட எளிமையையும், சிக்கனத்தையும், பொதுவாழ்விலும் கடைப் பிடித்தார்.

எங்கிருந்தாலும், எத்தகைய உயர்பதவியில் இருந்தாலும், தமிழ் நாட்டின் உயர்வுக்காகவும், தமிழ் மக்களின் நன்மைக்காகவும், தமிழ் மொழியின் ஆக்கத்திற்காகவும் பாடுபடுவதை இராஜாஜி தம் கடமையாகக் கருதினார்.

தமிழ் இலக்கிய வளர்ச்சிக்காக அவர் ஆற்றிய பணி உன்னதமானது. நன்னெறி காட்டிடும் தமிழ் நூல்களைத் தமிழ் அன்னைக்குச் சூட்டி இருக்கிறார். இலக்கியத்தைப் பற்றி அவர் கூறும்போது, 'ஒரு புத்தகம் அல்லது சஞ்சிகை திரும்பப் பெற முடியாத சில மணிநேரங்களை உன்னிடமிருந்து அபகரித்துக் கொண்டு விடுகிறது; பதிலுக்கு உனக்கு அது ஏதாவது நன்மை செய்திருக்கிறதா என்று பார்க்க வேண்டும்,' என்பார்.

திருக்குறளுக்கு இவர் ஆங்கிலத்தில் எழுதிய உரை சிறந்த தொண்டாகப் போற்றத்தக்கது.

நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடி, சமுதாயத் தொண்டில் ஈடுபட்டு, நகராட்சித் தலைவர், காங்கிரஸ் தலைவர், முதலமைச்சர், கவர்னர், மத்திய அரசு அமைச்சர், சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரல்- இப்படிப் பல்வேறு பதவிகளில் நிர்வாகத் திறமையைக் காட்டி 94 ஆண்டுகள் வாழ்வாங்கு வாழ்ந்த அறிவுலக மேதை மூதறிஞர் இராஜாஜி நம் உள்ளங்களில் ஒளியாக என்றும் நிறைந்திருப்பார்.



# 1989 நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் தமிழ்நாடு

## நாடாளுமன்றத் தொகுதிகள்

### 1. வட சென்னை

மொத்த வாக்காளர் : 13,45,087
பதிவான வாக்குகள் : 8,19,293
செல்லாதவை : 7,532

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| டி. பாண்டியன் | இ.தே.கா. | வெற்றி |
| 1. டி. பாண்டியன் | இ.தே.கா. | 4,45,197 |
| 2. என்.வி.என். சோமு | தி.மு.க. | 3,31,426 |
| 3. இராம. [illegible]மார் | பா.ம.க | 21,537 |
| 4. [illegible] | ஜனதா (ஜே.பி) | 1,[illegible] |
| 5. ஜி.எச். [illegible]பா காந்தி | த.ம.ம. | 1,268 |
| 6. வி.எஸ். பிரகாசம் | சுயே. | 897 |
| 7. குமரி நம்பி | சுயே. | 808 |
| 8. பி. நாதன் | சுயே. | 737 |
| 9. கே. ஆனந்தராஜ் | சுயே. | 704 |
| 10. ஆர். சேரன் | லோ.த (பி) | 704 |
| 11. ஒ.ஏ. வரத தேசிகன் | சுயே. | 648 |
| 12. கே. சம்சுதீன் | சுயே. | 627 |
| 13. எம். சாரங்கபாணி | சுயே. | 608 |
| 14. கே. மனோகரன் | சுயே. | 566 |
| 15. பி. தமிழரசன் | சுயே. | 536 |
| 16. டி. இராஜேந்திரன் | சுயே. | 508 |
| 17. பி. அப்துல் பரித் | சுயே. | 483 |
| 18. எம். கைலாசம் | சோஷலிசத் தொழிலாளர் லீக் | 391 |
| 19. ஜி. கன்னியப்பன் | சுயே. | 358 |
| 20. நாக பூஷணம் | சுயே. | 356 |
| 21. மாணிக் சந்த் நகர் | சுயே. | 316 |
| 22. இ. முனுசாமி | சுயே. | 292 |
| 23. எம். நித்யானந்தம் | சுயே. | 263 |
| 24. எஸ்.எஸ். மணி | சுயே. | 262 |
| 25. திருமதி டி. விக்டோரியா | சுயே. | 232 |
| 26. டி. அங்கப்பா ராவ் | சுயே. | 226 |
| 27. சி.வி. பத்மநாபன் | சுயே. | 194 |
| 28. டி. ஜார்ஜ் கோமகன் | சுயே. | 135 |

### 2. மத்திய சென்னை

மொத்த வாக்காளர் : 10,26,829
பதிவான வாக்குகள் : 6,23,899
செல்லாதவை : 5,870

| | | |
|---|---|---|
| இரா. அன்பரசு | இ.தே.கா. | வெற்றி |
| 1. இரா. அன்பரசு | இ.தே.கா. | 3,29,739 |
| 2. டாக்டர் அ. கலாநிதி | தி.மு.க. | 2,63,333 |
| 3. பி. ராஜேந்திரகுமார் | பா.ஜ.க. | 12,215 |
| 4. கே. ரகுநாதன் | பா.ம.க. | 4,454 |
| 5. டாக்டர் எம்.பி. கல்யாணம் | டெ. கா. | 1,332 |
| 6. கே.ஆர். சுவாமிநாதன் | ம.ம.க. | 694 |
| 7. வடிவேல் | சுயே. | 692 |
| 8. கே.ஆர். ராஜ்குமார் | ஜனதா (ஜே.பி) | 594 |
| 9. ஆர். பாஸ்கரன் | சுயே. | 533 |
| 10. பி.கே. காசிஷா | சுயே. | 497 |
| 11. ஆர். ரவி கன்னா | சுயே. | 463 |
| 12. ஆர்.ஜி. பிரகாஷ் என்ற ஆர். ஞானப்பிரகாசம் | சுயே. | 429 |
| 13. எம். ஹபீப் | த.ம.ம. | 376 |
| 14. கே.என். ரங்கநாதன் | சுயே. | 321 |
| 15. எம். டொமினிக் சேவியோ | சுயே. | 270 |
| 16. எஸ்.என். ராகவேந்திர ராவ் | சுயே. | 262 |
| 17. ஏ. அப்துல் காதர் | சுயே. | 269 |

| | | |
|---|---|---|
| 18. ஏ. சண்முகம் | சுயே. | 253 |
| 19. எம். சுந்தரேசன் | சுயே. | 236 |
| 20. டி. ஜெயச்சந்திர நாயக்கர் என்ற ஜெயச்சந்திரன் | லோ. த (பி) | 203 |
| 21. ஜி. வெங்கடேன் | சுயே. | 188 |
| 22. எம். ஜான் வில்சன் | சுயே. | 179 |
| 23. கே. வின்சன்ட் | சுயே. | 156 |
| 24. பி. சுப்பிரமணி | சுயே. | 143 |
| 25. எம். நாகராஜன் | சுயே. | 102 |
| 26. பஸ்திமல் சுரானா | சுயே. | 96 |

## 3. தென் சென்னை

மொத்த வாக்காளர் : 13,97,773
பதிவான வாக்குகள் : 8,34,725
செல்லாதவை : 7,711

| திருமதி வைஜயந்திமாலா பாலி | இ.தே.கா. | வெற்றி |
|---|---|---|
| 1. திருமதி வைஜயந்திமாலா பாலி | இ.தே.கா. | 4,45,864 |
| 2. அருணாசலம் என்ற ஆலடி அருணா | தி.மு.க. | 3,20,020 |
| 3. அயிலம்பஞ்சாபகேச வெங்கடேஸ்வரன் | சுயே. | 24,967 |
| 4. வி. சிவராமன் என்ற சைதை கே.வி. சிவா | பா.ம.க. | 22,234 |
| 5. கே. ராதா கிருஷ்ணன் | சுயே. | 3,029 |
| 6. கே. குருமூர்த்தி | ஜனதா (ஜே.பி.) | 1,507 |
| 7. எம். பகவான் தாஸ் | த.ம.ம. | 964 |
| 8. டாக்டர் சி.வி. சேஷாத்திரி | சுயே. | 822 |
| 9. சி. திருமணி | சுயே. | 699 |
| 10. எம்.எஸ். அருள்மணி | சுயே. | 696 |
| 11. பி. ரமேஷ் | சுயே. | 676 |
| 12. எஸ். சுந்தர ரமணன் | சுயே. | 653 |
| 13. கே. ஹரிச்சந்திர பிரசாத் | சுயே. | 520 |
| 14. கிள் நாமக்காரர் கிரீடாதி அனந்தர் | சுயே. | 427 |
| 15. எஸ். வள்ளிவேலன் | சுயே. | 360 |
| 16. ஆர். எஸ். பாண்டியன் | சுயே. | 350 |
| 17. எம். கிருஷ்ணன் | சுயே. | 334 |
| 18. ஏ. பெரியசாமி | சுயே. | 323 |
| 19. டி.எஸ். குமார் | சுயே. | 321 |
| 20. கே.ஆர். எம்பெருமாள் | சுயே. | 303 |
| 21. எஸ்.டி. பன்னீர் செல்வம் | சுயே. | 300 |
| 22. எஸ். லீனாஸ் | சுயே. | 291 |
| 23. எம். சுசீலா | சுயே. | 287 |
| 24. எஸ்.வி.எஸ். சுப்ரமணியன் | சுயே. | 284 |
| 25. பி. பால்நாடார் | சுயே. | 273 |
| 26. ஏ.வி. ஸ்ரீனிவாசன் | சுயே. | 265 |
| 27. எ. சொக்கலிங்கம் | சுயே. | 245 |





## 4. ஸ்ரீபெரும்புதூர் (தனி)

மொத்த வாக்காளர் : 10,38,493
பதிவான வாக்குகள் : 7,16,403
செல்லாதவை : 10,049

| திருமதி மரகதம் சந்திரசேகர் | இ.தே.கா. | வெற்றி |
|---|---|---|
| 1. திருமதி மரகதம் சந்திரசேகர் | இ.தே.கா. | 3,87,795 |
| 2. டாக்டர் கே. கணேசன் | தி.மு.க. | 2,33,244 |
| 3. எ. கோபாலன் | சுயே. | 74,913 |
| 4. ஜி.எ. அப்பன் | சுயே. | 2,892 |
| 5. கே. சுந்தரேசன் | சுயே. | 2,421 |
| 6. ஆர். பரயன் என்ற ஆர். சேரன் | லோ. த. (பி) | 1,695 |
| 7. டி. வரதராஜ் | சுயே. | 1,387 |
| 8. கே. மகாலிங்கம் | சுயே. | 1,150 |
| 9. எம். சொக்கலிங்கம் | சுயே. | 857 |

## 5. செங்கல்பட்டு

மொத்த வாக்காளர் : 9,57,381
பதிவான வாக்குகள் : 7,00,195
செல்லாதவை : 10,598

| காஞ்சி பன்னீர்செல்வம் | அ.இ.அ.தி.மு.க | வெற்றி |
|---|---|---|
| 1. காஞ்சி பன்னீர்செல்வம் | அ.இ.அ.தி.மு.க. | 3,38,711 |
| 2. எம்.வி. ராமு | தி.மு.க. | 2,15,844 |
| 3. முனியாண்டி (எ) சி.ஜி. மணியன் | சுயே. | 1,23,300 |
| 4. என். குப்பன் | சுயே. | 5,216 |
| 5. சி.ஜி.எம். சுப்பிரமணியம் | சுயே. | 2,367 |

| | | |
|---|---|---|
| 6. வி. ராதாகிருஷ்ண ஷா தாமங்கிரி | ஜனதா (ஜேபி) | 1,345 |
| 7. எம். மனோகரன் | சுயே. | 923 |
| 8. ஜி. நடராஜன் | சுயே. | 814 |
| 9. நாகூர்மீரான் (எ) எம். ரிஷி | சுயே. | 744 |
| 10. என். விஸ்வநாதன் | சுயே. | 333 |

## 6. அரக்கோணம்


மொத்த வாக்காளர் : 9,75,636
பதிவான வாக்குகள் : 7,12,528
செல்லாதவை : 12,013

| ஆர். ஜீவரத்தினம், | இ.தே.கா. | வெற்றி |
|---|---|---|
| 1. ஆர். ஜீவரத்தினம் | இ.தே.கா. | 2,99,587 |
| 2. கே. மூர்த்தி. | தி.மு.க. | 2,37,194 |
| 3. எஸ். சுப்பிரமணியம். | பா.ம.க. | 1,47,902 |
| 4. ரவி (எ) என். ராமச்சந்திரன். | சுயே.. | 2,234 |
| 5. கே. அல்போன்ஸ் | த.ம.ம. | 1,994 |
| 6. எ. கந்தப்பன். | சுயே. | 1,962 |
| 7. ஆர் விஸ்வநாதன். | சுயே. | 1,905 |
| 8. கே. ரவிகுமார் | சுயே.. | 1,789 |
| 9. ஒய். டென்னி | சுயே. | 1,596 |
| 10. எம். வி. பி. வெங்கடேச பெருமாள் | சுயே. | 1,320 |
| 11. மணி எழிலன் புலவர் | சுயே. | 918 |
| 12. கே. என். நாராயணன் நாயர் | சுயே. | 622 |
| 13. டாக்டர் எஸ். முருகானந்தம் | சுயே. | 535 |
| 14. ஜி. அண்ணாமலை. | சுயே. | 494 |
| 15. இசட். வேதானந்தம் | சுயே.. | 463 |

## 7. வேலூர்

மொத்த வாக்காளர் : 10,11,251
பதிவான வாக்குகள் : 6,69,397
செல்லாதவை : 11,336

| ஏ.கே.ஏ. அப்துல் சமத் | இ.தே.கா. | வெற்றி |
|---|---|---|
| 1. ஏ.கே.ஏ. அப்துல்சமத் | இ.தே.கா. | 3,56,637 |
| 2. எம். அப்துல் லத்தீப் | தி.மு.க. | 1,95,787 |
| 3. ஆர். மோகன் | பா.ம.க. | 85,312 |
| 4. ஜே. வரதன் | சுயே. | 8,184 |



| | | |
|---|---|---|
| 5. கே. சாமன்னன் | சுயே. | 2,342 |
| 6. எ. வரதராஜன் | ஜனதா (ஜே.பி.) | 1,585 |
| 7. ஜே.பி. கணேசன் | சுயே. | 1,342 |
| 8. எஸ். பரசுராமன் | சுயே. | 1,234 |
| 9. எஸ். சையது இஸ்மாயில் | த.ம.ம. | 1,186 |
| 10. எம். நிஷார் அகமது | சுயே.. | 1,077 |
| 11. எ. முத்தன் | சுயே. | 806 |
| 12. என். பன்னீர் செல்வன் | சுயே. | 758 |
| 13. கே.இ. அருள்மொழிவர்மன் | சுயே. | 673 |
| 14. ஆர். என். சூர்யமூர்த்தி | சுயே. | 470 |
| 15. ஈ. மனோகரன் | சுயே. | 456 |
| 16. டாக்டர் எல் டேவிட் கவுண்டர் | சுயே. | 212 |

## 8. திருப்பத்தூர்

மொத்த வாக்காளர் : 9,92,148
பதிவான வாக்குகள் : 6,85,933
செல்லாதவை : 10,645

| எ. ஜெயமோகன் | இ.தே.கா. | வெற்றி |
|---|---|---|
| 1. எ. ஜெயமோகன் | இ.தே.கா. | 3,76,733 |
| 2. கே.சி. அழகிரி | தி.மு.க. | 2,41,900 |
| 3. எஸ். பாபு | சுயே. | 37,057 |
| 4. எச். எம். அமீநுதீன் | சுயே. | 3,699 |
| 5. ஜி. கமலநாதன் | சுயே. | 2,225 |
| 6. எ. அசோகன் | சுயே. | 2,201 |
| 7. எ. கேசவன் பிரபாகர் | த.ம.ம. | 1,733 |
| 8. எ. அப்பாதுரை | சுயே. | 1,638 |
| 9. எம். வாசுதேவன் | சுயே. | 1,031 |
| 10. வி.என். வடிவேலு | அ.இ.நீ.க. | 1,428 |
| 11. டி.குப்பன் | பா.ம.க. | 1,357 |
| 12. பி. ராமச்சந்திரன் | சுயே. | 1,125 |

| | | |
|---|---|---|
| 13. டி. சீனிவாசன் | சுயே. | 729 |
| 14. ஆர். சுந்தரமூர்த்தி | சுயே. | 674 |
| 15. எம். மேனக்ராஜ் | சுயே. | 480 |
| 16. எஸ். தாமஸ் | சுயே. | 356 |
| 17. கே. பன்னீர் செல்வம் | கா.தே.கா. | 322 |

## 9. வந்தவாசி

மொத்தவாக்காளர் : 9,78,457
பதிவான வாக்குகள் : 6,77,686
செல்லாதவை : 13,757

| எல். பலராமன் | இ.தே.கா. | வெற்றி |
|---|---|---|
| 1. எல். பலராமன் | இ.தே.கா. | 3,13,160 |
| 2. டி. வேணுகோபால். | திமு.க. | 2,12,988 |
| 3. காசிலிங்கம்துரை | பா.ம.க. | 1,28,318 |
| 4. திருமதி கே. புனிதவதி | சுயே. | 3,476 |
| 5. எஸ். மணவாளன் | த.ம.ம. | 3,005 |
| 6. எ. கிருஷ்ணன் | சுயே. | 1,397 |
| 7. எம். ஜெயபாலன் | சுயே. | 971 |
| 8. ஜி. இனியதயாளன் | சுயே. | 614 |

## 10. திண்டிவனம்

மொத்த வாக்காளர் : 9,59,621
பதிவான வாக்குகள் : 6,58,615
செல்லாதவை : 10,830

| ஆர். இராமதாஸ். | இ.தே.கா. | வெற்றி |
|---|---|---|
| 1. ஆர். இராமதாஸ் | இ.தே.கா. | 2,99,184 |
| 2. என். தயாநிதி | திமு.க. | 1,98,469 |
| 3. எஸ். சண்முகம் | பா.ம.க. | 1,42,996 |
| 4. பி. இளங்கோவன் | த.ம.ம. | 3,440 |
| 5. எம். சிவா | சுயே. | 1,668 |

| | | |
|---|---|---|
| 6. கே. பால் | லோ.த.(பி.) | 1,248 |
| 7. ராஜேந்திரன் | சுயே. | 774 |

## 11. கடலூர்

மொத்த வாக்காளர் : 9,60,185
பதிவான வாக்குகள் : 6,66,457
செல்லாதவை : 10,775

| பி.ஆர்.எஸ். வெங்கடேசன் | இ.தே.கா. | வெற்றி |
|---|---|---|
| 1. பி.ஆர்.எஸ். வெங்கடேசன் | இ.தே.கா. | 3,31,617 |
| 2. கி. பாஸ்கரன் | தி.மு.க. | 2,14,782 |
| 3. வி.ஆர். தண்டபாணி | பா.ம.க. | 99,814 |
| 4. எஸ். பெருமாள். | த.ம.ம. | 3,394 |
| 5. கே. தர்மன் | சுயே. | 2,985 |
| 6. டி. அப்துல் வஹாப் | சுயே. | 1,611 |
| 7. எஸ். கேசவன் | சுயே.. | 1,479 |

## 12. சிதம்பரம் (தனி)

மொத்த வாக்குகள் : 9,40,022
பதிவான வாக்குகள் : 6,70,801
செல்லாதவை : 8,249

| டாக்டர் பி. வள்ளல் பெருமான் | இ.தே.கா. | வெற்றி |
|---|---|---|
| 1. டாக்டர் பி. வள்ளல் பெருமான் | இ.தே.கா. | 2,05,229 |
| 2. டாக்டர் எ. அய்யாசாமி | தி.மு.க. | 1,76,946 |
| 3. ஆர். ஏழுமலை | பா.ம.க. | 1,58,155 |
| 4. எல். இளயபெருமாள் | இ.ம.உ.க. | 1,20,197 |
| 5. ஆர். வீரமணி | த.ம.ம. | 2,025 |




## 13. தர்மபுரி

மொத்த வாக்குகள் : 10,08,571
பதிவான வாக்குகள் : 6,90,708
செல்லாதவை : 11,610

| எம். ஜி. சேகர் | அ.இ.அ.தி.மு.க. | வெற்றி |
|---|---|---|
| 1. எம். ஜி. சேகர் | அ.இ.அ.தி.மு.க. | 3,15,921 |
| 2. பி.டி. இளங்கோவன் | பா.ம.க. | 2,02,901 |
| 3. எம். கந்தசாமி | தி.மு.க. | 1,54,220 |
| 4. கே. நம்பிராஜன் | சுயே. | 2,778 |
| 5. எ. கோவிந்தன் | சுயே. | 1,672 |
| 6. கே. பத்மராஜன் | த.ம.ம. | 1,606 |

## 14. கிருஷ்ணகிரி

மொத்த வாக்காளர் : 9,58,580
பதிவான வாக்குகள் : 6,07,181
செல்லாதவை : 13,539

| கே. ராமமூர்த்தி | இ.தே.கா. | வெற்றி |
|---|---|---|
| 1. கே. ராமமூர்த்தி | இ.தே.கா. | 3,62,376 |
| 2. பி. வெங்கடசாமி | ஜனதா தளம் | 1,60,882 |
| 3. டாக்டர் சி. ஆறுமுகம் | பா.ம.க. | 49,814 |
| 4. சி.எ. பாலகிருஷ்ணன் | த.க. | 7,138 |
| 5. ஆர். நந்தகுமார். | த.ம.ம.. | 4,470 |
| 6. சி. முருகேசன் | சுயே. | 4,465 |
| 7. டி.தோட்லான் | சுயே. | 2,744 |
| 8. ஆர். ராமகிருஷ்ண ரெட்டி | சுயே. | 1,753 |

## 15. இராசிபுரம்

மொத்த வாக்காளர் : 10,10,308
பதிவான வாக்குகள் : 6,39,205
செல்லாதவை : 9,957

| பி. தேவராஜன் | இ.தே.கா.. | வெற்றி |
|---|---|---|
| 1. பி. தேவராஜன் | இ.தே.கா. | 4,21,674 |
| 2. ஆர். மாயவன் | திமு.க. | 1,69,698 |
| 3. பி. ஜெயபால் | பா.ம.க. | 28,971 |
| 4. டி. கே. மாணிக்கம் | லோ.த.(பி.) | 2,273 |



| | | |
|---|---|---|
| 5. டி. எம். பொன்னுதுரை | சுயே. | 1,988 |
| 6. பி. ராமசாமி | த.ம.ம. | 1,830 |
| 7. பி. முருகேசன் | சுயே. | 1,283 |
| 8. பி. ராமசாமி | சுயே. | 820 |
| 9. ஆர். சின்னுசாமி | சுயே. | 711 |

## 16. சேலம்

மொத்த வாக்காளர் : 10,32,283
பதிவான வாக்குகள் : 6,68,495
செல்லாதவை : 9,610

| ரங்கராஜன் குமாரமங்கலம் | இ.தே.கா. | வெற்றி |
|---|---|---|
| 1. ரங்கராஜன் குமாரமங்கலம் | இ.தே.கா. | 4,00,936 |
| 2. எம். கார்திகேயன் | தி.மு.க. | 1,59,166 |
| 3. கே. சதாசிவம் | பா.ம.க. | 85,628 |
| 4. எ. பாலசுப்பிரமணியம் | த.க. | 5,721 |
| 5. என். கிருஷ்ணமூர்த்தி | சுயே. | 1,186 |
| 6. கே. பெருமாள் | சுயே. | 1,137 |
| 7. பி. பச்சமுத்து | த.ம.ம. | 1,088 |
| 8. டி. ராமச்சந்திரன் | சுயே. | 857 |
| 9. எம். டி. சுகபாணன் | சுயே. | 576 |
| 10. எம். கந்தசாமி | சுயே. | 403 |
| 11. எம். பழனிசாமி | சுயே. | 371 |
| 12. பி. சந்திரசேகர் | சுயே. | 355 |
| 13. ஆர் ராதா கிருஷ்ணன் | சுயே. | 334 |
| 14. எஸ்.டி. சிவஞானம் | சுயே. | 315 |
| 15. கே.எஸ். வெள்ளியங்கிரி | சுயே. | 279 |
| 16. வி. அசோக் குமார் | சுயே. | 278 |
| 17. எஸ். சேகர் | சுயே. | 255 |

( தொடர்ச்சி 26 ஆம் பக்கம் )

# படமும் செய்தியும்



மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களை மாண்புமிகு மத்திய பொதுப்பணி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. முரசொலி மாறன் அவர்கள் முதல்வர் அவர்களது இல்லத்தில் சந்தித்தார். (9.12.89)

இந்திய அரசின் மாநிலங்களுக்கிடையேயான கலாச் சாரப் பரிவர்த்தனைத் திட்டத்தின் கீழ் மராட்டிய மாநிலங் களிலிருந்து தமிழகம் வந்துள்ள 30 கலைஞர்கள் அடங்கிய கலைக்குழுவின் முதல் நிகழ்ச்சி சென்னையில் நடைபெற் றது. மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்களும், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி சுப்பு லட்சுமி ஜகதீசன் அவர்களும் நிகழச்சியில் கலந்து கொண்டு கலைஞர்களுக்கு நினைவுப் பரிசுகள் வழங்கினார்கள்.(7-12-89)



பூம்புகார் கைவினைப் பொருள் கணகாட்சியினை மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் திருமதி சுப்பு லட்சுமி ஜெகதீசன் அவர்கள் தொடங்கி வைத்தார்.(2-12-89)







முதறிஞர் இராஜாஜி அவர்களின் பிறந்த நாளை யொட்டி சென்னை, இராஜாஜி நினைவகத்தில் உள்ள இராஜாஜி அவர்களின் திருவுருவச் சிலைக்கு மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் மாலை யணிவித்து அஞ்சலி செலுத்தினார். (9.12.89)



மூதறிஞர் இராஜாஜி அவர்கள் பிறந்த நாளையொட்டி சென்னை, இராஜாஜி நினைவகத்தில் உள்ள இராஜாஜி அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் மாலையணிவித்து அஞ்சலி செலுத்தினார். (10.12.89)

மகாகவி பாரதியார் அவர்களின் 108-வது பிறந்த நாளை முன்னிட்டுச் சென்னை காமராசர் சாலையிலுள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் திரு. க. அன்பழகன் அவர்களும், அமைச்சர் பெருமக்களும் மாலையணிவித்தார்கள்.





(25-ஆம் பக்கத் தொடர்ச்சி)

## 17. திருச்செங்கோடு

மொத்த வாக்காளர் : 12,69,438
பதிவான வாக்குகள் : 8,18,032
செல்லாதவை : 10,745

| கே.சி. பழனிசாமி | அ.இ.அ.தி.மு.க. வெற்றி | |
|---|---|---|
| 1. கே.சி. பழனிசாமி | அ.இ.அ.தி.மு.க. | 5,09,847 |
| 2. திருமதி சி. பூங்கோதை | தி.மு.க. | 2,37,576 |
| 3. கே. சந்தி சேகர் | பா.ம.க. | 46,670 |
| 4. செல்வி எஸ். சாமுண்டீஸ்வரி | சுயே. | 3,797 |
| 5. சி. ராஜேந்திரன் | த.ம.ம. | 1,743 |
| 6. வி. காளிதாஸ் | சுயே. | 1,197 |
| 7. வி. தர்மலிங்கம் | சுயே. | 1,189 |
| 8. எ. பெருமாள் | சுயே. | 1,099 |
| 9. பி. லட்சுமணன் | சுயே. | 953 |
| 10. கே.கே. பொன்னையன் (எ.) பெருமாள் | சுயே. | 702 |
| 11. டி. ஜீ. சீதாராமன் | சுயே. | 589 |
| 12. கே. நோயல் | சுயே. | 506 |
| 13. எஸ். குஞ்சாராம் | சுயே. | 498 |
| 14. எஸ். சிங்காரவேல் | சுயே. | 449 |
| 15. எ. வெங்கடேஷ் | சுயே. | 295 |
| 16. கே. எம். வரதமுத்து | சுயே. | 177 |

## 18. நீலகிரி

மொத்த வாக்காளர் : 11,04,499
பதிவான வாக்குகள் : 7,51,196
செல்லாதவை : 10,576

| ஆர். பிரபு | இ.தே.கா. | வெற்றி |
|---|---|---|
| 1. ஆர். பிரபு | இ.தே.கா. | 4,55,411 |
| 2. எஸ். ஏ. மகாலிங்கம் | தி.மு.க. | 2,81,640 |
| 3. கே. எஸ். மயில்சாமி | சுயே. | 1,518 |
| 4. வி. லோகநாதன் | சுயே. | 1,118 |
| 5. எஸ். எஸ். சுப்பன் | சுயே. | 933 |



## 19. கோபி செட்டிபாளையம்

மொத்த வாக்காளர் : 9,12,847
பதிவான வாக்குகள் : 6,30,971
செல்லாதவை : 10,769

| பி.ஜி. நாராயணன் | அ.இ.அ.தி.மு.க. வெற்றி | |
|---|---|---|
| 1. பி.ஜி. நாராயணன் | அ.இ.அ.தி.மு.க. | 4,00,932 |
| 2. என். கே.கே. பெரியசாமி | தி.மு.க. | 1,74,975 |
| 3. வி. ராமநாதன் | பா.ம.க. | 37,521 |
| 4. டி. எல். ரங்கசாமி | சுயே. | 2,205 |
| 5. கே.எம். பெத்தரான் | சுயே. | 1,539 |
| 6. எ. ஜகீர் உசேன். | த.ம.ம. | 1,094 |
| 7. வி.எம். சின்னபொண்ணு | சுயே. | 787 |
| 8. எஸ். கே. சாமியப்பன் | சுயே. | 656 |
| 9. எ. வெற்றிவேல் | சுயே. | 493 |

## 20. கோயம்புத்தூர்

மொத்த வாக்காளர் : 11,73,651
பதிவான வாக்குகள் : 7,62,404
செல்லாதவை : 9,486

| சி.கே. குப்புசாமி | இ.தே.கா. | வெற்றி |
|---|---|---|
| 1. சி.கே. குப்புசாமி | இ.தே.கா. | 4,26,721 |
| 2. ஆர். உமாநாத் | இ.கம்.(மா) | 2,86,653 |
| 3. வி. நாராயணன் | பா.ஜ.க. | 25,132 |
| 4. கே. கல்யாணராமன் | சுயே. | 1,795 |
| 5. வி. ரங்கன் | பா.ம.க. | 1,604 |
| 6. கே. மணியன் | சுயே. | 1,347 |
| 7. கே. மந்தராசலம் | சுயே. | 1,086 |
| 8. பி. சண்முகசுந்தரம் | சுயே. | 897 |
| 9. கே. பழநிசுவாமி | சுயே. | 864 |
| 10. எம். கதிரேசன் | சுயே. | 831 |
| 11. மணி | சுயே. | 813 |
| 12. எம். முகிலன் | சுயே. | 687 |
| 13. சி. குமாரசுவாமி | சுயே. | 615 |
| 14. ஆர். ஜான் | சுயே. | 600 |
| 15. ஏ. இரும்பொறை | சுயே. | 582 |
| 16. எஸ். நடராஜன் | சுயே. | 545 |
| 17. ஆர். நடராஜன் | சுயே. | 536 |
| 18. கி. அருணன் | சுயே. | 515 |
| 19. எஸ். இராசாராம் | சுயே. | 384 |
| 20. ஆர். தங்கவேலு | சுயே. | 366 |
| 21. டாக்டர் பி. செல்லதுரை | சுயே. | 345 |

## 21. பொள்ளாச்சி (தனி)

மொத்த வாக்காளர் : 9,66,138
பதிவான வாக்குகள் : 6,47,756
செல்லாதவை : 10,546

| பி. ராஜா ரவிவர்மா | அ.இ.அ.தி.மு.க. வெற்றி | |
|---|---|---|
| 1. பி. ராஜா ரவிவர்மா | அ.இ.அ.தி.மு.க. | 4,28,704 |
| 2. எம். ஆறுமுகம் | இ.கம். | 1,97,395 |
| 3. சி. சங்கர் | த.ம.ம. | 5,800 |
| 4. டி. சுப்ரமணியம் | பா.ம.க. | 3,532 |
| 5. ஜி. ராஜசேகரன் | சுயே. | 1,779 |

## 22. பழனி

சுயேட்சை வேட்பாளர் ஒருவர் மறைந்ததால் தேர்தல் ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

## 23. திண்டுக்கல்

மொத்த வாக்காளர் : 10,32,491
பதிவான வாக்குகள் : 6,54,944
செல்லாதவை : 8,081

| சி. ஸ்ரீநிவாசன் | அ.இ.அ.தி.மு.க. வெற்றி | |
|---|---|---|
| 1. சி.ஸ்ரீநிவாசன் | அ.இ.அ.தி.மு.க. | 4,34,966 |
| 2. என். வரதராஜன் | இ.கம்.(மா) | 1,99,598 |
| 3. கே. ரத்தினசாமி | பா.ம.க. | 7,579 |
| 4. எஸ். பழநிச்சாமி | சுயே. | 2,901 |
| 5. எஸ். முத்துக்கிருஷ்ணன் | சுயே. | 1,100 |
| 6. டி.கே. கருத்த பாண்டியன் | சுயே. | 719 |

## 24. மதுரை

மொத்த வாக்காளர் : 11,37,351
பதிவான வாக்குகள் : 7,19,677
செல்லாதவை : 7,834

| ஏ.ஜி.எஸ். ராம்பாபு | இ.தே.கா. | வெற்றி |
|---|---|---|
| 1. ஏ.ஜி.எஸ். ராம்பாபு | இ.தே.கா. | 4,56,442 |
| 2. வி. வேலுச்சாமி | தி.மு.க. | 2,42,664 |
| 3. கே. பொன்னையா | பா.ம.க. | 2,834 |
| 4. ஜே.எஸ். கிருஷ்ணன் | சுயே. | 2,230 |
| 5. ஏ. ஜேம்ஸ்ராஜா | த.ம.ம. | 1,188 |
| 6. டி.எஸ். சுந்தரம் | லோக்தளம் (பி) | 871 |
| 7. கே. ராமன் | சுயே. | 826 |
| 8. எஸ்.பி. பாலு | சுயே. | 742 |
| 9. பி. ஜெயராமன் | சுயே. | 688 |
| 10. கே. பாண்டியன் | சுயே. | 629 |
| 11. எஸ். வெள்ளை | சுயே. | 601 |
| 12. ஜி.ஆர். கிருஷ்ணமூர்த்தி | சுயே. | 539 |
| 13. எம்.ஆர். ஜோதி கிருஷ்ணன் | சுயே. | 445 |
| 14. பி. பாண்டி | சுயே. | 321 |
| 15. ஏ.பி. காண்டீபன் | சுயே. | 307 |
| 16. டி.கே. கருத்தபாண்டியன் | சுயே. | 298 |
| 17. கே. மோகன் பால் | சுயே. | 218 |

## 25. பெரியகுளம்

மொத்த வாக்காளர் : 10,15,535
பதிவான வாக்குகள் : 6,63,502
செல்லாதவை : 7,090

| ஆர். முத்தையா | அ.இ.அ.தி.மு.க வெற்றி | |
|---|---|---|
| 1. ஆர். முத்தையா | அ.இ.அ.தி.மு.க. | 4,02,691 |
| 2. கம்பம். ஏ.கே. மகேந்திரன் | தி.மு.க. | 1,81,287 |
| 3. எஸ். குணசேகரன் | பா.ம.க. | 62,536 |
| 4. கே. இராசு | சுயே. | 2,538 |
| 5. பி. சங்கரலிங்கம் | த.ம.ம. | 1,530 |



| | | |
|---|---|---|
| 6. பி. சுப்பையன் | சுயே. | 879 |
| 7. எஸ்.கே. முத்தையா | சுயே. | 742 |
| 8. கே. சுருளிவேலு | சுயே. | 706 |
| 9. கே.பி. மணிமாறன் | சுயே. | 623 |
| 10. வி.ஏ. திரவியம் பிள்ளை | சுயே. | 537 |
| 11. எம். முகமது ஷரீப் | சுயே. | 453 |
| 12. எஸ். காஜா மொஹைதீன் | சுயே. | 411 |
| 13. பி. நஜ்முதீன் | சுயே. | 271 |
| 14. வி. பழநிசாமி | சுயே. | 241 |
| 15. கே. பழநிச்சாமி | சுயே. | 224 |
| 16. டி. கார்த்திகேயன் | சுயே. | 210 |
| 17. பி.சி. அருள்ராஜ் | சுயே. | 209 |
| 18. கே. தங்கராஜ் | சுயே. | 180 |
| 19. பி. ராஜேந்திரன் | சுயே. | 144 |

## 26. கரூர்

மொத்த வாக்காளர் : 10,50,677
பதிவான வாக்குகள் : 7,48,242
செல்லாதவை : 9,646

**எம். தம்பிதுரை — அ.இ.அ.தி.மு.க வெற்றி**

| | | |
|---|---|---|
| 1. எம். தம்பிதுரை | அ.இ.அ.தி.மு.க. | 4,84,492 |
| 2. கே.பி. பழநிச்சாமி | தி.மு.க. | 2,45,741 |
| 3. எம். சக்திவேல் | பா.ம.க. | 3,679 |
| 4. டி. சுப்புரத்தினம் | சுயே. | 1,885 |
| 5. எம்.வி. மனோகரன் | த.ம.ம. | 1,510 |
| 6. டி. கார்த்திகேயன் | சுயே. | 444 |
| 7. எம். ராமச்சந்திரன் | சுயே. | 441 |
| 8. எம். அப்பாவு | சுயே. | 404 |

## 27. திருச்சிராப்பள்ளி

மொத்த வாக்காளர் : 10,53,503
பதிவான வாக்குகள் : 7,12,943
செல்லாதவை : 10,096

**எல். அடைக்கலராஜ் — இ.தே.கா. — வெற்றி**

| | | |
|---|---|---|
| 1. எல். அடைக்கலராஜ் | இ.தே.கா. | 4,29,185 |
| 2. டி.கே. ரங்கராஜன் | இ.கம். (மா) | 2,59,219 |
| 3. இ. வேலுசாமி | ஜனதா (ஜே.பி) | 3,152 |
| 4. திருமதி ஆர். பாக்கியம் | பா.ம.க. | 2,057 |
| 5. பி. கதிரேசன் | சுயே. | 1,859 |
| 6. எம். பாலசுப்பிரமணியன் | த.ம.ம. | 1,841 |
| 7. பி.ஜி. அரிராவ் | சுயே. | 1,679 |
| 8. ஏ.எஸ்.எம். மரியநல்லு | சுயே. | 1,542 |





| | | |
|---|---|---|
| 9. ஏ. ஆரோக்கியசாமி | சுயே. | 1,088 |
| 10. தங்க மருதமுத்து | சுயே. | 807 |
| 11. ஆர். தாத்து அடைக்கப்பட்டார் | சுயே. | 498 |

## 28. பெரம்பலூர் (தனி)

மொத்த வாக்காளர் : 9,43,254
பதிவான வாக்குகள் : 6,80,308
செல்லாதவை : 10,895

**ஏ. அசோகராஜ் — அ.இ.அ.தி.மு.க வெற்றி**

| | | |
|---|---|---|
| 1. ஏ. அசோகராஜ் | அ.இ.அ.தி.மு.க. | 3,57,565 |
| 2. எஸ். பூவை கருத்தாழன் | தி.மு.க. | 2,21,389 |
| 3. எஸ். ஜான் பாண்டியன் | பா.ம.க. | 83,933 |
| 4. எஸ். கந்தசாமி | சுயே. | 3,127 |
| 5. ஏ. முருகேசன் | சுயே. | 1,797 |
| 6. பி. வீரமணி | த.ம.ம. | 1,602 |

## 29 : மயிலாடுதுறை

மொத்த வாக்காளர் : 9,11,460
பதிவான வாக்குகள் : 6,80,108
செல்லாதவை : 7,613

**இ.எஸ்.எம். பக்கீர் முகம்மது ஹாஜி — இ.தே.கா. — வெற்றி**

| | | |
|---|---|---|
| 1. இ.எஸ்.எம். பக்கீர்முகம்மது ஹாஜி | இ.தே.கா. | 3,52,492 |
| 2. பி. கல்யாணம் | தி.மு.க. | 2,50,547 |
| 3. கே. கொற்றவமூர்த்தி | பா.ம.க. | 64,203 |
| 4. இரா. சங்கரன் | த.ம.ம. | 2,431 |
| 5. இரா. நாராயணன் | இ.ம.மு. | 1,477 |
| 6. என். ராமகிருஷ்ணன் | சுயே. | 709 |
| 7. ஏ. பக்கீர் முகமது | சுயே. | 636 |

## 30. நாகப்பட்டினம் (தனி)

மொத்த வாக்காளர் : 9,31,750
பதிவான வாக்குகள் : 7,00,948
செல்லாதவை : 7,705

**எம். செல்வராஜ் — இ.கம். — வெற்றி**

| | | |
|---|---|---|
| 1. எம். செல்வராஜ் | இ.கம். | 3,41,921 |
| 2. என்.எஸ். வீரமுரசு | இ.தே.கா. | 3,20,398 |
| 3. வி.எஸ். தங்கராஜ் | பா.ம.க. | 25,516 |
| 4. கே. தங்கராஜன் | த.ம.ம. | 2,561 |
| 5. பி. சௌரிராஜன் | சுயே. | 1,552 |
| 6. கே. அம்பிகாபதி | சுயே. | 1,295 |

## 31. தஞ்சாவூர்

மொத்த வாக்காளர் : 9,20,406
பதிவான வாக்குகள் : 6,67,837
செல்லாதவை : 7,925

**எஸ். சிங்காரவடிவேல் — இ.தே.கா. — வெற்றி**

| | | |
|---|---|---|
| 1. எஸ். சிங்காரவடிவேல் | இ.தே.கா. | 3,71,967 |
| 2. எஸ். பழனிமாணிக்கம் | தி.மு.க. | 2,74,820 |
| 3. கேசவன் கோதை | பா.ம.க. | 7,617 |
| 4. அய்யனாபுரம் ஜி. நடராஜன் | த.ம.ம. | 2,273 |
| 5. ஏ. சிங்காரவேல் | சுயே. | 1,143 |
| 6. கே. மகாலிங்கம் | சுயே. | 1,046 |
| 7. பி.டி. ஜவஹர் | சுயே. | 1,044 |

## 32. புதுக்கோட்டை

மொத்த வாக்காளர் : 10,54,738
பதிவான வாக்குகள் : 7,87,854
செல்லாதவை : 9,560

**என். சுந்தரராஜ் — இ.தே.கா. — வெற்றி**

| | | |
|---|---|---|
| 1. என். சுந்தரராஜ். | இ.தே.கா. | 5,18,762 |
| 2. ஏ.செல்வராஜ் | தி.மு.க. | 2,47,626 |
| 3. எம்.ஆர். சொக்கலிங்கம் | சுயே. | 3,191 |
| 4. பி.ஏ. பழனி | சுயே. | 2,503 |
| 5. ஏ. மோகன்ராஜ் | த.ம.ம. | 1,793 |
| 6. ஏ. சிவபெருமாள் | பா.ம.க. | 1,002 |
| 7. எம். மந்திரி குமார் | சுயே. | 950 |
| 8. உ. இப்ராஹிம் | சுயே. | 939 |
| 9. எஸ். சுப்பையா ஆசாரி | சுயே. | 905 |
| 10. எம். செல்லப்பன் | சுயே. | 623 |

## 33. சிவகங்கை

மொத்த வாக்காளர் : 10,02,722
பதிவான வாக்குகள் : 6,61,013
செல்லாதவை : 7,664

**பி. சிதம்பரம் — இ.தே.கா. — வெற்றி**

| | | |
|---|---|---|
| 1. பி. சிதம்பரம் | இ.தே.கா. | 4,30,290 |
| 2. ஏ. கணேசன் | தி.மு.க. | 2,10,738 |



| | | |
|---|---|---|
| 3. வி. ராஜாங்கம் | சுயே. | 3,576 |
| 4. ஏ.பி. ராஜு | பா.ம.க. | 2,391 |
| 5. ஏ. மணி | த.ம.ந.ம. | 1,964 |
| 6. வெள்ளைச்சாமி | சுயே. | 1,616 |
| 7. உ. பாலு யாதவ் | சுயே. | 1,243 |
| 8. டி.கே. கருத்தபாண்டியன் | சுயே. | 910 |
| 9. எஸ்.எம். அருள்ராஜ் | சுயே. | 621 |

## 34. இராமநாதபுரம்

மொத்த வாக்காளர் : 10,35,096
பதிவான வாக்குகள் : 6,34,121
செல்லாதவை : 7,841

| வி. இராஜேஸ்வரன் | இ.தே.கா. | வெற்றி |
|---|---|---|
| 1. வி. இராஜேஸ்வரன் | இ.தே.கா. | 3,[illegible]345 |
| 2. சுப. தங்கவேலன் | தி.மு.க. | 2,1[illegible]601 |
| 3. ஆர்.எம். சாகுல் அமீது | சுயே. | 1,756 |
| 4. பி. இராஜேந்திரன் | த.ம.ம. | 1,566 |
| 5. முகம்மது அலி ஜின்னா | சுயே. | 1,530 |
| 6. வி. கோவிந்தன் | சுயே. | 1,333 |
| 7. ஐ. ராமன் | சுயே. | 1,217 |
| 8. பி.ஏ.பி. தேவர்தாசன் | சுயே. | 1,047 |
| 9. எம்.ஆர்.வி. ராமசந்திரன் | சுயே. | 677 |
| 10. என். தர்மராஜன் செட்டியார் | சுயே. | 408 |

## 35. சிவகாசி

மொத்த வாக்காளர் : 10,83,355
பதிவான வாக்குகள் : 7,83,252
செல்லாதவை : 9,604

| டாக்டர் கே. காளிமுத்து | அ.இ.அ.தி.மு.க | வெற்றி |
|---|---|---|
| 1. டாக்டர் கே. காளிமுத்து | அ.தி.அ.தி.மு.க. | 4,50,376 |
| 2. வை. கோபால்சாமி | தி.மு.க. | 3,13,308 |
| 3. ஜே.எஸ். பாலையா | பா.ம.க. | 1,918 |
| 4. இ. சந்திரன் | ஜனதா (ஜே.பி) | 1,346 |
| 5. எஸ். பன்னீர்செல்வம் | சுயே. | 920 |
| 6. எஸ். கனகவேல் | சுயே. | 651 |
| 7. எம். மன்மதன் | சுயே. | 594 |
| 8. பி. பசும்பொன் | த.ம.ம. | 580 |
| 9. ஜி. பாண்டி | சுயே. | 522 |
| 10. டி. பெரியசாமி | சுயே. | 433 |
| 11. எஸ். மாரிமுத்து | சுயே. | 422 |
| 12. ஏ. ராமசாமி | சுயே. | 381 |
| 13. ஏ. அப்பன் ராமானுஜம் | சுயே. | 337 |
| 14. எஸ். தங்கையா | சுயே. | 258 |
| 15. பி.ஜு.டி. தியாகராஜன் | சுயே. | 255 |
| 16. ஆர். அழகர்சாமி | சுயே. | 219 |
| 17. டி.கே. கருத்த பாண்டியன் | சுயே. | 184 |
| 18. பி. ஜெயபால் | சுயே. | 179 |
| 19. பி. தனுஷ்கோடி | சுயே. | 177 |
| 20. என். ஆதிநாராயணன் | சுயே. | 167 |
| 21. ஏ.எஸ். ராஜரத்தினம் | சுயே. | 163 |
| 22. எஸ். ஆறுமுகம் | சுயே. | 144 |
| 23. எஸ். தட்சிணாமூர்த்தி | சுயே. | 114 |



## தேர்தல் பணியில் இறந்த முன்னாள் இராணுவ வீரர் குடும்பத்திற்கு ரூ.10,000 நிதி உதவி!

முதல்வர் கலைஞர் அறிவிப்பு

செங்கல்பட்டு நாடாளு மன்றத் தொகுதியில் திருக்கழுக் குன்றம் அருகிலுள்ள தூரடிமங்கலம் என்ற ஊரில் வாக்குச் சாவடிப் பாதுகாப்புப் பணியில் ஈடுபட் டிருந்த முன்னாள் இராணுவ வீரர் திரு. அருணாசலம் (வயது 70) 23-11-89 அன்று மாலையில் மாரடைப்பால் மரணம் அடைந் தார்.

தேர்தல் பணியின்போது மரண மடைந்த முன்னாள் இராணுவ வீரர் திரு. அருணாசலம் அவர்களின் குடும்பத்திற்கு, மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் ரூ. 10,000 நிதி உதவி வழங் கிட உத்தரவிட்டார்கள்.

## 36. திருநெல்வேலி

மொத்த வாக்காளர் : 9,70,425
பதிவான வாக்குகள் : 6,14,990
செல்லாதவை : 8,223

| எம்.ஆர். ஜனார்த்தனன் | அ.இ.அ.தி.மு.க | வெற்றி |
|---|---|---|
| 1. எம்.ஆர். ஜனார்த்தனன் | அ.இ.அ.தி.மு.க. | 3,94,444 |
| 2. டி.எஸ்.ஏ. சிவப்பிரகாசம் | தி.மு.க. | 2,03,309 |
| 3. எஸ். அய்யாதுரை | சுயே. | 2,308 |
| 4. எஸ். நங்கமுத்து | த.ம.ம. | 1,397 |
| 5. டி. ஆறுமுகதாஸ் யாதவ் | சுயே. | 1,159 |
| 6. வி. சுடலை மணி | சுயே. | 786 |
| 7. ஜி. கஸ்பார் ராஜா | சுயே. | 705 |
| 8. சாணக்கியா பி. ரெகு | சுயே. | 597 |
| 9. எம். ராயப்பன் | சுயே. | 555 |
| 10. சி. அய்யனார் | சுயே. | 477 |
| 11. எஸ். வேல்முருகன் பிள்ளை | சுயே. | 394 |
| 12. சி. ராமசாமி | சுயே. | 344 |
| 13. கே. செந்திவேல் | சுயே. | 292 |

## 37. தென்காசி (தனி)

மொத்த வாக்காளர் : 9,33,214
பதிவான வாக்குகள் : 6,38,792
செல்லாதவை : 9,905

| எம். அருணாசலம் | இ.தே.கா. | வெற்றி |
|---|---|---|
| 1. எம். அருணாசலம் | இ.தே.கா. | 3,93,075 |
| 2. ஆர். கிருஷ்ணன் | இ.கம் (மா) | 2,20,368 |
| 3. எஸ். முத்தையா | சுயே. | 4,320 |
| 4. எஸ். மாணிக்கராஜ் | த.ம.ம. | 3,680 |
| 5. இ. கோபாலகிருஷ்ணன் | சுயே. | 2,638 |
| 6. எம். சுப்ரமணியன் | சுயே. | 2,271 |
| 7. எஸ். சிவன் | சுயே. | 1,675 |
| 8. வி. மோகன் | சுயே. | 860 |

## 38. திருச்செந்தூர்

மொத்த வாக்காளர் : 9,15,895
பதிவான வாக்குகள் : 5,75,556
செல்லாதவை : 6,118

| ஆர். தனுஷ்கோடி ஆதித்தன் | இ.தே.கா. | வெற்றி |
|---|---|---|
| 1. ஆர். தனுஷ்கோடி ஆதித்தன் | இ.தே.கா. | 3,85,656 |
| 2. ஏ. கார்த்திகேயர் | தி.மு.க. | 1,73,585 |
| 3. ஐ. இளவரசன் | த.ம.ம. | 1,602 |
| 4. வட்சுமணபெருமாள் (எ) பி. தபேந்திரன் | சுயே. | 1,535 |
| 5. சி. பாபநாசம் | பா.ம.க. | 1,500 |
| 6. பாப்பா (எ) எஸ். சரவணப்பெருமாள் | சுயே. | 1,120 |
| 7. ஏ. கல்யாணசுந்தரம் | சுயே. | 999 |
| 8. என். ராஜகோபாலன் | சுயே. | 898 |
| 9. ஜே. கார்த்திகேயன் | சுயே. | 781 |
| 10. ஐ. ஹரிராமகிருஷ்ணன் | சுயே. | 483 |
| 11. ஏ. தனுஷ்கோடி ராமலிங்கபாண்டியன் | சுயே. | 439 |
| 12. ஓ.கே. வெள்ளிவேல் நாடார் | சுயே. | 422 |
| 13. ஆர். சுப்ரமணியன் | சுயே. | 418 |

## 39. நாகர்கோயில்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | : | 9,52,464 |
| பதிவான வாக்குகள் | : | 5,54,203 |
| செல்லாதவை | : | 4,380 |

| என். டென்னிஸ் | இ.தே.கா. | வெற்றி |
|---|---|---|
| 1. என். டென்னிஸ் | இ.தே.கா. | 2,92,422 |
| 2. டாக்டர் டி. குமாரதாஸ் | ஜனதா தளம் | 2,13,866 |
| 3. எம்.ஆர். காந்தி | பா.ஜ.க. | 39,125 |
| 4. எஸ். கென்னடி பீட்டர் பேரின்பதாஸ் | பா.ம.க. | 1,081 |
| 5. டி. சந்திரன் | த.ம.ம. | 759 |
| 6. பி. தாஸ் | சுயே. | 651 |
| 7. என். துரைசாமி நாடார் | சுயே. | 614 |
| 8. என். மகாதேவன் | சுயே. | 582 |
| 9. யூ. நாகூர் மீரான் பீர் முஹம்மது | சுயே. | 269 |
| 10. கே.எம்.கலீல் பாட்சா | சுயே. | 234 |
| 11. எஸ். சுவாமி | சுயே. | 220 |

### குறிப்பு: (கட்சிகள் விவரம்)

| | | |
|---|---|---|
| இ.தே.கா. | : | இந்திய தேசிய காங்கிரஸ் |
| தி.மு.க. | : | திராவிட முன்னேற்றக் கழகம் |
| அ.இ.அ.தி.மு.க. | : | அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் |
| ஜனதாதள் | : | ஜனதாதளம் |
| லோ. த. (பி) | : | லோக் தளம் (பி) |
| ஜனதா (ஜே.பி) | : | ஜனதா (ஜே.பி.) |
| பா.ம.க. | : | பாட்டாளி மக்கள் கட்சி |
| த.ம.ம. | : | தராசு மக்கள் மன்றம் |
| பா.ஜ.க. | : | பாரதீய ஜனதா கட்சி |
| டெ.கா. | : | டெக்கான் காங்கிரஸ் |
| ம.ம.க | : | மகாபாரத மக்கள் கட்சி |
| இ.கம். (மா) | : | இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்ஸ்) |
| இ.கம். | : | இந்திய கம்யூனிஸ்ட் |
| அ.இ.நீ.க. | : | அகில இந்திய நீதிக் கட்சி |
| பா.ம.கா. | : | பாரத மக்கள் காங்கிரஸ் |
| கா.தே.கா. | : | காமராஜ் தேசீய காங்கிரஸ் |
| இ.ம.உ.க | : | இந்திய மனித உரிமைகள் கட்சி |
| சுயே. | : | சுயேச்சை |
| த.ம.ந.ம. | : | தமிழ்நாடு மக்கள் நல மன்றம் |


*With best compliments from*

இந்தியன் வங்கி
**Indian Bank**

H.O:- 31, Rajaji Salai, Madras-600 001

Lead Bank for

1. Chengai-Anna
2. North Arcot-Ambedkar
3. South Arcot
4. Salem
5. Dharmapuri

and the newly formed

6. Tiruvannamalai-Sambuvarayar Districts

in Tamilnadu State.

Regional Office, Vellore 632 001, North Arcot-Ambedkar District




## திண்டுக்கல்-காயிதேமில்லத் மாவட்டத்தில் கூட்டுறவு வளர்ச்சி

திண்டுக்கல் — காயிதேமில்லத் மாவட்டத்தில் 381 கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் 190 தொடக்கக் கூட்டுறவு வங்கிகள், 5 கூட்டுறவு விவசாய வங்கிகள் மற்றும் 2 உழவர் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், மதுரை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி மூலமாக நெல், வாழை, பருத்தி, எண்ணெய் வித்துக்கள், காபி, திராட்சை, காய்கறிகள் முதலிய பயிர் உற்பத்திக்காகக் குறுகிய காலப் பயிர்க் கடன்கள் வழங்கி வருகின்றன. 1988-89-ஆம் ஆண்டில் மேற்கண்ட சங்கங்கள் மதுரை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி மூலம் ரூ. 520 இலட்சம் கடன் வழங்கியுள்ளன.

1989-90-ஆம் ஆண்டில் ரூ.725 இலட்சம் குறுகிய காலப் பயிர்க் கடனாக வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 15,100 பேர் பயன்பட உள்ளனர். 1989 ஏப்ரல் முதல் '89 ஜூன் திங்கள் முடிய ரூ. 101 இலட்சம் பயிர்க்கடன் 4123 உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு பயனடைந்து உள்ளனர்.

திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டத்தில் உள்ள தொடக்கக் கூட்டுறவு வங்கிகள் மூலம் கறவை மாடுகள் வாங்குதல், ஆடுகள் வளர்த்தல், சாண எரிவாயுச் சாதனம் அமைத்தல் ஆகிய காரியங்களுக்காக மத்தியக் காலக் கடன் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வகையில் 1988-89-ஆம் ஆண்டில் ரூ. 162 இலட்சம் வழங்கத் திட்டமிடப்பட்டு, ரூ. 254 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 9,309 நபர்கள் பயன் பெற்றுள்ளார்கள். இதுபோன்று 1989-90-ஆம் ஆண்டுக்கு ரூ. 250 இலட்சம் கடன் வழங்கத் திட்டமிடப்பட்டு உள்ளது. இதன் மூலம் 9,600 உறுப்பினர்கள் பயனடைய உள்ளார்கள்.

சமூகத்தில் நலிவடைந்த பிரிவினர்களுக்காக ரூ. 45 இலட்சம் 1989-90-ஆம் ஆண்டில் கடன் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் 1,108 உறுப்பினர்கள் பயன் அடைய உள்ளார்கள். இதன்படி ரூ. 15.29 இலட்சம் மத்திய காலக் கடனாக ஏப்ரல் '89 முதல் ஜூன் '89 வரை வழங்கப்பட்டு உள்ளது. இதன் மூலம் 581 உறுப்பினர்கள் பயனடைந்துள்ளார்கள்.

திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டத்தில் 6 பிரதமக் கூட்டுறவு நிலவள வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. இந்த வங்கிகள் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், பெருத்த நிதியுதவித் திட்டம், நபார்டு நிதியுதவித் திட்டம் இவற்றின்கீழ் கடன்கள் வழங்கி வருகின்றன. மாவட்டத்தில் உள்ள 6 கூட்டுறவு நிலவள வங்கிகள் மூலம் 1988-89-ஆம் ஆண்டில் ரூ.88 இலட்சம் மேற்கண்ட திட்டங்களில் கடன் வழங்கியுள்ளது. இதுபோன்று 1989-90-ஆம் ஆண்டுக்கும் கடந்த ஆண்டை விட அதிகமாகக் கடன் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### ஒரு கோடி ரூபாய்க்கு வட்டிச் சலுகை:

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், தமிழகத்தில் உள்ள விவசாயிகளுக்குக் கடன் சுமையைக் குறைக்க வேண்டும் என்ற கோரிக்கையைக் கனிவோடு பரிசீலித்து, வட்டிச் சலுகையைத் தள்ளுபடி செய்து ஆணை பிறப்பித்து உள்ளார்கள். இதன்படி சிறு விவசாயிகள் மீது கூட்டுறவுச் சங்கங்களின் கணக்கில் 30-6-88 அன்று நிலுவையிலிருந்த தவணை தவறிய மத்தியக் கால மாற்றுக் கடன் (வட்டி மற்றும் அபராத வட்டி உள்ளிட்டது) 1-7-88 முதல் 31-12-88 வரை அவர்களால் செலுத்தப்பட்டது போக மீதி நிலுவையில் உள்ள தொகையை வசூலிப்பதை அரசு தள்ளுபடி செய்துள்ளது.

சிறு விவசாயிகள்மீது கூட்டுறவுக் கடன் கணக்கில் 30-6-88 அன்று நிலுவையில் இருந்த குறுகிய காலக் கடன்கள் மற்றும் மத்திய காலக்






கடன்கள் மீதான அபராத வட்டி மற்றும் முடக்கப்பட்ட நீண்ட காலக் கடன்கள் மீதான தனிமைப்படுத்தப் பட்ட வட்டி ஆகியவைகளில் 1-7-88 முதல் 31-12-88 வரை அவர்களால் செலுத்தப்பட்ட தொகை போக மீதி நிலுவை உள்ளதை அரசு தள்ளுபடி செய்துள்ளது. இதன் மூலம், திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டத்தில் ரூ. 1 கோடி வட்டிச் சலுகை அளிக்கப்பட்டுள்ளது.

திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டத்தில் மத்திய காலக் கடனாக நீடிக்கப்படவுள்ள குறுகிய காலக் கடன்தொகை ரூ. 128.55 இலட்சமாகும். மறுவழி பிரேரணை அனுப்ப வேண்டிய தொகை ரூ. 14.52 இலட்சமாகும். நீண்டகாலக் கடனைப் பொறுத்த வரையில் 1988-89-ஆம் ஆண்டின் மொத்த கேட்புத் தொகை ரூ. 246.24 இலட்சமாகும். இதில் வசூல் செய்யப்பட்ட தொகை ரூ. 29.36 இலட்சமாகும். ரூ. 20.36 இலட்சம் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள கேட்புத் தொகை ஆகும். இதற்கு மறுவழி பிரேரணை அனுப்பி வைக்கப்பட உள்ளது.

திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டத்தில் உள்ள தொடக்கக் கூட்டுறவு வங்கிகள் திண்டுக்கல்லில் உள்ள மதுரை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிக் கிளைகள் மற்றும் கூட்டுறவு நகர வங்கிகள் நகைக் கடன்கள் வழங்கி வருகின்றன. இவை மூலம் 1988-89-ஆம் ஆண்டுக் குறியீடாக ரூ. 860 இலட்சம் நிர்ணயிக்கப்பட்டு ரூ. 978 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. இது போன்று ரூ. 1989-90-ஆம் ஆண்டுக்கு 930 இலட்சம் கடன் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 52,500 உறுப்பினர்கள் பயனடைய உள்ளார்கள். ஏப்ரல் 1989 முதல் ஜூன் 1989 முடியவுள்ள மூன்று மாதங்களில் ரூ. 83.20 இலட்சம் கடன் பெற்று 2,328 உறுப்பினர்கள் பயனடைந்துள்ளார்கள்.

இம்மாவட்டத்தில் மத்தியக் கூட்டுறவு வங்கி ஆரம்பிக்க, அரசு ஆணை பிறப்பித்துள்ளது. திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டத்தில் 3 கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும், ஒரு காப்பி மற்றும் ஏலக்காய் பயிரிடுவோர் கூட்டுறவு வங்கியும் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் விவசாயிகளுக்கு அவர்கள் விளை பொருட்களை நல்ல விலை கொடுக்கச் செய்யும் பொருட்டு சங்கங்களின் மூலமாகக் கொள் முதல் செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

## முதல் கூட்டுறவுச் சங்கம்

**இன்று உலகம் முழுவதும் பரவியிருக்கும் கூட்டுறவு இயக்கத்தைத் தோற்றுவித்தவர் சர். ராபர்ட் ஓவன்.**

**1950-ஆம் ஆண்டு இந்த இயக்கம் தோன்றியது. முதலில் தோன்றிய சங்கம் இங்கிலாந்தின் ராக்டேல் நெசவாளர் கூட்டுறவு.**

1988-89-ஆம் ஆண்டில் ரூ. 594 இலட்சத்திற்கு இச்சங்கங்கள் விவசாயிகளிடமிருந்து விவசாய விளை பொருட்களான காப்பி, எண்ணெய் வித்துக்கள், பருத்தி, வெங்காயம், புளி ஏலக்காய், காய் கறிகள் ஆகிய விவசாய விளை பொருட்களைக் கொள்முதல் செய்து விற்பனை செய்துள்ளன. இவ்வகையில் இச்சங்கங்கள் மூலமாக மாவட்டத்தில் 4,135 மெட்ரிக் டன் அளவிற்குக் கொள்முதல் செய்து விற்பனை செய்யப்பட்டுள்ளது.

1989-90-ஆம் ஆண்டுக்கு ரூ. 715 இலட்சத்திற்கு விவசாய விளை பொருட்கள் கொள்முதல் செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த இலக்கை அடைவதற்காகக் கீழ்க் கண்டவாறு நடைமுறைகள் செயல் படுத்தப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டில் இம்மாவட்டத்திலுள்ள கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலம் அதிக அளவில்பருத்தி கொள் முதல் செய்து நூற்பாலைகளுக்கு விற்பனை செய்வதற்குத் திட்டமிடப் பட்டுள்ளது.

இம்மாவட்டத்திலுள்ள திண்டுக்கல் கூட்டுறவு விற்பனைச் சங்கம் மூலம் வெங்காயத்தைக் கொள்முதல் செய்து தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் மற்றும் தேசிய கூட்டுறவு விற்பனை இணையம் மூலமாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யத் திட்டமிடப்பட்டு இதுகாறும் 997 மெட்ரிக் டன் கொள்முதல் செய்யப்பட்டு ஏற்றுமதி செய்யப் பட்டு உள்ளது. 1989-90-ஆம் ஆண்டுக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கை முழுமை யாக எய்தும் வண்ணம் திண்டுக்கல் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் மூலம் ரூ.80 இலட்சத் திற்கும், பட்டி வீரன்பட்டி காப்பி மற்றும் ஏலக்காய் பயிரிடுவோர் கூட்டுறவு வங்கியின் மூலம் ரூ. 520 இலட்சத்திற்கும் விவசாய விளை பொருட்கள் கொள்முதல் செய்து விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டு உள்ளது. கொடைக்கானல் கூட்டுறவு விற்பனைச் சங்கம் மூலமாக ரூ.18 இலட்சம் கொள்முதல் செய்து விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டு உள்ளது.

இம்மாவட்டத்தில் 4 கூட்டுறவு நகர வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. இந்த நகர வங்கிகள் சிறுதொழில் மற்றும் குடிசைத் தொழில் செய்வதற்கான கடன்கள் வழங்கி வருகின்றன. இவ்வகையில் 1988-89-ஆம் ஆண்டில் ரூ.. 28 இலட்சம் கடனாக வழங்கப்பட்டு உள்ளது. 1989-90-ஆம் ஆண்டில் ரூ. 35 இலட்சம் கடனாக வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 350 உறுப்பினர்கள் பயனடைய உள்ளார்கள்.






இலவச அரிசி
இலவச வேட்டி-சேலைகள்

இலவச திருமணக் கடன் உதவிகள்
பெண்களுக்கு சொத்தில் சமபங்கு
கர்ப்பிணிப் பெண்களுக்கு உதவிகள்

போன்ற

ஏழைகளை வாழ வைக்கும்
ஏற்றமிகு திட்டங்களை நிறைவேற்றி
ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணும்
தமிழினத் தலைவர் - தமிழக முதல்வர்
டாக்டர் கலைஞர் அவர்களுக்கு
50 சதவிகித நெல் கொள்முதலை
30 சதவிகிதமாகக்குறைத்ததற்காக
எங்கள் இதயங்கனிந்த பாராட்டுக்கள்

அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கம்,
பழனி,
திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம்,


திண்டுக்கல் காயிதேமில்லத் மாவடடத்தில் மூன்று முதன்மைச் சங் கங்கள் செயல்பட்டு வருகின்றன. மொத்தம் 3,83,145 குடும்ப அட்டைதாரர்கள் உள்ளனர். இவற்றில் 3,19,746 குடும்ப அட்டைதாரர்கள் கிராமப் புறத்திலும் 63,399 குடும்ப அட்டைதாரர்கள் நகரப்புறத்திலும் உள்ளனர். இம்மாவட்டத்தில் உள்ள மூன்று முதன்மைச் சங்கங்கள் இவற்றுடன் இணைக்கப்பட்டுள்ள 189 இணைப்புச் சங்கங்களுக்கு எல்லாக் குடிமைப் பொருட்களையும் விநியோகம் செய்து வருகின்றன. 509 நியாயவிலைக் கடைகள் மூலம் பொதுமக்களுக்கு குடிமைப் பொருட்கள் சீரா்க வழங்கப் பட்டு வருகின்றன.

இம்மாவட்டத்தில் பொது விநியோகத் திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தும் வகையில் குடும்ப அட்டைதாரர்கள் வசதிக்கேற்ப, சுழல் முறையில் குடிமைப் பொருட்கள் வழங்கும் திட்டம் திண்டுக்கல் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் 7-4-88 முதல் அறிமுகம் செய்யப்பட்டு செயல்படத் துவங்கியது. பின்னர் இத்திட்டம் 7-5-88 முதல் மாவட்டம் முழுமைக்கும் விரிவுபடுத்தப்பட்டது. தற்போது இத்திட்டம் சிறப்பாக மாவட்டம் முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நியாயவிலைக் கடைகளிலுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு வாரத்தில் 5 தினங்களுக்கும் குடிமைப் பொருட்களை வாங்கும் நோக்கத்துடன் 5 பகுதியாகப் பிரித்து குடிமைப் பொருள் வழங்கப்படுகிறது. இக்குறிப்பிட்ட தினங்கள் வாங்க இயலாதவர்களுக்கு ஒவ்வொரு வாரச் சனிக்கிழமையில் பொருட்கள் வழங்கப்படுகின்றன.

☐ ☐

**ஒருவரை ஒருவர் கண்டவுடன் முகமலர்ச்சி சிரமமின்றி ஏற்பட வேண்டும். பயன்கருதி அல்ல-அர்த்தமற்றும் அல்ல-கண்டதும் களிப்பு-நம்மைப்போல ஒருவன் என்ற நினைப்பிலிருந்து அந்தக் களிப்பு மலரவேண்டும். அதுவே தோழமை.**

**—அறிஞர் அண்ணா**

பொதுமக்கள் தாங்கள் நியாய விலைக் கடையில் காணும் நிறைகளையும் குறைகளையும் மற்றும் குறிப்புகளையும் தெள்ளத்தெளிவாக அதிகாரிகளுக்குத் தெரிவிக்கச் செய்யும் வகையில் புகார்ப் புத்தகங்களும், புகார்ப் பெட்டிகளும் பொதுமக்கள் பார்வையில் படும் வண்ணம் வைக்கப்பட்டுள்ளன. பொது மக்களிடமிருந்து இத்திட்டத்திற்கு நல்ல வரவேற்பு இருந்து வருகிறது.

ஒவ்வொரு மாதமும் திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படும் கட்டுப்பாடு அரிசி, சீனி, பாமாயில் எண்ணெய், மண்ணென்ணெய் முதலியன குடும்ப அட்டைதாரர்களுக்கு முழுவதும் சீராக வழங்கப் பெற்று வருகின்றன.

திண்டுக்கல் காயிதே மில்லத்மாவட்டத்தில் 1,82,480 குடும்பங்களுக்கு 5 கிலோ வீதம் இலவச அரிசி வழங்கப்பட்டது.

**-எம். அண்ணாமலை,**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டம்.



# கோழி நலத்தில் வடகிழக்குப் பருவக் காற்று

அண்மையில் ஆரம்பித்துள்ள வடகிழக்குப் பருவக் காற்றினால் தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளில் தட்பவெட்ப நிலை மாறுபட்டுள்ளது. இந்த நிலையில் கறிக் கோழிகளும் மற்ற முட்டைக் கோழிகளும் பூசாண நச்சு நோய், காக்சிடியோசிஸ், இ. கோலி நோய்கள், சுவாசக் குழல் நோய் போன்ற சில முக்கியமான நோய்களால் பாதிக்கப்படுகின்றன.

பூசாண நச்சு நோய் கெட்ட தீவன மூலப் பொருட்களால் ஏற்படுவது. தொடர்ந்து மழையினால் ஏற்படும் ஈரப் பதத்தால் பூஞ்சக் காளான் நன்றாக வளர்ந்து தீவனம் மூலம் பொருட்களில் சேருகிறது. தீவனத்தை உலர்ந்த மற்றும் உயர்ந்த இடத்தில் காய வைத்து, ஈரப்பதத்தினால் பாதிக்கப்படாதபடி செய்தால் இந்தக் காளான் வளருவது இல்லை. இந்த நஞ்சினால் ஏற்படும் நோய் காக்சிடியோசீஸ் மற்றும் வேறு சில நச்சுயிர் நோய்களுக்கு முன்னோடியாகத் திகழ்கிறது.

காக்சிடியோசிஸ், வரும் மழைக் காலங்களில் கோழிகளில் ஒரு சாதாரண நோயாகக் காணப்படலாம். இது 22.74 சதம் அளவில் முக்கியமாகக் கறிக் கோழிகளில் காணப்படுகிறது. ஆழ்கூளத்தில் 20 சதத்திற்கு அதிகமான ஈரப்பதம் காணப்படும்போது, காக்சிடியா முட்டைப் பருவம் அபிவிருத்தியாவதற்கு ஏற்றதாக அமைகிறது. நல்ல காற்றோட்டமும், ஒழுகாத கூரையும், ஆழ்கூளத்தில் சுண்ணத்தைக் கலந்து கிளறிவிடுவதும் இந்த ஈரப் பதத்தைக் குறைக்கும். தகுந்த சக்தி வாய்ந்த நோய்த் தடுப்பு மருந்தை ஒரு டன் தீவனத்திற்கு 250 முதல் 500 கிராம் என்ற விகிதத்தில் கலப்பது மிகவும் அவசியம். இந்த மாதிரித் தடுப்பு மருந்துகளை அடிக்கடி மாற்றுவதும் அவசியம். இதற்குக் கால்நடை மருத்துவர்களிடமிருந்து தகுந்த அறிவுரை பெறலாம்.

இ.கோலி நோய்கள் அசுத்தமான தண்ணீரினால் ஏற்படுகிறது. இது 26.37 சதம் கறிக் கோழிகளில் காணப்படுகிறது. தண்ணீரை இ.கோலி கிருமிகளுக்கும், நைட்ரேட் போன்ற பொருட்களுக்கும் அவ்வப்போது பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். 20ppm-க்குக் குறைந்த நைட்ரேட் அளவும், கார அமிலத்தன்மை 6.3-க்குக் குறையாமல் உள்ள தண்ணீரும் சிறந்தது. தண்ணீரில் பிளீச்சிங் பவுடரை 1000 லிட்டருக்கு 5 கிராம் என்ற விகிதத்தில் கலக்கும்போது இந்தப் பிரச்சினை குறையும்.

சுவாசக் குழல் நோய்கள் கோழிகளில் அடர்த்தி அதிகமிருக்கும் இடங்களில் ஏற்படுகிறது. இது 2.17 சதம் காணப்படுகிறது. இதுவும் மழைக் காலங்களிலும், குளிர்க் காலங்களிலும் ஏற்படும் நோயாகும். பல காரணங்களால் ஏற்படும் இந்த நோயைக் கோழியின் அடர்த்தியைக் குறைப்பதாலும், ஆழ்கூளத்தை நல்ல முறையில் வைத்திருக்கும்போதும், கோழிக் குஞ்சுகளை மைக்கோ பிளாஸ்மா இல்லாத தாய்க்கோழிப்பொறிப்பகங்களிலிருந்து வாங்கும்போதும் தடுக்கலாம்.

குஞ்சு வீடுகளில் எதிர்பாராத வகைகளில் குளிர் ஏற்படும்பொழுதும் மற்றும் செயற்கை முறையில் ஏற்படுத்தும் வெப்பம் குறையும் பொழுதும் குஞ்சுகளில் இறப்பு ஏற்படுகிறது. இதற்கு நல்ல வீட்டமைப்பும், பராமரிப்பும் அவசியம். இந்த மழைக்காலப் பராமரிப்பு முறைகளைப் பற்றி இக்கல்லூரியிலிருந்து ஏற்கெனவே விரிவுரை விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

இது, மின் விநியோகம் பாதிக்கப்படும்பொழுது அதிகமாவதால், வேறு சில முறைகளைக் கொண்டு குஞ்சு வளரும் இடங்களில் மாற்று வெப்பத்தை ஏற்படுத்தத் தயாரான நிலையில் இருக்க வேண்டும். இம்மாதிரி குளிர் நிலைகளில், நுரையீரல் அழற்சி மற்றும் சுவாசப்பை அழற்சி போன்ற இ.கோலி கிருமிகளின் பாதிப்பு உடன் ஏற்படும்.

**-டாக்டர் கே.எஸ். பழனிசாமி**
பேராசிரியர்-தலைவர்
கால்நடை நோய் ஆய்வு-தடுப்புத் துறை,
கால்நடை மருத்துவக் கல்லூரி,
சென்னை.



போன்: 2796

ஸ்ரீகந்தவிலாஸ்

No.1 ஸ்பெஷல் பஞ்சாமிர்தம்

ஜவ்வாது வாசனை விபூதி

சிறந்தது

ஸ்ரீகந்தவிலாஸ் விபூதி ஸ்டோர்

சரவணப் பொய்கை அருகில்
புதிய கிளை அடிவாரம்
(சுபம் காம்ப்ளக்ஸ்)
தேர்நிலை எதிரில்
பழனி.

தந்தி: "டிக்கோ" தொலைபேசி எண்: 3239

திண்டுக்கல் பூட்டுத் தொழிலாளர்கள் தொழில் கூட்டுறவுச்சங்கம் லிட்.,
இண்ட். நிர். 150,
திண்டுக்கல்-6.

"தமிழரசு" மென்மேலும் சிறந்து விளங்கிட எங்களது நல்வாழ்த்துக்கள்.

உழைப்பிற்கும், உறுதிக்கும், பாதுகாப்பிற்கும் "டிக்கோ" பூட்டுக்களையே வாங்குங்கள்.

தங்களின் தேவைக்கு அணுகவும்

மா. இராமசுவாமி,
உதவி இயக்குநர்/தனி அலுவலர் (பொறுப்பு)

(தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர், சென்னை அவர்களின் நேரடிப்பார்வையில் இயங்கும் நிறுவனம்)



# நூல் நயம்

## பார்ஸி சமயம்

**ஆசிரியர்: ஸ்ரீகிருஷ்ண தத்தபட்**
வெளியீடு: காந்திய இலக்கியச் சங்கம்
காந்தி மியூசியம்,
மதுரை-625 020

விலை: ரூ.5 பக்கம்: 65

நமது இந்தியாவில் உள்ள பற்பல சமயங்களுள் ஒன்றான பார்ஸி சமயத்தைக் குறித்துப் பல்வேறு தகவல்களை இந்நூல் எடுத்துச் சொல்கிறது.

பார்ஸி சமயம், இந்து சமயத்தினின்று வேறுபட்டது என்ற கருத்து நிலவி வருகிறது. ஆனால், பல்வேறு வகைகளில் இந்து சமயத்திற்கும் பார்ஸி சமயத்திற்கும் ஒற்றுமைகள் காணக் கிடக்கின்றன. பழக்க, வழக்கங்களிலும் சில ஒற்றுமைகள் உள்ளன. பார்ஸி சமயத்தினரும் சூரியனை வணங்குகிறார்கள். கடவுள் ஒருவரே என்ற கொள்கை கொண்டுள்ளனர். கோமயத்தைப் புனிதமாகக் கருதுகின்றனர்.

இது போன்ற பல்வேறு செய்திகள் இந்நூலில் கூறப்பட்டு உள்ளன. மொழிபெயர்ப்பு நூல் என்ற போதிலும் தமிழ்நடை எளிமையாக உள்ளது.

**தமிழ்ப்பித்தன்**

## நாடு போற்றும் நாரண துரைக் கண்ணன்

**ஆசிரியர்:** மு. பரமசிவம்,
**வெளியீடு: கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்,**
**தபால் பெட்டி எண்:501**
**பூங்கா நகர்,**
**சென்னை-600003.**

**விலை: ரூ. 20 பக்கம்: 154**

பத்திரிகை உலகில் ஆனந்தபோதினி, பிரசண்ட விகடன் ஆகிய பத்திரிகைகளுக்குத் தனிச் சிறப்புண்டு. இந்த இதழ்களின் ஆசிரியராக இருந்து, தமிழ் இலக்கியம் வளர்த்த பெருமை பழம்பெரும் எழுத்தாளர் நாரண. துரைக்கண்ணன் அவர்களுக்குண்டு.

அவர், இளம் எழுத்தாளர்களை ஊக்குவித்தவர். காலமெல்லாம் தமிழ் இலக்கியப் பணியிலேயே நேரத்தைச் செலவிட்டு வருபவர். நாடகத் துறையிலும் ஈடுபாடு கொண்டு, சமுதாயச் சீர்திருத்தத்துக்கு வழிகோலியவர்.

அண்ணல் காந்தியடிகள், அமரகவி பாரதி, திரு.வி.க., தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் ஆகியவர்களோடு பழகியவர். விடுதலைப் போராட்டத்திலும் இவரது எழுத்துக்கள் பயன்பட்டிருக்கின்றன.

அன்னாரது தமிழ்ப்பணி, சிறப்பியல்புகள் எல்லாம் நூலில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. நூலாசிரியர் பாராட்டுக்குரியவர்.

—பி.வி. கிரி

## இன்பக் களஞ்சியம்

ஆசிரியர்: வாழியூர் வே. இராசவேலன்
வெளியீடு: பேரரசு பதிப்பகம்
வாழியூர் அஞ்சல்
(வழி) ஒண்ணுபுரம்,
வ.ஆ. 632 315

விலை: ரூ. 11. பக்கம்:102.

பதினைந்து இலக்கியக் கட்டுரைகளின் தொகுப்பு இது.

கம்பன் கண்ட கதிரவன், கம்பராமாயணத்தில் ஊடல் ஆகிய கட்டுரைகள், ஆசிரியருக்குக் கம்பன் மீதுள்ள பற்றினை எடுத்துக் கூறுவனவாக உள்ளன.

இதேபோல சேக்கிழார் பிள்ளைத் தமிழ், இரட்சணிய யாத்திரிகம், சிலப்பதிகாரம், தனிப்பாடல், நாட்டுப்புறப்பாடல் இப்படிப் பல்வேறு கட்டுரைகளின் மூலம் நூல் ஆசிரியர் தம் ஆழ்ந்த புலமையை வெளிப்படுத்துகிறார்.

வேதநாயகம் பிள்ளையின் நகைச்சுவைக் கட்டுரையும், அவரைப் பற்றிய தகவல்களும் நமக்குப் பயன் தருவனவாகும்.

## பிச்சமூர்த்தி கவிதைகள்
## புதுக்கவிதை ஆராய்ச்சி-3

ஆசிரியர்: டாக்டர் ப. லோகநாதன்.
கிடைக்குமிடம்: ஐந்திணைப் பதிப்பகம்,
பாரதியார் சாலை
சென்னை-600 005.

விலை: ரூ.65 பக்கம்:512

தமிழில் புதுக்கவிதைக்கு வித்திட்டவர் மகாகவி பாரதியார். அவருடைய வழியில் வந்தோர் பலர். மணிக்கொடிக் காலத்தில் மலராகி மணம் பரப்பியவர்களுள், ந. பிச்சமூர்த்திக்குச் சிறப்பான இடமுண்டு. அவரது கவிதைக்கு ஒரு கண்ணோட்டமாக விளங்குகிறது இந்நூலின் முதல் பகுதி.

இந்நூலில் மூன்று பகுதிகள் உள்ளன. முதல் பகுதிதான், பிச்சமூர்த்திக் கவிதைகள்; மற்ற பகுதிகள் மண்ணுக்குள் வைரம் - கவிஞர் வல்லம் வேங்கடபதியின் கவிதையை ஆராய்வது; கவிஞர் கலீல் ஜீப்ரானின் கவிதையை ஆராய்வது.

மூன்று பகுதிகளையும் பொதுவாக நோக்குமிடத்து, நூலாசிரியரின் நுண்மாண் நுழைபுலத்தை அறிய முடிகிறது. ஆசிரியர் தாம் மேற்கொண்ட திறனாய்வுப் பணியைச் செவ்வனே செய்திருக்கிறார் என்பது அவரது எழுத்துக்கள் எடுத்தியம்புகின்றன.

ஆராய்ச்சி ஆர்வலர் மற்றும் திறனாய்வு அன்பர்களுக்கு இந்நூல் நல்ல வழிகாட்டியாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

## சமணம்

**ஆசிரியர்: ஸ்ரீகிருஷ்ண தத்தபட்**
வெளியீடு: காந்திய இலக்கியச் சங்கம்
மதுரை - 625 020

விலை : ரூ. 5 பக்கம் : 76

ஏறக்குறைய 2,500 ஆண்டுகளுக்கு முன் பிறந்து, உலகத்தை உய்விக்க வைக்க 12 ஆண்டுகள் கடுந்தவமும் சாதனையும் புரிந்தவர் மகான் மகாவீரர். அவர் உலகுக்கு அளித்த ஜைன தர்மமும், தத்துவார்த்த சூத்திரமும், ஆசாரியர்களின் திருமொழிகளும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

—வி. இராவணன்

WITH BEST COMPLIMENTS FROM

**RAMCO SUPER LEATHERS LIMITED**

LEATHER DIVISION

Vellore - 632 013

WITH THE BEST COMPLIMENTS FROM

**Ramco Super Leathers Limited,**

*(Footwear Division)*

**Bangalore Road**

VELLORE-632 010

With Best Compliments From

**DHANAPATHI MOTOR TRANSPORT**

Vellore - 632 004

WITH BEST COMPLIMENTS FROM

**A. Rafeeq Ahmed & Co.,**

VELLORE-632 008

துவக்கம்: 1918

தொலைபேசி எண்: 2233

**எ.331 பழனி கூட்டுறவு நகர வங்கி**

தபால் பெட்டி எண்: 44

**பழனி**

பழனி மாநகரில் முதன்முதலில் மக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட வங்கி பழனி கூட்டுறவு நகர வங்கி.
'பாதுகாப்புப் பெட்டக' வசதியுள்ள வங்கி.
பிற வணிக வங்கிகள் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளைவிட, எல்லா வகையான டெபாசிட்டுகளின் பேரில் 1 சதவிகித அதிக வட்டி தரும் வங்கி.
கடந்த ஐந்து வருடங்களாகப் பங்குத் தொகைக்குத் தொடர்ந்து 15 சதவிகிதம் டிவிடெண்ட் வழங்கி வரும் வங்கி.
சிறுதொழில், வியாபாரம் மற்றும் நலிவுற்றோர் தொழில் அபிவிருத்திக்காகக் குறைந்த வட்டியில் கடன் வழங்கி வரும் வங்கி.
பழனி முருகன் கோவில் அமையப்பெற்ற அடிவாரத்தில் அழகான 'கூட்டுறவுப் பூங்கா' வங்கியினால் பராமரிக்கப்பட்டு வருகிறது.
டெபாசிட்டுகளுக்கு டெபாசிட் இன்சூரன்ஸ் மற்றும் கிரடிட் கியாரண்டி கார்ப்பரேஷனில் காப்பீடு செய்யப்பட்ட வங்கி.
தணிக்கையில் தொடர்ந்து 'ஏ' வகுப்பாகத் தரம் பிரிக்கப்பட்டு வரும் வங்கி.
பழனி கிளியரிங் ஹவுசில் முழுநேர அங்கத்தினராகவுள்ள வங்கி.
தமிழ்நாடு மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களிலுள்ள எல்லா ஊர்களுக்கும் மிகக் குறைந்த செலவில் டிராப்ட் வழங்கும் வங்கி.
தமிழ்நாட்டின் சிறந்த கூட்டுறவு நகர வங்கியாக 1987-88-இல் தேர்ந்தெடுக்கப்பட்ட வங்கி.

**எஸ். சேதுராமன், பி.ஏ.,**
கூட்டுறவு சார்பதிவாளர்/தனி அலுவலர்
மற்றும் வங்கிப் பணியாளர்கள்



# சமுதாயத்தின் தேவையை நிறைவு செய்வது கல்வி

## மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன்



"இருபதாம் நூற்றாண்டு-இந்த நாட்டைப் பொருத்த வரையில் துறைகள் தோறும் உறக்கம் நீங்கிடப் 'பள்ளி எழுச்சி' பாடிய நூற்றாண்டு. பல துறையிலும் மறுமலர்ச்சி விளைவித்து வரும் நூற்றாண்டு. இந்த நூற்றாண்டில்-புதிய சிந்தனைக்குத் தூதுவனாகத் தோன்றிய கவிஞனே-தேசியக்கவி பாரதி. "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்று அவர் தமிழ் மொழியின் தனி உயர்வைப் பாடினார். தமிழ்ப்புலவர்களின் ஈடில்லாச் சிறுப்பினைப் போற்றினார். செந்தமிழ்நாடு என்னும் போதே, அவர் சிந்தை எல்லாம் தேனாக இனித்தது, அவர் தமிழ்ச் சமுதாயத்தைக் காண்கிறார்-அவர்தம் நிலை கண்டு இரங்குகிறார்; கவலை கொள்கிறார். தமிழ்நாட்டார் மொழிப் பற்றற்ற கூட்டமாய்ப் பிழைப்பு நாடியே எதையும் ஏற்கும் மதியிலிகளாய்த் தெளிவற்ற குழப்பத்தில் உழல்வதைக் கண்டு மனம் கொதிக்கிறார்! அந்த நிலையைத் 'தமிழ்த்தாய்' உகுக்கும் கண்ணீராக உணர்த்தினார்."

"இன்றொரு சொல்லினைக் கேட்டேன்! இனி
 ஏது செய்வேன்! என தாருயிர் மக்காள்!
கொன்றிடல் போலொரு வார்த்தை - இங்கு
 கூறத்தகாதவன் கூறினன் கண்டீர்.
புத்தம் புதிய கலைகள் - பஞ்ச
 பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்;
மெத்த வளருது மேற்கே! அந்த
 மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை.

சொல்லவும் கூடுவதில்லை - அவை
 சொல்லும் திறமை தமிழ்மொழிக் கில்லை;
மெல்லத் தமிழினிச் சாகும் - அந்த
 மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்
என்றந்தப் பேதை உரைத்தான் - ஆ!
 இந்த வசை எனக் கெய்திடலாமோ!
சென்றிடுவீர் எட்டுத் திக்கும் - கலைச்
 செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச்
 சேர்ப்பீர்!"

என்றாள் தமிழன்னை - பாரதியின் மூலம்.

தொன்மையும் பெருமையும் வாய்ந்த தமிழ் அன்னைக்கு உற்ற அவலம் - "மேற்குத் திசையில் வளர்ந்த அறிவியல் கலைகள் தமிழில் ஆக்கம் பெறாமையால், மக்கள் தமிழைக் கைவிடுவர் - மெல்லத் தமிழ் இனி மறையும்" என்று ஒருவன் கூறக் கேட்டதால் விளைந்தது. எழுபதாண்டுகட்கு முன் உணர்ந்து கூறிய அந்த நிலையை இன்றவும் மாற்றிடவில்லை என்றெண்ணும் போது நமது குறை தெளிவாகிறது. அந்த வழியில் அரும்பிய முயற்சிகள் - இடையறுபட்டுத் தொடரப்படவில்லை.

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
 தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்!
இறவாத புகழுடைய புது நூல்கள்
 தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்!"

என்னும் பாரதியின் வேண்டுகோளை நிறைவேற்றினாலன்றித் தமிழ்மொழி ஆக்கம் தளர்வடையத்தான் செய்யும்!"

**TNPSC** விளம்பர எண். 66

## தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

தமிழ்நாடு பொதுப்பணியில், தமிழ்நாடு தலைமைச் செயலகத்தில் ஒரு நூலகர் (Librarian) பதவிக்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்ய விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. (நியமன ஒதுக்கீட்டு விதிகள் இத்தேர்விற்குப்பொருந்தாது)

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூ.2,200-75-2,800-100-4,000

**வயது:** 30 வயதிற்குக் குறைவாக

**தகுதி:**

(a) A degree

and

(b) A degree in Library Science or Library and Information Science;

and

(c) Experience for a period of not less than five years in maintenance and up-keeping of a Library.

**இறுதி நாள் : 8.1.1989 அன்று மாலை 5.30 மணி**

**வயது வரம்பு : 1.7.1989 அன்றுள்ளபடி**

ஆதி திராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்பட்ட வகுப்பினர்/சீர் மரபினர், பிற்பட்ட வகுப்பினர், ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் ''பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்'' தரப்பட்டுள்ளன. (பிற்பட்ட வகுப்பினருக்கு அளிக்கப்படும் அனைத்து சலுகைகள் யாவும் மிகவும் பிற்பட்ட வகுப்பினர்/சீர் மரபினருக்கும் பொருந்தும்)

விண்ணப்பப் படிவமும் நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு, செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-2 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.12.1989 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10/-) சென்னை, அண்ணாசாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் (State Bank of India) ஏதாவது ஒரு கிளையில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக்கூடிய 1.12.1989 அன்றோ அல்லது அதற்குப்பிறகு வாங்கப்பட்ட சென்னை-6 00006 ஆயிரம் விளக்கு பாரத ஸ்டேட் வங்கியில் செலுத்தத்தக்க பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10/-) ''கேட்புக் காசோலை'' (Demand Draft) யுடன் சுய விலாசம் எழுதிய உறையுடனும் (26 × 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிறமொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழிபெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப் படமாட்டா.

DIPR/2619/MS/89





''காரிருளில் நடப்பவன் பெற்ற கைவிளக்கு கல்வி. கல்வியினால் பெறும் அறிவின் வகை, எழுஞாயிற்றின் கதிரெனப் பல திசையிலும் விரிவது, வளர்வது, பலவற்றையும் புலப்படுத்துவது, அந்தக் கதிர்களில் ஒருவன் கண்கொள்ளும் அளவே, பார்வை செல்லும் அளவே ஒருவன் வாழ் நாள் எல்லாம் பெறலாகும் அறிவு. எனவே தான் வாழ்நாளின் பெரும்பேறு - இறுதிநாள் வரை கல்வி அறிவைத் தேடுவதே என்பேன்.''

''கல்வியில் - தாய்மொழியே தலைமை பெறுவது, தாய் மொழியில் பிறக்கும் தெளிவான சிந்தனை பிறமொழியில் பிறத்தல் எளிதன்று. இளம் உள்ளங்கட்கு அறிவூட்டும் இயல்பான வழி, தாய்மொழி மூலம் வழங்கப்படும் பயிற்சியே. இது குறித்து இரண்டு கருத்துக்கு இடமில்லை. ஆனால் சூழ்நிலையின் தாக்கத்தாலும், வரலாற்றுக் கட்டாயத்தாலும், காலத்தின் போக்காலும், அறிவியலின் விரைந்த வளர்ச்சியாலும் ஆங்கில மொழியின் துணையை நாடுவோராகி, அதனையே உயர்கல்வியின் பயிற்று மொழியாக நீடித்துக் கொண்டுள்ளோம்.

''நமது இந்தியத் திருநாட்டின் பல்வேறு மொழி பேசும் மக்களுடனும், உலக நாட்டவருடனும் தொடர்பு கொள்வது அன்றாடத் தேவையாகியுள்ள நிலையில் - ஆங்கில மொழியின் பயனையும் சிறப்பையும் நாம் உணர்கிறோம். தாய்மொழிப் பயிற்சியுடன் ஆங்கில அறிவும் தேவை என்பதை ஏற்பதாலேயே, எதற்கு முதன்மையளிப்பது - தலைமை வழங்குவது என்பதில் குழம்புகிறோம். மேலும் - இந்திய நாட்டின் அமைப்பில், வாழ்க்கைப் போட்டி மிகுந்து வரும் நிலையில், அந்தப் போட்டியில் தலை தூக்க ஆங்கிலத்தை கைக்கொள்ளும் மனப்பான்மைக்கு ஆளாகிறோம்! ஆங்கிலத்தை ஆற்றலோடு பயன்படுத்தும் திறமை தேவை என்பதற்காக - அறிவியல் துறையில், கல்வியை ஆங்கிலத்திலேயே பயில விழைகிறோம்! அதனால் அறிவியல் கல்வியினால் பெறும் அறிவே கூட நாட்டு மக்களிடமிருந்து விலகி நிற்கிறது. அதன் பயன் - நேரடியாக மக்களைச் சென்றடைவது தடைப்படுகிறது என்பதுடன், அறிவியல் பட்டம் பெற்ற இளைஞர்களே கூட, அறிவியலில் புதுமை காணும் ஆற்றல் கொண்டவர்களாக வளர்வது அரிதாகிறது. இவற்றை எல்லாம் எண்ணித் தெளிவோர், ஆங்கிலத்தின் துணையைக் கை விடாமல் - தாய்மொழியில் அறிவியல் பயிற்சியை வளர்ப்பதற்குத் திட்டமிட்டுப் பணியாற்ற வேண்டும் என்பது நாட்டின் தேவை என்பேன்.''

''தாய்மொழிப் பற்று உலகோர்க்கு இயற்கை. அது குறுகிய நோக்கமன்று; பிறமொழி வெறுப்பன்று. பிறமொழி அறிவும் ஆற்றலும் தாய்மொழியின் உரிமை நிலைக்கு ஊறு செய்யாத நிலையில் இடம் பெறலாம். ஆனால் வேற்று மொழியின் ஆதிக்க நிலையும் ஆட்சி மொழி நிலையும், தாய்மொழி வளர்ச்சிக்குத் துணையாகாது என்பது மட்டுமல்ல, வளரும் வாய்ப்பினையே கூடத் தடுக்கும். அதுவும் உரிமைத் தெளிவு அற்ற மக்களிடம், வேற்று மொழி மயக்கம் வளர ஏதுவாகும். அதுவே இந்நாள் நிலை என்பேன். மக்கள் பசிமாற்றும் நெல் விளையும் வயலில் களை வளர இடமளிக்கலாமோ? பயன் அளவு கருதி, ஊடு பயிராக வேறு பயிர் இடம்பெறும் வகையில், வேற்று மொழிக்கும் இடமளிக்கலாம். வேற்றுமொழி பெறும் இடம் நாட்டுமொழிக்குரிய இடத்தையும் பயன்பாட்டையும் குறைத்தலாகாது.''

''இயல், இசை, கூத்து என்னும் முத்தமிழ் வடிவாய் முகிழ்த்த மூத்தமொழியின் பகுதிகளான இசையும் கூத்தும், நாளடைவில் உருக்குலைந்து வேறு வண்ணம் பூசிக் கொண்டது போலன்றி, இயலொன்றுதான் தமிழர் நாகரிகத்தின் தனிச் சுவடுக்குச் சான்றாக இன்றளவும் நின்று நிலவுகிறது. பலநூறு ஆண்டு நிலைத்திருக்கும் அடையாறு ஆலமரம், அண்மைப்புயலில் சாய்ந்த போதிலும், தகுந்த முயற்சியால் நிமிர்த்தப்பட்டு நிலைநிறுத்தப்பட்டுள்ளது போன்று தமிழ்மொழியும் -பிறமொழி ஆதிக்கப் புயலில் வீழ்த்தப்பட்டுக் கிடந்த காலத்தில், தமிழகத்திற்கு வந்து சேர்ந்த -மேல் நாட்டு நல்லறிவாளர்களான பர்த்தலோமியூ, சீகன் பால்கு; தத்துவ போதகர் என்னும் ராபர்ட் டி நொபிலி; வீரமாமுனிவர் என்று பெயர்பூண்ட கான்ஸ்டான்டைன் பெஸ்கி; திராவிடமொழிகளின் ஒப்பியல் மொழிநூல் வரைந்த - டாக்டர் கால்டுவெல்; திருக்குறளும் திருவாசகமும் உலகறியச் செய்த - டாக்டர் ஜி.யூ. போப் முதலான தொண்டுணர்வும் நடுநிலை மனப்பான்மையும் கொண்ட பாதிரிமார்கள் - தமிழ்மொழியின் உயர் தகுதிக்குச் சான்று பகர்ந்தமையினால் - தாழ்வு நிலைக்குத் தள்ளப்பட்டிருந்த தமிழ்மொழி

TNPSC

# தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

தேர்வாணையத்தால் 15.11.89 மற்றும் 16.11.89 நாட்களில் தமிழ்நாடு புள்ளியியல் பணியில் புள்ளியியல் உதவி இயக்குநர் பதவிக்கு நடத்தப்பட்ட முதன்மை எழுத்துத் தேர்வு (Main Written Examination) முடிவின் அடிப்படையில் தற்காலிகமாக நேர்முகத் தேர்வுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களின் பதிவெண்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. நேர்முகத்தேர்வு 22.12.89 அன்று அண்ணாசாலை, அரசினர் தோட்டத்திலுள்ள தேர்வாணைய அலுவலகத்தில் நடைபெறும். நேர்முகத் தேர்வுக்கான நாள் மற்றும் நேரம் ஆகியன குறித்த விவர அறிவிப்பு விண்ணப்பதாரர்களுக்கு தனித் தனியே உரிய நேரத்தில் அனுப்பப்படும். இப்பட்டியலில் இடம்பெறாத பதிவு எண்களையுடைய விண்ணப்பதாரர்கள் நேர்முகத்தேர்வுக்கு அனுமதிக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றனர்.

10 11 15

செயலாளர்

DIPR/2643/MS/89/IM



நல்வாழ்த்துக்களுடன்!

## சீகால்ஸ் லிமிடெட்

ஹீட் ரெஸிஸ்டெண்ட், கொரோஷன் ரெஸிஸ்டெண்ட், ஸ்டெயின்லஸ் ஸ்டீல் காஸ்டிங்ஸ் தயாரிப்பாளர்கள்.

*பதிவு அலுவலகம்:*

நெ.8 ரட்லண்ட் கேட் 4-வது தெரு, சென்னை-600 001.
போன்: 471414/475867
டெலக்ஸ்: 041.7792 SCAL IN டெலிகிராம் - CASTTOOLS

**தொழிற்சாலை:**

மனை எண் - 31 & 32 சிப்காட் தொழிற்பேட்டை,
இராணிப்பேட்டை-632 403
வட ஆர்க்காடு அம்பேத்கார் மாவட்டம்
போன்: 4230/4256
டெலக்ஸ் - 0402.245 SCAL IN டெலிகிராம் - CASTTOOLS




தலை தூக்கும் வழி பிறந்தது என்பேன். இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் ஏற்றம் பெறும் சூழ்நிலை வளர்வதற்குக் கால்கோள் நிகழ்த்திய அந்த மேனாட்டு அறிஞர்கட்கு நாம் நன்றிக் கடப்பாடுடையோம். அவர்தம் அரும்பணியே தமிழ் மக்கள் தம் தாய்மொழியிடம் நன்மதிப்பும் பற்றும் கொள்ள ஏதுவாயிற்று. இந்த நாளில் - தமிழ் வளர்வும் - தமிழால் தமிழ் மக்களின் அறிவுத் தேவையை நிறைவு செய்யவும், தகுதிசான்ற அறிவியல் வல்லார், உறுதிகொள்ள வேண்டுகிறேன்.

கல்வி - என்பது அறிவுக்குத் தரும் பயிற்சியே, கண்டு கேட்டு, எண்ணி, அறிந்து, தொகுத்து, வகுத்து, நன்மை தீமை தெளிந்து, நினைவில் நிறுத்தி, செய்யத்தக்கதும் அல்லதும் துணிந்து நடைபோட்டிடத் துணையாவதே கல்வி. அதற்கான பயிற்சி சிறப்பது கல்லூரியில். மனிதனின் மூளை ஆற்றல் நிறைந்தது. அதைப் பயன்படுத்தும் வாய்ப்புப் பெற்றால்தான், அதன் திறமையின் சில கூறுகள் வெளிப்பட்டுப் புலனாகும். பயன்படுத்தும் முயற்சியே நிகழாதபோது - மூளை முடங்கிக் கிடக்கும். பெருஞ் செல்வக் குவியல் ஆனாலும் கண்டெடுக்கப்படாத புதையலாகவே மூளை பயனற்றுப் போகும். அந்த அறிவைப் பலதுறைகளிலும் பயன்படுத்திடும் வாய்ப்பினை அதிகப்படுத்துவதே கல்லூரிக் கல்வியின் சிறப்பாகும். இசைக்கான குரல் வளனும், ஓவியத் திறனும், நடிப்பாற்றலும் நினைவுக்கூர்மையும், வருணிக்கும் திறனும், பேச்சாற்றலும், கவிதை பொழியுந்திறனும், கணித மேதைக்கான வல்லமையும், ஆய்வுத் திறனும், புதியது காணும் ஆற்றலும் - இப்படிப்பட்ட பல்வேறு திறமைகளுள் ஏதொன்றிலேனும் ஒரு இளைஞன் - திறமை கொண்டவனாக இருப்பான். அப்படிப்பட்ட மூளைத் திறனை வெளிப்படுத்தும் வாய்ப்பினை வழங்குவது கல்விப் பயிற்சி."

"கல்வி - காலத்தால் விரிந்தது மட்டுமன்றிச் சமுதாயத்தின் தேவையை நிறைவு செய்வதற்குரிய மூலக் கருவியாக விளங்குவதால், அதன் நோக்கமும் - பயனும் பலதிறப்பட்டதாக வளர்ந்துள்ளது. மக்கள் பெருக்கத்தாலும், நாகரிக வழிப்பட்ட வாழ்க்கை முறையாலும், மக்களின் தேவை நாளுக்கு நாள் வளர்கிறது. அதை ஈடுகொடுத்துத் தாங்கும் ஆற்றலை, அறிவியல் வழியான தொழில் நுட்பக் கல்வியால்தான் அடைய முடியும். வளர்ந்த நாடுகளில் வாழும் மக்களின் நாகரிக நிலையை, நாம் எய்த வேண்டும் என்று கருதாவிடினும், நமது நிலை உயர்ந்தாக வேண்டும் என்பதை அனைவரும் ஒப்புவர். அதற்கு மனித வள மேம்பாடு காண வழிசெய்யும் ஆற்றலை வளர்க்க 'கல்வி பயன்பட்டாக வேண்டும்; அதற்கேற்ப வளர்க்கப்படவும் வேண்டும்."

"மக்களின் அறியாமை இருளை அகற்ற, வறுமையை விரட்ட, தொழில் திறனையும் நாட்டு வளத்தையும் பெருக்க, குடியாட்சியின் கடமையைத் தெளிந்து நிறைவேற்ற, சமுதாயக் கேடுகளையும் அநீதிகளையும் மாற்ற, இளைஞர்கள் தன்னம்பிக்கை கொள்ள, அவர்களிடம் தன் முயற்சி வளர, முடைநாற்றம் வீசும் மூட நம்பிக்கைகளிலிருந்து விடுபட, சமுதாய வாழ்வில் புதிய எழுச்சியும் மறுமலர்ச்சியும் விளைந்திட - கல்வி - ஏற்றதொரு கருவியாகப் பயன்பட வேண்டும்.

*எத்தனை வயது மனிதன் வாழ்ந்தான் என்கிறது, அந்தக் கணக்கை வைத்துப் பார்ப்பதல்ல; அவன் மறைந்த பிறகும் உலகம் எவ்வளவு காலத்திற்கு அவனை நினைவில் வைத்துக்கொண்டிருக்கிறதோ-அவ்வளவு காலத்திற்கு அவன் வாழ்கிறான்.*

*- முதல்வர் கலைஞர்*

'உன்னை நீ உணர்க' 'Know thyself' என்று அறிவுறுத்தினார் ஏதென்ஸ் நாட்டுச் சிந்தனைச் சிற்பி சாக்ரடீஸ். நீ அறிந்திருப்பவை எவை? அறியாதவை எவை? உண்மை எது? அல்லாதது எது? நிலைப்பது யாது? ஒழுக்கம் எதற்காக? என்பன போன்ற - அறிவின் கேள்விகட்கு அவரவரும் விடைகாணும் முயற்சியே - தன்னை உணர்ந்திடும் வழியாகும். ஏன்? எப்படி? எதனால்? என்னும் கேள்விகளை எழுப்பி விடை காண்பதே அறிவின் அடிப்படை. அதன் தொடர்ச்சியே அறிவியல் உண்மைகளைக் காணும் ஆற்றலைத் தருவது. அந்த ஆற்றலே இன்றையச் சமுதாயச் சிக்கல்களைத் தீர்க்கும் வல்லமையை வழங்கும். எனவே இன்றைய இளைஞர்கள் அறிவியல் தொழில் நுட்பக் கல்வியில் ஆர்வம் கொள்வது நாட்டின் தேவையேயாகும். அதனால் கலை இயல் பாடங்கள் பயனற்றவை என்று கருதி விடலாகாது.

உள்ளத்தில் ஊறும் உணர்வுகளை ஒழுங்குபடுத்திடவும், மன அதிர்ச்சிகளைத் தாங்கிக் கொள்ளவும், மனித உணர்வுகளை விளங்கிக் கொள்ளவும், மனிதத் தன்மையைக் காத்துக் கொள்ளவும், நாட்டின் பண்பாட்டைக் காத்திடவும், மனித உரிமை உணர்வை வளர்த்திடவும் கலை இலக்கியத் துறை ஈடுபாடு துணையாகும். நாடுகளிடையே வளரும் போட்டியில், நம்நாடும் மக்களும் ஆற்றல் உடையவர்களாக முன்னேற அறிவியல் தொழில்நுட்பப் பயிற்சியே துணையாகும்."

"நாம் பெறும் கல்வி நமதுள்ளத்தில், தெளிவான கொள்கையை, கோட்பாட்டை உருவாக்க வேண்டும். படிப்பதற்கும் நடப்பதற்கும் இடையில், பேச்சுக்கும் செயலுக்கும் இடையில் -வேறுபாடு மட்டுமல்ல, முரண்பாடே நிலவுகிறது. நாம் உண்மை என்று அறிந்ததை நாமே பின்பற்றுவதில்லை. அந்த நிலைமையையே நாம், சமுதாயத்திற்கு ஏற்புடைய நடைமுறை என்று கருதிக் கொள்கிறோம். நமது மனச்சான்று உறங்குகிறது. உண்மையை நிலை நிறுத்தும் ஆர்வம் பிறக்கவே இடமில்லாமல் போகிறது.







*வாழ்க்கையின் ஒவ்வொரு அங்கத்திலும் இன்று திறமை தேவைப்படுகிறது. அறிவு அவசியமாகிறது. தகுதி முக்கியமாகக் கருதப்படுகிறது. தகுதி, திறமை, திட்டமிடும் வன்மை எதையும் திருத்தமாக, தெளிவாக முடித்திடும் ஆற்றல், ஆராயுந்திறன் இன்றைய மனிதனுக்குத் தேவை.*

**– முதல்வர் கலைஞர்**

'சத்தியமே கடவுள்' - என்று தெளிந்து உணர்த்திய காந்தி அடிகள், அவரது மனச்சான்று உணர்த்தும் வழியே நடந்து உலகுக்கே வழிகாட்டிய உத்தமரானார். நம்முடைய சமுதாயமோ - மனச்சான்றைப் புறக்கணித்து, உண்மையை ஒதுக்கிவைத்தே காலமெல்லாம் பழகிவிட்டது.

அதனால்தான் உயர்ந்த நெறியும், அறவழியும் பலப்பல அறிஞர்களாலும் புலவர்களாலும் உரைக்கப்பட்டதாயினும், அவை நடைமுறைக்கு வரவில்லை என்பேன். சமுதாய நிலையில் தொடர்ந்து ஏற்பட்டு வந்த வீழ்ச்சியும் அதற்குக் காரணமாகலாம். எடுத்துக்காட்டாக இதனைக் குறிப்பிடுவேன்.

பிறப்புவழி உயர்வு தாழ்வு கற்பிக்க இடனாகும் சாதியையும், தீண்டாமையையும் பகுத்தறிவாளர் மட்டுமல்ல, சமயச்சீலரும் ஏற்கவில்லை.

**'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'**
**என்றார் திருவள்ளுவர்;**
**'யாதும் ஊரே யாவரும் கேளிர்'**
**என்றார் கணியன் பூங்குன்றனார்;**
**'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'**
**என்றார் திருமூலர்,**
**'சாதி இரண்டொழிய வேறில்லை'**
**'இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்'**
**என்றார் ஔவையார்.**

இவையெல்லாம் தமிழ் மண்ணில், குடிவழிப்பட்ட குலப்பெருமை பேசி தனித்தனிப் பிரிவாகப் பல குழுக்களாக வாழத் தலைப்பட்டிருந்த மக்களிடம், பிறவியிலேயே மேல் வருணம் கீழ் வருணம் உண்டென்ற தோல்வருணம் காட்டி நால்வருணக் கொள்கை புகுத்தப்பட்ட காலத்திலேயே எழுந்தவையாம். எனினும் சமய உணர்வுடன் வருண தருமம் ஊட்டப்பட்டதால், தமிழ் மக்களிடையே பிறவி அடியாகக் கற்பிக்கப்பட்ட சாதி ஏற்றத் தாழ்வு மனப்பான்மை வேரூன்றலாயிற்று."

"நல்லறிஞர் எவரும் ஏற்காத 'சாதி' எண்ணம் இன்னும் நீடிப்பதேன்? இப்படிக் கேட்பதால், தாழ்த்தப்பட்டோர்-பின்தங்கியோர்-மிகவும் பின்தங்கியோர் ஆகிய வகுப்பார்-பல தலைமுறைகளாகப் பாதிக்கப்பட்ட சூழ்நிலையில் தள்ளப்பட்டோர், தமது உரிமைகளைப் பெறுவதற்குரிய வழியாகப் பல துறையிலும், அவர்களது சாதி அடிப்படையில் இட ஒதுக்கீடு செய்திருப்பது இதற்கு மாறானது ஆகாது. நியாயம்; நடுவுநிலையுடைய செயல் என்பதை நான் அறிவேன். சமூக நீதி காக்கப்படுதற்கு அது தவிர வேறு வழி இல்லை, என்பது மட்டுமல்ல-அது, பாதிக்கப்பட்ட மக்களின் உரிமையுங்கூட. அதன்படி ஒதுக்கீட்டில் இடம்பெற சாதிப்பெயர்-குலப்பெயர் எதுவென்று குறிப்பிட வேண்டியுள்ளதே எனில், சாதியும்-தீண்டாமையும் உள்ளவரையில் அதைத் தவிர்க்க முடியாது. மாறாக மறைத்துக் கொள்ளச் செய்வதால் மட்டும் யாருக்கும் நன்மை இல்லை. புண்ணை மறைத்துக் கொள்வதாலோ-அதன் நாற்றத்தை மாற்றிடப் புனுகு பூசுவதாலோ- புண் ஆறிவிடாது. மாறாக, சமூகநீதிக்கான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதால்-சமத்துவச் சூழல் உருவாக்கப்படும்போது-சாதி வேற்றுமை உணர்வு நீங்கிடத் துணையாகும் என்பதில் ஐயமில்லை."

"நாம் கற்றறிந்த உண்மைகளை நிலைநாட்டும் ஆற்றல்-உள்ளத்து உறுதி நம்மிடம் இல்லை. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் குற்றம் செய்யவில்லை எனினும், உள்ளம் அறிந்த உண்மையை நடைமுறையில் வலியுறுத்த நாம் முயற்சிக்கவில்லை. உலகத்தோடு ஒட்ட ஒழுகல்-என்று இந்தப் போக்கைக் கருதலாகாது. உண்மையை நிலைநிறுத்துவதற்கு உரிய விலையைத் தரவும் இழப்பை ஏற்கவும் இளைஞர்கள் துணிய வேண்டும். உண்மையான, உளமொத்த காதல் கொண்ட இருவேறு சாதி மதங்களைச் சேர்ந்த காதலர்-தமது பெற்றோரும், உற்றாரும், சமுதாயமும் கண்டித்தாலும்-தமது சொத்து சுகம் யாவும் இழக்க நேரிட்டாலும், காதல் மணத்தை உறுதிப்படுத்தத் தயங்குவதில்லையன்றோ! அது அவர்தம் மன உறுதியின் வலிமைக்கு மட்டுமன்றி, சாதியின் பொய்மைக்கும் சான்றாவது அன்றோ! ஆக நாம் தெளிவாக உணர்ந்த உண்மையை-சமுதாய நன்மைக்கான கொள்கையை-நாமே கைவிடலாகாது. மாறாக அறிந்து தெளிந்த உண்மைகளை ஒதுக்கி, சமுதாயப் போக்கில் நாம் மூழ்கிப் போனால்-புதிய சமுதாயத்தைப் படைக்கும் ஆற்றல் பிறக்காது. புதியதோர் சமத்துவ உலகும் தோன்றாது. கல்வியினால் பெறும் அறிவு, உண்மை எது வென்று தெளியும் திறம் மட்டுமின்றி, அதில் உறுதியும் கொள்ளச் செய்யவேண்டும். அந்த உண்மை வெற்றி பெறவும், சமூகநீதி நிலைபெறவும் தமது கடமையைச் செய்யும் ஆர்வத்தையும் தரவேண்டும். அப்பொழுதுதான் 'வாய்மையே வெல்லும்' என்பது மக்களால் உணரப்படும். மக்களும் உண்மைக்கும் நீதிக்கும் துணைநிற்பர். குடியாட்சியின் குறைகளும் நீங்கும். கற்ற கல்வியின் பயன் அதைப் பயன்படுத்தும் திறத்தில்; மனிதனின் வல்லமை அவனது அறிவாற்றலில்; அந்த அறிவாற்றல் காலத்தின் விளைவையும் போக்கையும் தெளியும் திறத்தில். எனவேதான்-பயின்று பட்டம் பெறும் மாணவர்கள்-காலத்தைத் தெளிந்து-சமுதாய நன்மையை உணர்ந்து-தங்கள் ஆற்றலைப் புலப்படுத்தும் முயற்சி உடையராக விளங்க வேண்டும்."

**-(13-11-89 அன்று அண்ணாமலைப் பல்கலைக் கழக ஐம்பத்தேழாவது பட்டமளிப்பு விழாவில் ஆற்றிய உரையிலிருந்து)**

TEL: ROJA PHONE: 4263 / 4417

127082

சென்னை 600 008

# ரோஜா பாக்கு

# ROJA SUPARI

N.V.K.M. & SONS LIMITED,
DINDIGUL-624 001.

"தமிழுக்கு அமுதென்று பேர்
இன்பத்தமிழ்
இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"

"ஆடைக்கு அழகென்று பேர்
புது ஒளி வீசும்
பலவண்ணப்பட்டாடைகளுக்குத்தான்...."

ஹலோ: 21054

## வெல்லூர் சில்க் ஹவுஸ்

12, பில்டர் பெட் ரோடு,
வேலூர்,
வட ஆர்க்காடு-அம்பேத்கார் மாவட்டம்

**துணை நிறுவனம்:**
ஹலோ: 25054,
"விசித்ரா" ரெடிமேட் உலகம்,
வேலூர்,
வட ஆர்க்காடு- அம்பேத்கார் மாவட்டம்

## நற்செய்தி

தமிழக அரசு ஊழியர்களுக்கு மட்டும்
புக்கிங் இல்லாமல் தவணை முறையில்

**HERO HONDA**
**HERO PUCH**
**HERO MAGESTIC**

(Panther, Anklir) இரண்டு சக்கர வாகனங்கள்
கிடைக்கிறது விவரங்களுக்கு அணுகவும்

*வட ஆர்க்காடு-அம்பேத்கார் மாவட்டம் மற்றும்
திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம்
அங்கீகரிக்கப்பட்ட டீலர்.*

**Ganesh Motors**
5, New Katpadi Road,
Vellore-632 004
Phone: 24383

WITH THE BEST COMPLIMENTS FROM

KAL

## KAL AUTO
3 Wheelers

(Diesel-Petrol)
KALJUMBO SIX SEATER
**KAL NEW LOOK**
KAL DELUXE KAL TUSKER KAL HIPPO
KAL DELIVERY VAN KAL REAR ENGINE
KAL 175 AND KAL CHASIS

**LESS INVESTMENTS - MORE EFFICIENCY**
**KAL CARRIERS MORE - EARNS MORE**

*AUTHORISED DEALER:*
**ROYAL ASSOCIATES:**
29/1, ARCOT ROAD,
VELLORE. 632 004
Phone: 27501
NORTH ARCOT — AMBEDKAR DISTRICT

**BOOKING STARTED FROM 1.11.89**

MANUFACTURERS: KERALA AUTOMOBILES LIMITED - TIRUANDRUM

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

அதி நவீன பாலியெஸ்டர் வகைகள்



உங்கள் மனதைக் கவர்ந்தவை மலர்கள்.
அவைகளின் அற்புத வண்ண ஜாலங்களை
உங்களுக்கு கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது,
மிக நவீனமாக அழகு மிளிரும்
பாலியெஸ்டர் புடவை வகைகளில்!


கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் —
உங்கள் இனிய நேரங்களில்!

## கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

• புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு • ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங்
• பெட்ஷீட்கள் • டவல்கள் • வேட்டிகள் • லுங்கிகள். இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.

DIPR/1766/MS88/HTA



மேதகு குடியரசுத் தலைவர், குடியரசுத் துணைத் தலைவர் ஆகியோருடன் மாண்புமிகு பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்களும், துணைப் பிரதமர் திரு. தேவிலால் அவர்களும் மத்திய அமைச்சர்களும்.